11
காவே
கர-புரட்டாசி
SEPTEMBER-195
8/

வெகுநாள் நீடித்து இருப்பதற்காக

ஏஸிஸி சிமெண்டால் கட்டப்பட்டது



தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

SISTA'S-CMI-31-TAMIL

நீங்கள் இன்று உங்கள் பற்களை **மக்ளீன்** செய்தீர்களா ?

அவள் செய்து தானிருக்கிருள். அவளது பிரகாசமான புன்னகையைப்பாருங்கள்! பளபளப்பும், ஆரோக்கியமும் மிளிரும் பற்களை பாருங்கள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையால் தினமும் இரண்டுதரம் அவள் சுத்தம் செய்து கொள்ளுகிருள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும், பற்களை வெண்மையாகவும், ஒரே சமயத்தில் விளங்கும்படி செய்கிறது. அதனுல்தான் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான புத்திசாலிதாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு தடவை மக்ளீன் பற்பசையினுல் பற்களை சுத்தம் செய்யும்படி கூறுகின்றனர்.

"நான் எப்பொழுதும் மக்ளீன்ஸ் உபயோகிக்கிறேன். ஏனெனில் அது என் பற்களை வெண்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது என்று என் தாய் சொல்கிருள்."

இன்றே **மக்ளீன்ஸ்** வாங்குக!

MTY-I TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

வரலக்ஷ்மி ஸப்ளிமெண்ட் போட்டி—2. Govt. Regd. No. 816

பரிசு ரூ. 1500

முதற் பரிசு ரூ. 1000

2வது பரிசு ரூ. 500

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே ★

பத்து வரிசை அனுப்புபவர் மேற்கொண்டு ஒரு வரிசை இலவசமாக அனுப்பலாம்.

2 முதல் 7 வரை

முடிவு தேதி 25—10—51.

மொத்தம் 27

பக்கத்திலுள்ள கட்டத்தில் 2 முதல் 7 வரை உள்ள எண்களைப் பூர்த்தி செய்யவும். மொத்தம் கூட்டினால் 27 வரவேண்டும். ஒரு கட்டத்திலுள்ள எண் மறு கட்டத்தில் வரக்கூடாது.

ஒருவரே எத்தனை வரிசைகள் வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் வரிசை ஒன்றுக்கு நான்கணா வீதம் கட்டணம் செலுத்தவேண்டும். கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனில் **ஸப்ளிமெண்ட் போட்டி—2** என்று அவசியம் குறிப்பிடவேண்டும். விடை நேயர்களுக்குத் தபால் மூலம் அறிவிக்கப்படும். மற்ற விதிகள் யாவும் வரலக்ஷ்மி 1—2 வார்த்தைப் போட்டி போலவே எல்லா விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். விடைகளை சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு அனுப்பப்படும்.

விடைகளையும் கட்டணத்தையும் அனுப்பவேண்டிய விலாசம்:—

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி

"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P.O. சித்தூர் ஜில்லா.

உரத்திற்குத் தக்க விளைச்சல் பெறுக ⊕⊕⊕

பூமியின் ஸாரம் அவ்வப்பொழுது புதுப்பிக்கப் பட்டால்தான் வாழை செழிப்பாக வளர்ந்து விசேஷ பயனளிக்கும். தாமரை பிராண்ட் உரம் ரஸாயன முறையில் பூஸார ஆராய்ச்சி செய்த பிறகு, குறைந்த செலவில் செழிப்பான விளைவு கிடைக்கும்படி விசேஷ முறையில் தயாரிக்கப் பட்டது.

எமது ஆலோசனையும் சேவையும்
கேட்போருக்கு இலவசம்

தாமரை பிராண்டு

வாழை உரத்தையே எப்போதும்
கேட்டு வாங்குக

மைசூர் பர்டிலைஸர் கம்பெனி,
31-A, நார்த் பீச்ரோட்,
தபால் பெட்டி நெ. 1206, மதராஸ்-1.

LOTUS BRAND

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1951
MADRAS

பாவம் அந்தப் பெண்
மலேரியாவினால் என்ன
கஷ்டப்படுகிறாள்

'பாலுட்ரின்'
அந்தத் தொல்லையினின்றும்
என்னைப் பாதுகாத்துவருகிறது

எலும்பையே நொறுக்குவது போன்ற தினசரி குடும்ப வேலைகளுக்கு மேல் மலேரியா வேறு. பாவம் அந்தப் பெண் மெலிந்து வெறும் நிழல்போல ஆகிவிட்டாள். அந்த சாதுப்பெண் அதைப்பற்றி என்னதான் செய்கிறாளோ கடவுளுக்குத்தான் தெரியும். எப்போது பார்த்தாலும் அவள் நோய், நோய், நோய் என்று நோயினால் நொறுங்குகிறதைத்தான் நாங்கள் காண்கிறோம். ஆனால் தினமும் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் சாப்பிட்டு வந்தால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் அவள் சுலபமாக குணமடையலாம். அவளது உதாரணம் என்னை உஷார்ப்படுத்திவிட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை சாப்பிடுவதை நான் வழக்கமாக ஆக்கிக் கொண்டுவிட்டேன். என் குடும்பத்திலே மற்றவர்களும் இதைப் பின்பற்றுமாறு செய்து வருகிறேன். ஆகையினால் மலேரியா எனது வாசற்படிகளை அணுகுவது இல்லை.

ICI

பாலுட்ரின்*
டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

அளவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 139 TE

பெர்குஸன் விவசாயிகளின் நண்பன்

அநேகவிதமான உபகரணங்கள் கொண்ட பெர்குஸன் 24 H. P. டிராக்டர் உங்களுடைய பண்ணைக்கான எந்தவிதமான வேலையையும் செய்யும்



பெர்குஸன் வெற்றியின் மூலகாரணங்கள்

1. ஆழப்பாய்தல்.
2. இழுக்கும் சக்தி அல்லது டிராக்ஷன்.
3. மூடப்பட்டிருக்கும் பொருளிலிருந்து பாதுகாப்பு.
4. ஹைடராலிக் மெகானிஸத்தினால் ஏற்படும் திடம்.
5. உட்காருமிடத்திலிருந்தே கண்ட்ரோல்.
6. இலவசப் பயிற்சி.
7. 6 மாதத்திற்கு சர்விஸிங்.
8. எளிதாகக் கிடைக்கக் கூடிய ஸ்பேர் பார்ட்ஸ்.
9. விரைவான டெலிவரி.

விலை ரூ. 7,100/- ஸேல்ஸ் & உள்ளூர் வரி தனி. F.O.R. சென்னை.

M/s. கமானி என்ஜினியரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்
"ஸாகர் மான்ஷன்" 2, ஜோன்ஸ் தெரு,
பிராட்வே, மதராஸ்-2.

SOLE DISTRIBUTORS
for WESTERN, CENTRAL AND SOUTHERN INDIA :

KAMANI ENGINEERING CORPORATION LTD., BALLARD ESTATE, BOMBAY.

K. B. LTD./F4A

பரிசு ரூ 6000

முதற்பரிசு ரூ 3000
2வதுபரிசு ரூ 2000
3வதுபரிசு ரூ 1000

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது

★ பிரவேசக் கட்டணம். கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு ஒரு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

அதிர்ஷ்டப் பரிசு. (ஒரு ரூபாய்க்குமேல் கட்டணம் செலுத்தியவர்கள் பெயரைமட்டும் சீட்டு போட்டெடுத்து) ஒருவருக்கு ஒரு அழகிய வெள்ளி கிண்ணம்.

முடிவு தேதி 10—10—51

		விடைகள் 1	2
1	ஒரு நல்ல காரியம் செய்வதற்குப் பெரியவர்களுக்குப் பிறருடைய இது வேண்டுமா என்ன ?	தூண்டுதல்	வேண்டுதல்
2	குடும்ப பாரத்திற்கு அஞ்சும் சில பெண்கள் கருப்பத்தை இது செய்துகொள்ள விரும்புவதுண்டு	சிதைத்தல்	தடுத்தல்
3	என்னதான் நன்பனாயிருந்தாலும் அடிக்கடி கடன் கேட்டால் சில சமயம் இது செய்யக்கூடும் நாம்.	மறுத்தல்	வெறுத்தல்
4	மனைவியை இப்படியாக நடத்துபவர்களுமுண்டு,	அருமை	அடிமை
5	......இல்லை என்றால் பண்டிகைகளும் விழாக்களும் கொண்டாட முடியுமா ?	பணம்	மனம்
6	புருஷர்களைவிடப் பெண்களுக்கு எந்த விஷயத்திலும் இது அதிகம் இருப்பதுண்டு.	ஞாபகம்	நம்பகம்
7	இதே சரியாக இல்லாதவன் சம்பிரமமான விருந்து சாப்பாட்டுக்கு ஆசை கொண்டு பயன் என்ன ?	சீரணம்	சீவனம்
8	......உள்ளவர்கள் பெரியவர்களை நிந்தனை செய்வார்களா ?	பக்தி	புத்தி
9	காங்கிரஸிலிருந்து............ஆனவர்கள் ஒவ்வொருவராக விலகிக்கொண்டு வருகின்றனர்.	முக்கியம்	யோக்கியம்
10	புதிய புத்தகம் வாங்கியதும் அதிலுள்ள களை......ப்பார்க்க புரட்டிப் பார்த்தல் மாணவர்களுக்கு சகஜம்.	பாடம்	படம்
11	நள்ளிரவில் திடீரென 'திருடன்' என்று கூச்சல் கேட்டால் அக்கம் பக்கத்தவர்கள் திருடனைப் பிடிக்க நாலாபுறமும்......	ஓடுவர்	தேடுவர்
12	சிறந்த இது உள்ள நாவல்கள் என்றால் விரும்பிப் படிப்போம் நாம்.	வர்ணனை	கற்பனை
13	ஒருவர் ஆனந்தமாயிருப்பதை அவருடைய...விருந்தே கண்டுகொள்ளலாமே!	வதனம்	வசனம்

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டுஇரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம். 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை காவேரி ஐப்பசி இதழில் வெளிவரும். நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :-

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி
"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 18-ன் சரியான விடை:—(1) பிரயாணம் (2) பிரசாரம் (3) தவிப்பு (4) கடமை (5) ஆட்டம் (6) கத்தி (7) பொருத்தம் (8) வாசித்தல் (9) நேர்மை (10) அழுதல் (11) தெம்பு (12) பக்தி (13) இன்பம். 2 1 2 2 2 2 2 2 2 1 1 1 2

போட்டி—17-ன் பரிசு விவரம்

முதற் பரிசு தலைக்கு ரூ. 101—0—0 விதமும் & அழகிய வெள்ளி கப்பும். 2-வது பரிசு தலைக்கு ரூ. 10—0—0 விதமும், 3 வது பரிசு தலைக்குரூ. 1—0—0 விதமும் வழங்கப்பட்டன. பரிசுகள் 27—8—51 தேதியன்று அனுப்பப்பட்டன. முழு விவரங்களும் வரலக்ஷ்மி க்ராஸ் வர்ட்ஸ் 19 இதழில் பார்க்கவும். இதழ் முற்றிலும் இலவசம்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.



4 கதவுகள்

இந்த புதிய மைனரை அறிவிப்பதற்கு முன்பு, மாரிஸ் கம்பெனி பத்து லட்சத்துக்கு அதிகமான சிக்கனமான கார்களை தயாரித்திருக்கிருர்கள் இந்த பெரிய எண்ணிக்கை தயாரிப்பிஞல் உண்டான அனுபவம் இந்த நுட்பமான என்ஜினீரிங் சாதனையில் நல்ல முறையில் பிரகாசிக்கிறது.

சிறியதாக இருந்தபோதிலும் சக்கர வட்டத்துள் உட்கார வசதியான இடம். முன் சக்கரங்கள் தனித்து பொருத்தப்பட்டிருப்பது பாடியும் சாஸிஸும் ஒருங்கே பொருத்தி அமையப் பெற்றது, முழுவதும் எஃகிஞல் செய்யப்பட்டவை, பெட்ரோல் சிக்கனம் போன்ற பல பெரிய கார்களின் சௌகரியங்களை உடையதாயிருக்கிறது.

மாரிஸ் மைனரில்

குடும்பத்திற்கு போதுமான இடம் உள்ளது

MORRIS *minor*

தன்மையில் முதன்மையான கார்

ரூ. 8750/-
எக்ஸ் ப்ளாண்ட்

அடிஸன் & கோ, லிட்., மதராஸ், பெங்களூர் கோயம்புத்தூர் & வில்லிங்டன்.

விற்பனையும், சர்வீஸும் செய்யும் எங்கள் ஜில்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ADZ-34



இவர்கள் அனைவர்க்கும் ஆரோக்கியத்தைக் காக்க உதவுகிறது; தகப்பனார் உழைப்பினால் தளர்ச்சி அடைந்தபோதும் தாயார் வியாதி குணமடைந்து வரும்போதும் பிள்ளை வளர்ச்சிக்கு வேண்டிய உற்சாகத்தைக் கொடுத்து உதவுகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்
மதராஸ் 17.

பொருளடக்கம்

கர மலர் 11		புரட்டாசி இதழ் 2

காங்கிரஸின் எதிர்காலம்	11
மகாலக்ஷ்மி கல்பனா	13
நமது புது டில்லி கடிதம் கே. ஸ்ரீனிவாசன்	19
பட்டினிச் சாவு? விஸ்வம்	22
சுதந்திர பலிகள் சபரி	25
கணம் தப்பிற்று மாயாவி	31
எது இன்பம் (தொடர் கதை) வே. ரங்கராஜன்	42
பாரதியின் ஞான குரு வி. ஜி. ஸ்ரீநிவாஸன்	53
ஆசை கே. வி. கே.	57
சோதனை ஜி. எஸ். மணி	64
மாவலிப் பொறிகள் ராமய்யா	71
ஸ்ரீ ஸ்துதி ஏ. கே. ராகவாச்சாரியார்	75
எங்கே அன்போ! ரா. ஸ்ரீ. தேசிகன்	77

குறிப்பு: 'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

199327

மேன்மையின்

பெருமை அநேக வருஷ உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



சைக்கிள்கள்
சைக்கிள் சாமான்கள்
பெராம்புலேட்டர்கள்
குழந்தை வண்டிகள்
இவைகளில்
உயரிய ரகத்திற்கு



நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்1.

தந்தி :—"சைக்கிள்ஸ்" போன்: 3168

காவேரி

கர ஹூ மலர் 11

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

புரட்டாசி இதழ் 2

காங்கிரஸின் எதிர்காலம்

புருஷோத்தமதாஸ் டாண்டன் போய் இன்று பண்டித நேரு காங்கிரஸ் தலைவராக வந்துவிட்டார். இதனால் நாட்டில் பெருத்த மாறுதல் ஏற்பட்டுவிடும் என்று பலர் நினைக்கலாம். உண்மையில் காங்கிரஸ் சீர்கேடடைந்திருக்கும் நிலைமையில் தலைவர் மாற்றத்தினால் மட்டும் சீர்திருத்தம் ஏற்படும் என்று எண்ணுவதற்கில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு இழுக்கு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் அதன் பெயரால் அரசாங்கம் நடத்தும் காங்கிரஸ்காரர்களிடையே ஏற்பட்டுள்ள ஊழல்கள். நிர்வாகத்தில் திறமையின்மையும் லஞ்சப்பேயும் தாண்டவமாடுவதினால் காங்கிரஸ்காரர்களுக்கு மதிப்புக் குறைந்துவிட்டது. இதை நன்கு உணர்ந்துதான் ஆசார்ய கிருபளானி அவர்கள் "காங்கிரசை மனித சக்தியினால் சீர்திருத்த முடியாது" என்று கூறியுள்ளார்.

பண்டித நேரு உண்மையில் காங்கிரஸில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று விரும்பினாலும் செய்கையில் அவரால் ஏதும் செய்ய இயலாது என்பது திண்ணம். காரணம் அவர் பிரதமராயும் காங்கிரஸ் தலைவராயும் இருப்பதே. அரசியலில் எது முற்றிலும் நன்மை எனப்படுகிறதோ அதைக் காரியத்தில் செய்துகாட்ட முடியாது. கொள்கைகளை ஓர் அளவுக்குத்தான் அமுலுக்குக் கொண்டு வரமுடியும். ஆட்சிமுறையில் ஊழல்கள் மலிந்துள்ளன என்பது பண்டித நேருவுக்குத் தெரியாததல்ல. தெரிந்தும் அதை அகற்ற முடியவில்லை என்றால் இதற்கு அவருடைய ஆர்வக்குறைவு காரணமல்ல. சூழ்நிலை ஒத்ததாக இல்லை.

பதினைந்து வருஷத்திற்கு முன்பு இருந்த காங்கிரஸ் அல்ல இன்றைய காங்கிரஸ். காங்கிரஸ் பதவி ஏற்றவுடன் பதவிமோகங் கொண்ட மக்கள் அதில் புகுந்துகொண்டனர். சூழ்ச்சிசெய்து காங்கிரஸ் ஸ்தாபனங்களைக் கைப்பற்றிவிட்டனர். மந்திரி சபை அமைப்பு, சட்டசபை அங்கத்தினர்கள் பொறுக்குவது இவைகளில் தங்கள் கைவரிசையைக் காட்டி இவர்கள் புகுந்துகொண்டு பழைய காங்கிரஸ்காரர்களை விரட்டிவிட்டனர். தியாகமும் தளராத கொள்கையுமே தம் பலமாகக்கொண்டு நாட்டுக்குச் சேவை செய்துவந்த காங்கிரஸ்காரர்கள் பலர் இன்று அந்த ஸ்தாபனத்தில் பெயரளவில் தான் பதவி வகிக்கிறார்கள். நவீன காங்கிரஸ்காரர்களுக்கு அவர்கள் கொடிபிடிக்கும் கோஷ்டியினராக இருக்கவேண்டி வந்துவிட்டது. பணம் பெருத்த, பணக்காரரே பதவிக்கு லாயக்கு என்று ஏற்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனங்களில் அவர்களுக்கு இடமில்லை.

காங்கிரஸ் அரசாங்கம் ஏற்பட்டவுடன் காங்கிரஸ் கமிட்டிகள் மந்திரிகள் கைப்பொம்மைகளாகவும் அமைக்கப்பட்டு விட்டன. மக்களுடன் நவீன காங்கிரஸ்காரர்களுக்குத் தொடர்பு இல்லை. தேர்தல் காலங்களில் மட்டும் இக்கமிட்டிகள் மக்களுடன் உறவாட வருகின்றன. மற்றக் காலங்களில் அவர்கள் தங்கள் செல்வாக்கை அரசாங்கத்தில் உபயோகித்து, தனிப்பட்ட நபர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து விட்டார்கள்.

பொதுத்தேர்தல் வருகிறது. இன்னும் காங்கிரஸ் கமிட்டிகள் மக்களுடன் தொடர்பு

ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் கவனம் முழுமையும் யாரைக் காங்கிரஸ் அபேக்ஷகராகத் தேர்ந்தெடுப்பது என்பதிலேயே ஊன்றியிருக்கிறது.

காந்தி காலத்தில் காங்கிரஸ்காரன் அரசியல் வாதி மட்டுமல்ல; மக்களுடைய துணைவன்; அவர்களுடைய சுக துக்கங்களில் பங்குகொள்பவன்; தன்னலமற்றவன் என்றெல்லாம் பெயர் பெற்றிருந்தான். இன்று மக்கள் உள்ளத்தில் காங்கிரஸ்காரனிடத்தில் இதற்கு நேர் எதிரிடையான குணங்கள் உள்ளன என்று தோன்றி உள்ளது. முதலில் இந்த அபிப்பிராயம் மாறவேண்டும். ஆட்சி முறையில், மக்கள் அனுகூலத்தைக் காணவில்லை, எங்கும் பிரதிகூலம். அரிசிப் பஞ்சம், துணிப் பஞ்சம், அகவிலை உயர்வு, பணநெருக்கடி—இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்காரன் ஊழலும் சேரவே மக்கள் எரிந்து விழுகிறார்கள். எல்லாவற்றிற்கும் காங்கிரஸ் பொறுப்பாளியல்ல என்றாலும் அவர்கள் அதை உணர்வதில்லை.

பண்டிதநேரு நாணயஸ்தர்களைத்தான் தேர்தல்களில் காங்கிரஸ் அபேஷகராக நிறுத்த வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அத்தகைய கண்யம் வாய்ந்தவர்கள் பெரும்பாலோர் காங்கிரஸிலிருந்து ஒதுங்கிவிட்டார்கள் என்று பண்டித நேருவுக்குத் தெரியாது போலும்! அப்படியே அவர்களை மறுபடியும் கொண்டுவர வேண்டுமென்றாலும் தற்போதுள்ள காங்கிரஸ்காரர்களில் எவ்வளவு பேர் அதற்கு அனுசரணையாக இருப்பார்கள் என்பது தெரிந்தவிஷயம். நாடெங்கும் காங்கிரஸ்கமிட்டி தேர்தல்கள் எப்படி நடத்தப்பட்டன என்பது பகிரங்க இரகசியம்.

அடியிலிருந்து நுனிவரை 'காங்கிரஸ் ஸ்தாபனத்தை மாற்றினால் அன்றி, பண்டித நேரு எதிர்பார்க்கும் மாறுதல் ஏதும் நிகழாது.

மற்றுமோர் விஷயம். சுராஜ்யம் கிடைத்த பின்பு காங்கிரஸ் ஸ்தாபனம் எதைக்குறித்து உழைக்கவேண்டும், அதன் கொள்கைகள் என்ன என்பது தெளிவாக்கப்படவேண்டும். கவர்மெண்டார் கையாளும் கொள்கைகள் எல்லாம் அதன் கொள்கை என்றிருந்தால் அந்த ஸ்தாபனம் அனாவசியம். மக்களைப் பொறுத்தவரை அது என்ன செய்யவேண்டும் என்பது தெளிவாக்கப்படவில்லை, கவர்மெண்டு கொள்கைக்கு அது பிளாடிங் பேப்பர் என்றால் பவுண்டன் பேனா அரசாங்கம் வந்தவுடன் அது மறையத் தானே மறையும். காங்கிரஸ் இந்நிலைக்கு வந்துள்ளது.

காங்கிரஸ் பிழைக்க வேண்டுமானால் அதற்குப் புதிய ஜீவன் உண்டாகவேண்டும். இதற்குக் காங்கிரஸுக்குத் தனித்தலைவர் இருப்பது அவசியம். பண்டித நேரு இதைக் குலைத்தது காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கே மிக்க பலக்குறைவு என்றுதான் கருத வேண்டி வருகிறது.

வருங் காலத்திலாவது காங்கிரஸுக்குத் தனித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நம்புகிறோம்.

மஹாத்மா நாட்டு மக்கள் அனைவரும் காங்கிரஸ்காரர்கள் என்று கருதவேண்டுமென்றார். அப்படியே நாட்டு ஜனங்களில் எவருக்குச் சிலர், சமர்த்தர் என்று பெயருள்ளதோ அவரைப் பொறுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தாலன்றி நேருவினுடைய குறிக்கோள் நிறைவேறாது. காங்கிரஸும் தன் நற்பெயரை மீட்டுக்கொள்ளமுடியாது. ஆட்சிப்பீடத்தில் திறமைசாலிகள் குறைந்துவிட்டனர். காங்கிரஸ் ஆட்சிக்குப் பெயர் வரவேண்டுமென்றால் புத்தி கூர்மையுள்ளவர்களை அழைத்துப் பதவி ஏற்கச் செய்ய வேண்டும், அப்பொழுதுதான் நாடு செழிப்படையும்.

நேரு கோஷ்டியினர் நாடெங்கும் இதைச் செய்ய முடியுமா?

மகாலக்ஷ்மி

கல்பனா

"ராமன் வந்திருந்தானாமேயடி, மீனாக்ஷி" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் மகாலக்ஷ்மி.

"ஆமாம், அம்மா!"

"எங்கே வந்தானாம்?"

"என்கிட்ட அதைச் சொல்லலையம்மா! அம்மா இல்லையா, மீனாட்சின்னு கேட்டாரு! இல்லையே சாமின்னேன். சித்தநாழி ரோசனை பண்ணிப்புட்டு' சரி! என் அதிர்ஷ்டம் அது, மறுபடியும் வரேன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு"

"ஏண்டி, கொஞ்சநேரம் உட்கார்ந்திருன்னு நீ சொல்லப்படாது? எங்கே வந்தானோ? என்ன அவசரமோ தெரியலையே!"

"நான் சொன்னேன் அம்மா, கோவிலுக்குப் போயிருக்காங்க அம்மா, சித்தேகுந்தேன், சாமி! இப்போ வந்திடுவாங்க'ன்னேன். "இல்லை மீனாக்ஷி! பின்னாடி வரேன்"னுட்டு போயிட்டாரு!"

'சரி! சரி! பேசிக்கிட்டு நிற்காதே! ஓடிப் போயி அவனைக் கையோடே கூட்டிக்கிட்டு வா! என்று அவளை விரட்டினாள் மகாலக்ஷ்மி.

சற்று நேரத்தில் ராமன் வந்து சேர்ந்தான். அலைந்து திரிந்து களைத்தவனாகக் காணப்பட்டான். தலைமயிர் காற்றில் பறந்து முகமெல்லாம் வந்து விழுந்திருந்தது; நெற்றியில் வியர்வை துளிர்த்திருந்தது.

"எங்கேயடா, அலைந்துதிரிந்து விட்டுவருகிறாய் ராமா? காலையில் தேடிவந்தாயாமே! கோவிலுக்குப் போயிருந்தேன். நீ சற்று உட்கார்ந்திருக்கக் கூடாதோ!" என்று மகாலக்ஷ்மி கேட்டாள்.

"ஒரு அவசர காரியமா வந்தேன். நீங்கள் இல்லை. போய்விட்டேன்" என்றான் ராமன்.

மகாலக்ஷ்மி கொடியில் உலர்த்தியிருந்த ஒரு துண்டை எடுத்துக்கொடுத்தாள். "மூஞ்சி எல்லாம் வியர்வை வழிகிறதடா! துடைத்துக்கொள்" என்றாள். பிறகு "எங்கே அலைந்துவிட்டு வருகிறாய்" என்று கேட்டாள்.

"எங்கே எங்கேயோ சுற்றினேன். பணம் கிடைக்கவில்லை" என்றான் ராமன்.

"பணமா? எதற்கடா, பணம்?"

"இன்றைக்குப் பரீக்ஷைக்குப் பணம் கட்ட வேண்டிய கடைசி நாள், அம்மா! எங்கே எல்லாமோ யார் யாரிடமோ கேட்டுப்பார்த்து விட்டேன். கிடைக்கவில்லை"

"இது உனக்கு 'மெட்ரிக்' இல்லையோடா, ராமா!"

"ஆமாம், அம்மா!"

"உன் அப்பா அந்நாளில் எத்தனை 'மெட்ரிக்'பையனுக்கு பணம் கட்டியிருக்கிறார், தெரியுமோடா! ஏழைப்பையன்கள் எல்லாம் அவரண்டையே வருவார்கள். 'மாமா! உங்களையே நம்பியிருக்கிறேன் என்பார்கள்! அவரும் யார் யார் உண்மையிலேயே சிரமப்படுகிறார்களோ, அவர்களுக்குப் பணம் கட்டுவார். உனக்கு இப்போது கட்டுவதற்கு ஆள் இல்லாமல் போய்விட்டதே, ராமா"

மகாலக்ஷ்மியின் கண்களில் நீர் மல்கியது. ராமன் பெருமூச்சு விட்டான். "காலையில் "பணம் கேட்கத்தான் வந்தாயோடா, ராமா" என்று மகாலக்ஷ்மி கேட்டாள்.

"ஆமாம், அம்மா"

"என்னைக் காணோம் என்றதும் நீ பலபேரிடம்போய், பணத்திற்குக் கெஞ்சினாயாக்கும். நன்றாக இருக்கிறதடா, உன் காரியம். என்னிடம் கேட்டு நான் இல்லை என்ற பிறகல்லவா நீ மற்றவரிடம் போகவேண்டும்?" என்று சொல்லிவிட்டு, பீரோவைத் திறந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து வந்தாள் மகாலக்ஷ்மி.

"இந்தாடா! உடனே போய், பணத்தைக் கட்டிவிடு. மீதியை ஒன்றும் திருப்பிக் கொண்டு வரவேண்டாம். வேஷ்டி ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால் அதற்கு

வாங்கிக்கொள். அந்த நாளில் உன் அப்பா எனக்கு எத்தனையோ ஒத்தாசை பண்ணி யிருக்கிறாரடா, ராமா! ஏதாவது முடை என் றால் என்னிடம் கேட்கச் சங்கோசப்படாதே! என்ன!" என்றாள்.

"ஆகட்டும், அம்மா!" — ராமன் போவ தற்கு எழுந்தான்.

"மீனுக்ஷி! கூடத்து அலமாரியிலே மல்கோ வாப்பழம் நேற்றைக்கு வாங்கினது, வைத் திருக்கிறேனே! அதிலே இரண்டு ராமனுக் குக் கொண்டுவந்து கொடடி!" என்றாள் மகாலக்ஷ்மி.

* * *

மகாலக்ஷ்மிக்கு ரொம்ப தயாள மனசு. பேச்சும் நயமாக இருக்கும். ஒவ்வொருவரி டமும் அவரவர் இயல்புக்குத் தக்க மாதிரி பேசுவாள். இவ்வளவுக்கும் அவள் தாஸி வகுப்பைச் சேர்ந்தவள்.

வயசு இப்போது அவளுக்கு முப்பத் தைந்து ஆகிவிட்டது. ஆனாலும் ஆள் அங்கமாகப் பார்ப்பதற்கு லட்சணமாக இருப்பாள். கொஞ்சம் உடம்பு சதை போட் டிருக்கிறதேயொழிய கண்ணுக்குக் கம்பீர மாக இருப்பாள். நல்ல சிகப்பு என்று சொல்லமுடியாது. நடுநிறம் என்று வைத் துக்கொள்ளலாம்.

எப்போதும் நெற்றியில் குங்குமம் பளிச் சிட்டுக் கொண்டிருக்கும். நடுவகிர் எடுத்து, படிமானமாகத் தலையை வாரிப் பின்னியிருப் பாள். மூக்கும் விழியும் ரொம்ப நீர்க்க மாகவே இருக்கும்.

நகை நட்டு என்று நிறைய அணிந்திருப் பாள்என்கிறீர்களோ! ஊஹூம். காதிலே ஒரு ஜோடி வெள்ளைக் கல்தோடு. கழுத்திலே ஒரு இரட்டைவடச் செயின். கையிலே ஒவ் வொன்றிலேயும் நாலு வளையல்கள். ஒரு மோதிரம் உண்டு என்று சொல்ல முடியுமா? கிடையாது. மூக்கிலே எடுப்பாக ஒரு பேஸரி மட்டும் டால் வீசிக்கொண்டிருக்கும்.

கச்சம் வைத்த தட்டுப் புடவைதான் கட்டுவாள். புடவை மட்டும் ஐம்பது ரூபாய் பெறுமானதாகவே இருக்கும். மேலே நிறையக் கை வைத்த ரவிக்கை அணிந்து கொண்டிருப்பாள். கையில் தட்டு நிறையப் பூ, பழம், தேங்காயுடன் சனிக்கிழமை அவள் கோவிலுக்குள் நுழைந்தால், சாக்ஷாத் மகா லக்ஷ்மியே வருவதாகப் பிரமை தட்டும்.

தாஸி என்பதற்காக அவளை யாராவது அலட் சியம் செய்வார்களா? பேசப்படாது! மகாலக்ஷ்மி கோவிலுக்குள் வருகிறாள் என்று சேதி வந்தால் ஆண்—பெண் அடங்கலும் மரியாதையாக விலகி வழிவிடும்.

கோவிலிலும் கௌரவம் பாராட்டிக்கொண்டு அவள் நிற்கமாட்டாள். அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டால் கோவிலைத்தவிர வேறு எங்குமே போகமாட்டாள்தான். இருந்தாலும் ஊரில் உள்ள ஒவ்வொருவரையும் அவள் அறிந்திருந்தாள். ஆகவே கோவிலில் எதிர்ப்படுகிற ஒவ்வொரு பெண்மணியிடமும் அன்புடன் பேசுவாள்; அவர் களுடைய குழந்தைகளை எடுத்துக் கொஞ்சுவாள்.

"உங்கள் பெரிய பெண்ணைத் தென் காசியிலே கல்யாணம் பண்ணிக் கொடுத்திர்களே, அம்மா? சௌக்யமாக இருக்கிறாளா? என்று விசாரிப்பாள்.

"போன சனிக்கிழமை உங்களைக் கோவிலில் காணவில்லையே, பாட்டியம்மா! எங்கே காணும்!" என்று கேட்பாள்.

"காலில் என்னமோ கடித்துவிட்டது, மகா லக்ஷ்மி! விஷக்கடி என்று சந்தேகப் படுகிறார்கள். பாரேன்! இன்னும் வீக்கம் தணியவில்லையே" என்பார்கள்.

"அடடா! உடனே என் வீட்டிற்கு ஆள் அனுப் பக் கூடாதோ! விஷக்கடி மருந்து கொடுத்தனுப்பி யிருப்பேனே! அப்புறம் அனுப்புகிறீர்களா, அம்மா!" என்று சொல்வாள்.

"மகாலக்ஷ்மியா? தங்கமான பெண் அல்லவா, அவள்" என்று ஊரில் அவளுக்கு வெகு நல்ல பெயர். அவளை யாரும் நிஷித்தமாக நினைத்து ஒதுக்கிவைக்கவே இல்லை. அக்கிரகாரத்திலுள்ள பல பெண்களுக்கு நாள் கிழமையன்று மகாலக்ஷ் மியைத் தங்கள் வீடுகளுக்கு அழைக்கவேண்டும் என்றுகூட ஆசை உண்டு.

அவள் தாஸியாக இருந்தாலும் வேதபுரத்தி லுள்ள எந்த ஆண் பிள்ளையுடனும் அவளுக்குச் சம்பந்தம் கிடையாது. யாராவது வேதபுரத்து ஆடவர் இரவில் அவள் வீட்டுக் கதவைத் தட்டி ஞல் கதவு திறக்கத்தான் செய்யும்.

"என்ன என்னைத் தெரியவில்லையா, மகா லக்ஷ்மி" என்று தட்டினவர் பல்லை இளிப்பார்.

"ரொம்ப இருட்டாக இருக்கிறது. ஒன்றும் தெரியவில்லை. காலையில் வாருங்கள், பேசலாம்" என்று சொல்லிக் கதவை மூடிவிடுவாள்.

இல்லாவிட்டால் "தங்கம் போன்ற மனைவியை அகத்தில் வைத்துக்கொண்டு ஏன் இப்படி வருகி றீர்கள்? நான் கமலத்திடம் சொல்லிவிடட்டுமா" என்று கேட்பாள்.

"வேண்டாம்! இதோ போய்விடுகிறேன்" என்றுகமலத்தின் அகமுடையான் வெற்றிகரமாக வாபஸாகிவிடுவார்.

பகல் நேரங்களில் தானாகட்டுமே! கோயில், குளம், வயல் என்று எங்காவது தெரிந்த உள்ளூர்க் காரர்கள் எதிர்ப்பட்டு, "சௌக்கியமா? மகாலக்ஷ்மி" என்றுகேட்டால், "இருக்கிறேன் ஸ்வாமி உங்கள் கிருபையிலே" என்று தலை வணங்கிச் சிரித்துவிட்டு மேலே போய்விடுவாள்.

மகாலக்ஷ்மி வீட்டைவிட்டு வெளியே அதிகமாக வந்தது கிடையாது. இருந்தாலும் ஊராருடைய கஷ்டநஷ்டங்கள் யாவும் அவளுக்குத் தெரியும். "சித்தய்யன் பெண்சாதிக்கு இது மாஸமாமேயடி, மீனாக்ஷி! இந்தா இதை அவளண்டை கொடுத்துச் சமயத்திற்கு வைத்துக்கொள்ளச் சொல்லுடி" என்று ஐந்து ரூபாயைக் கொடுத்தனுப்புவாள்.

"நிலத்தீர்வைக் கட்டாமல் வயல் ஜப்திக்கு வந்துவிடும் போலிருக்கிறதே, சோமக்குடும்பனுக்கு! எவ்வளவடி தீர்வை, மீனாக்ஷி! அவனை இந்தப் பக்கம் வரச்சொல்லி வாங்கிக்கொண்டு போகச்சொல்லு" என்பாள்.

"குருக்களையா! உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மாதம் இரண்டுபடி நல்லெண்ணெய் கொடுத்தனுப்புகிறேன். கோவில் எண்ணெயைத் தொடவேண்டாம். கர்ப்பகிருஹம் ரொம்ப இருட்டாக இல்லை?" என்று சொல்லுவாள்.

"என்னடி இப்படி பணத்தை வாரி இறைக்கிறாய்?" என்றுதாயார்காரிகேட்டால், "அனாவசியமாக ஏதாவது செலவு செய்கிறேனா, அம்மா! ஏதோ பகவான் நிறையக் கொடுத்திருக்கிறார். எனக்கென்ன குழந்தையா குட்டியா சேர்த்து வைப்பதற்கு? இப்படி உபகாரப் படட்டுமே" என்று பதில் சொல்லுவாள்.

ராஜம் என்று ஒரு ஏழை வீட்டுப் பெண் எங்களூரில் இருந்தாள், அவள் பருவமடைந்து ஆறு வருஷமாகிவிட்டது. இருந்தாலும் இன்னும் கல்யாணமாகவில்லை. இத்தனைக்கும் ரொம்ப அழகாயிருப்பாள் அவள்.

ஒருநாள் இருட்டுகிற நேரத்தில் அவள் மஹாலக்ஷ்மியைப் பார்க்கவந்தாள், மகாலக்ஷ்மியைப் பார்த்தாளோ, இல்லையோ, அவள் காலில் விழுந்து விம்மி விம்மி அழுதாள்." அக்கா! என்னையும் உங்கள் வீட்டில் சேர்த்துக்கொண்டு விடுங்கள்" என்றாள்.

"சீ! அசடே! இது என்ன வார்த்தை" என்று கடிந்தாள் மகாலக்ஷ்மி.

"இல்லை, அக்கா! வீட்டிலே தரித்திரம் பிடுங்கித் தின்கிறது. என்னைவைத்து சம்ரட்சிப்பதற்கே சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கும் பூமிக்கும் நான் பாரமாக இருக்கிறேன்" என்று அழுதாள் ராஜம்.

"மதுக்கரையிலிருந்து உன்னைப் பண்ணிக் கொள்ள ஒரு பையன் வந்தானே, அது என்ன வாச்சுது." என்று மகாலக்ஷ்மி கேட்டாள்.

"அவர்களுக்குக் கையில் இருநூறு கொடுக்க வேண்டுமாம். கல்யாணமும் நாமே செய்துவைக்க வேண்டுமாம். இது எங்களால் முடியுமா, அக்கா!"

"சரி, அழாதே! கண்ணைத் துடைத்துக்கொண்டு வீட்டுக்குப்போய் அப்பாவை முகூர்த்தம் வைக்கச் சொல்லு. நான் உன் கல்யாணத்திற்கு ஐந்நூறு ரூபாய் தறேன்" என்றாள் மகாலக்ஷ்மி.

அவ்வாறே கல்யாணமும் நடந்தது தன் ஆயுளிலேயே முதல் தடவையாக மகாலக்ஷ்மி அக்ரகாரத்திற்குள் அடி எடுத்துவைத்து மாங்கல்யதாரண சமயம்பிரசன்னமாயிருந்தாள். தன் செலவிலேயே திருமங்கலியமும் செய்துகொடுத்தாள். ஆனால் அங்கே வெகுநேரம் நிற்கவில்லை. வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு திரும்பிவிட்டாள்.

ராஜம் புருஷனுடன் ஊருக்குப் புறப்பட்டுச் சொல்லிக்கொண்டுபோக வந்தபோது அவளை இறுகத் தழுவிக்கொண்டாள். "என் கண்ணே! நீ என்னை அக்கா என்று அழைத்தாய். உன் அக்காள் சொல்வது நினைவிருக்கட்டும்! அன்றைக்கு என் காலடியில் விழுந்து ஒரு வார்த்தை சொன்னாயே, அதைமட்டும் இனி நினைக்கவே நினைக்காதே" என்று கண்ணீர் ததும்பச் சொன்னாள்.

* * *

மகாலக்ஷ்மிக்குப் பூர்வீகம் எது என்று சொல்ல முடியாது. அவளுக்குப் பதினாறு வயதாக இருக்கும்போது வேதபுரத்திற்கு வந்தாள். அப்போது அம்மாக்காரி தொழில் நடத்தி நிறையச் சம்பாதித்திருந்தாள். அதைக்கொண்டு ஒரு நல்ல வீட்டை, தோட்டத்துடன் விலைக்குவாங்கினார்கள். அதிலேயே குடியேறினார்கள்.

மகாலக்ஷ்மி மங்கைப் பருவத்திலே கொள்ளை அழகாகஇருந்ததாகக் கிழவர்கள்கூடச்சொல்வார்கள். அம்மாவுக்குப் பென்ஷன் கொடுத்துவிட்டுப் பெண் தொழில் நடத்த ஆரம்பித்தாள். அவள் தாஸித்தனம் செய்ததே தனிமாதிரி. உதட்டிலே சாயம்பூசி, வெள்ளைப்புடவையும் பூவுமாக அவள் ஒருநாள்கூட வாசலிலே நின்றது கிடையாது. அந்த நாளிலும் சனிக்கிழமை கோவிலுக்கு வருவாளே, அப்போதும் தலைகுனிந்து வருவாள்; தலைகுனிந்து திரும்புவாள். சுவாமியைத் தவிர வேறு யாரையும் ஏறிட்டுப் பார்க்கமாட்டாள்.

வேதபுரத்துவாலிப மைனர்கள் அவளுடைய கடைக்கண் பார்வைக்காகத் தவம் கிடந்தார்கள். நல்ல உயர்ந்த குடும்பத்துப் பிள்ளைகள்கூட 'மகாலக்ஷ்மியின் பாதங்களில்' தங்களை அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தார்கள். ஆனால் யாராவது ஓரிருவர் நெருங்கிப் பேசமுயன்றால் அந்த நாளிலேயே "நீ ரங்கநாத அய்யர் பிள்ளை இல்லை

யோடா! பேசாமல் வீடு போய்ச்சேர்" என்று சொல்லிவிடுவாளாம்.

சிறு வயதிலிருந்தே அவள் மனதில் வேதபுரத்தாரிடம் அலாதிமதிப்பு விழுந்துவிட்டது. அவர்களைக் கௌரவமாக மதித்து, மரியாதையாக நடந்துகொண்டாள். அவர்களுக்கும் தனக்கும் இடையே தகாத எண்ணம் தலைகாட்ட முடியாது என்று உறுதியாக நம்பினாள். இவ்வளவுக்கும் பெரியபெரிய வெளியூர் பேர்வழிகள் எல்லாம் அவள் வீட்டுக்கு வந்து போய்க்கொண்டுதான் இருந்தார்கள்.

கண்டபேர்கள் எல்லாம் அவள் வீட்டை நெருங்கிவிடமுடியாது. பொறுக்கி எடுத்தாற் போலத்தான் மனுஷர்களை உள்ளே அழைத்துக் கொள்வாளாம். ஒரு காலத்தில் ஸிதார், ஆர்மோனியம், மிருதங்கம், எல்லாம் அவள் வீட்டில் கேட்டுக்கொண்டிருந்தன. சிற்சிலருக்கு மகாலக்ஷ்மி நாட்டியம் ஆடக் காணும்பாக்கியம் கிடைத்திருக்கிறது.

மகாலக்ஷ்மிக்கு அந்தநாளிலே பிரமாதப்பெயர். வேதபுரத்துச் சுற்றுவட்டாரம் எல்லாம் அவள் அழகும் குணமும் பரவியிருந்தன. குற்றாலத்தில் காம்ப் போட்டிருந்த ஒரு கலெக்டர்துரை காரைப் போட்டுக்கொண்டு வந்து அவளைப் பார்த்தார். அவளை நடனம் ஆடச்சொல்லிப் பல தினுஸில் படம் பிடித்துக்கொண்டார்.

ஒரு எட்டு வருஷகாலம் மகாலக்ஷ்மி இம்மாதிரி போக வாழ்வில் ஈடுபட்டிருந்தாள். பல ஜமீன்தார்களை மயக்கிப் பொருள் சேர்த்துக்கொண்டிருந்தாள். பிறகு அவள் வீட்டிலிருந்து சலங்கைச் சத்தம் நின்றுவிட்டது. ஆட்டமும் பாட்டமும் ஓய்ந்துபோய்விட்டன.

மகாலக்ஷ்மியின் நடை உடையிலும் பெரிய மாறுதல் ஏற்பட்டது. கோணல்வகிடு கலைந்து நடுவகிடு கிளம்பியது. தோளை மூடும்படியாகச் சதா புடவைத் தலைப்பை கவனித்துக்கொண்டாள். பெட்டியிலிருந்த சல்லாத் துணிமணிகளை ஒரு நாடகக் கம்பெனிக்கு விலை பேசிவிட்டாள். வீட்டிலிருந்த ஆபாஸமான படங்களை எல்லாம் அகற்றினாள். தெய்வப் படங்களை அந்த இடங்களில் மாட்டினாள். மகாலக்ஷ்மி புது ஜன்மம் அடைந்தாள்.

தினசரி காலையில் எழுந்ததும் குளிப்பாள். சற்றுநேரம் தோட்டத்தைச் சுற்றிப்பார்ப்பாள். பிறகு பூஜை அறையுள் புகுவாள். மத்தியானம் சாப்பாட்டிற்கு மேலே லேசாக ஒரு தூக்கம். அதற்குமேலே ஏதாவது ஒரு வாசிப்பு. மறுபடியும் ஒரு ஸ்நானம். பூஜை அறையில் லக்ஷ்மி ஸ்தோத்திரப் பாராயணம். பிறகு லைட் சாப்பாடு. இருட்டின பின்னர் மூடப்படுகிற வாசற்கதவு ஒரே ஒரு தடவை மட்டும் திறந்து கொள்ளும். பிறகு விடியற்காலையில் ஒருதரம் திறந்து மூடும். யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பது பரம ரகசியம்.

* * *

ஊரிலே மகாலக்ஷ்மியைப் பற்றி ஆராய்ச்சி நடந்தது.

"என்ன சர்மாவாள்! இப்போ எல்லாம் நம்ப கிராமத்திற்குக் கார்களே வருவதில்லையே" என்று ஆரம்பிப்பார் சாஸ்திரிகள்,

"ஆச்ரமம் மாறிப்போச்சு சுவாமி! இப்போ நடக்கிறது சந்நியாசியாச்ரமம்" என்று சிரிப்பார் சர்மா

"'சந்நியாசினி' என்று சொல்லுங்கள்" என்று திருத்திக்கொடுத்தார் தமிழ் வாத்தியார்.

"என்ன ஐயா, அப்படி விரக்தி?"

"ஏதுவோ? ஏதுவானால் என்ன? கதவு மூடியாகிவிட்டது!"

"பேஷாக மூடிக்கொள்ளட்டுமே! சுவாமி! ஆனால் ராத்திரி பதினொரு மணிக்கு மேலே சந்நியாசினி ஆச்ரமம் திறப்பது தர்ம விரோதமாச்சே"

கொல்லென்று எல்லோரும் சிரிப்பார்கள். சிரிப்பு அடங்கினதும் பேச்சு வளரும்.

"ஏன் ஸ்வாமி! திறக்கக்கூடாது? இவளைப்போலவே யாராவது ஒரு அர்ஜுன சந்நியாசி வரக்கூடாதா? —" இது கோபாலய்யர்.

மீண்டும் சிரிப்பு கிளம்பும். மகாலக்ஷ்மியைப் பற்றி இப்படியெல்லாம் பேசுகிறார்களே, ஆனால் இதயத்தில் துளியாவது அவள் மீது கசப்பு இருக்கும் என்கிறீர்களோ, இருக்காது!

"விஷயத்தைக் கேட்டீர்களா? நம்ப சுப்புஸாமிக்கு ராத்திரியிலேயே தூக்கம் வரமாட்டேன் என்கிறதாமே" என்று அடி எடுத்துக்கொடுப்பார் கணேசய்யர்.

"ஆத்துக்காரி தொந்தரவோ" என்று பரிகாசம் தொனிக்கக் கேட்டார்கள்.

"அதெல்லாம் இல்லேன்னு! யாரோ ஒரு சந்நியாசி ராத்திரி வேளையிலே அழைச்சு உபதேசம் பண்றாளாம்."

"ஓஹோஹோ" என்று மறுபடியும் சிரிப்பார்கள்.

"சந்நியாசியா? சந்நியாசினியா? என்று மீண்டும் இலக்கணப் பிரச்னையைக் கிளப்புவார் தமிழ் வாத்தியார்.

"யாராக இருந்தால் என்ன? குரு சிஷ்ய பாவத்திலே, இந்த நாளில் ஏற்றத் தாழ்வு கிடையாது" என்று சர்மா சொன்னதும் சிரிப்பு உயரும்.

ஆண் பிள்ளைகள்தான் இப்படி என்கிறீர்களா? பெண்களிடையிலும் இதேமாதிரிதான் பேச்சு அடிபட்டது.

"சுப்புஸாமி ஆத்துக்காரி நூற்றைம்பது ரூபாயில் தியாகபூமிப் புடவை வாங்கியிருக்காளாமே, மங்களம்மா?"

"ஏன் அவள் வாங்கக்கூடாது? சுப்புஸாமிக்குத்தான் வாங்கிக்கொடுக்க வகையில்லையா? எல்லாம் இளைய ராணி உபயம்."

"அது யார் இளைய ராணி?"

"ஆமாம்! உனக்குப் பெயரைக்கூடச் சொல் லுவா! சனிக்கிழமை கோவிலுக்கு வா! காண்பிக் கிறேன், ராணியை"

இப்படிப் பேசிக்கொள்வார்கள். சுப்புஸாமி யின் பிள்ளை ராமனைக்கூப்பிட்டு "ஏண்டா! உங்க சித்தி உன்னிடம் பேசுகிறுளோடா" என்று அவன் வாயைக் கிண்டுவார்கள். ஆனுலும் சனிக் கிழமை கோவிலில் மகாலக்ஷ்மியைக் கண்டதும் ரொம்பவும் மரியாதையாகவே நடந்துகொள்வார் கள்.

* * *

வாஸ்தவத்திலும் சுப்புஸாமிதான் மகாலக்ஷ்மி யின் போக்கே மாறுவதற்குக் காரண மாக இருந்தார். அப்போது சுப்புஸாமிக்கு வயது முப்பதிருக்கும் ஆனுலும் ஆள் கட்டுக் குடுமியும் தானுமாக லக்ஷணமாக இருந்தார். கல்யாணமாகி ஒரு பிள்ளை ஒரு பெண் இரண்டையும் பெற்று எடுத்தாகிவிட்டது. ஒருநாள் சுப்புஸாமியை மகாலக்ஷ்மி கோவிலில் பார்த்தாள். அந்த நிமி ஷத்திலிருந்து அவள் வாழ்க்கையே மாறிவிட்டது.

மகாலக்ஷ்மி அவரை ஒருமுறை தனியாகச் சந் திக்க நேர்ந்தது. அப்போது அவரைத் தன் வீட் விட்டிற்கு அழைத்தாள்.

"நீ அழகாக இருக்கிருய்! உன்னையும் எனக்கு பிடித்திருக்கிறது. ஆனுலும் உன் வீட்டிற்கு நான் எப்படி வருவது, மகாலக்ஷ்மி? நான் மன தார அங்கே வரக்கூடியவிதமாக உன் வீடு இல் லையே" என்று சொன்னுர் சுப்புஸாமி.

"எப்படி இருந்தால் வருவீர்கள்? அதைச் சொல்லுங்கள், போதும்! நீங்கள் எது சொன்னு லும் கேட்கிறேன்" என்ருள் மகாலக்ஷ்மி.

"நான் குடும்பஸ்தன், மகாலக்ஷ்மி! நீயும் குடித் தனப் பெண் மாதிரி ஆகவேண்டும் என்பது என் ஆசை" என்ருர் சுப்புஸாமி.

"ஆகட்டும்! அப்படியே செய்கிறேன்" என் ருள் மகாலக்ஷ்மி.

ஒரே வாரத்தில் மகாலக்ஷ்மியின் வாழ்க்கை அக்ரகாரத்துப் பெண்களின் வாழ்க்கையைப் போல் சீராயிற்று. கோவிலும் குளமும் பக்தியும், நெறியும் இதயத்தில் குடிகொண்டன. பெருந் தன்மையும் அன்பும் தயாளமும் வாழ்க்கையில் பரிணமித்தன. மகாலக்ஷ்மி சுப்புஸாமியுடன் இல்லறம் நடத்த ஆரம்பித்தாள்.

மகாலக்ஷ்மி சுப்புசாமியிடம் பணத்தை எதிர் பார்த்தவளல்ல. தன்னையும் மீறி எழுகிற ஏதோ ஒரு ஊழ்வினையின் கூட்டுறவினுலேயே சுப்புசாமி யிடம் அவள் ஈடு பாடு கொண்டாள்.

அவர் இரண்டணுவுக்குப் பூ வாங்கிக்கொடுத் தால்தட்டாமல் வாங்கிக்கொள்வாள். ஆனுல் பின் னுலேயே "தட்டானை நேற்றைக்குக் கூப்பிட்டு அரைப்பவுனில் ஒரு மோதிரம் பண்ணச்சொன் னேன்! என் விரலுக்கு சித்தே பெரிசாக இருக் கிறது. எங்கே, உங்கள் விரலைக் காட்டுங்கள். போட்டுப்பார்க்கலாம்" என்றுதானே மோதிரத் தைப் பூட்டி அழகு பார்ப்பாள். "என் ராஜா வுக்கு எது போட்டாலும் அழகுதான்" என்று கையை நெஞ்சில் அணைத்துக்கொள்வாள்." ஆமாம்! இனிமேல் இதைக் கழற்றக்கூடாது! கையிலேயே இருக்கட்டும்" என்பாள்.

"என் வீட்டில் நீங்கள் சாப்பிடுவீர்களா? அத னுல் இளநீர் வெட்டி வைத்திருக்கிறேன்" என் ருள் ஒருநாள்.

"சீ! அசடே! உன் வீடு, என் வீடு, இதென்ன பேச்சு! சூடாக ஒருகப் காப்பி கொண்டுவா முதலிலே" என்ருர் சுப்புஸாமி.

"நம்ப வீட்டிலே ஒரு குழந்தை இருந்தால்—" என்று பெருமூச்சு விடுவாள் மகாலக்ஷ்மி.

'இருந்தால் நாம் இப்படி விளையாட அந்தப் பயல் விடுவானு?" என்று சிரித்து அவளையும் சிரிக்கவைப்பார் சுப்புஸாமி.

காயோ, கறியோ, புடவையோ, துணியோ எது புதுசா வாங்க நேர்ந்தாலும் எல்லாவற்றி லும் இரண்டு இரண்டு வாங்குவாள் மகாலக்ஷ்மி. ஒன்றைச் சுப்புஸாமி வீட்டிற்கு மீனுக்ஷி மூலம் அனுப்பிவிடுவாள்.

சுப்புஸாமியின் சம்சாரத்திற்கு முதலில் கோபம் கோபமாகவே வந்தது. சண்டைபிடித் தாள்; சாமான்களைத் தூக்கி எறிந்தாள். ஆனுல் சுப்புஸாமி நாலுநாளைக்கு வீட்டிற்கே வராமல் இருந்துவிடவே தணிந்துபோனுள். எது எப்படிப் போனுல் எனக்கென்ன என்கிற தினுஸில் நடந்து கொள்ளவாரம்பித்தாள். யாராவது அவள் வீட் டில் நுழைந்து "என்ன மாமி! இன்றைக்கு முட் டைக்கோஸ் கறியா? ஏது முட்டைக்கோஸ்" என்று கேட்டால் "ஆமாமடியம்மா! வந்திருக் காளே, சக்களத்தி—கொடுத்தனுப்பினு?" என்று வெறுப்பாகச் சொல்வாள்.

* * *

மகாலக்ஷ்மி சுப்புஸாமியைத் தன் கணவனுகவே பாவித்தாள். அவரைக்கொண்டு வீட்டி லேயே பூஜை உள்ளில் வைத்துத் தாலி கட்டிக் கொண்டாள். அன்று முழுவதும் அவருடைய காலடியிலேயே விழுந்து சிறு குழந்தையைப் போல நெக்குருக விசித்தாள்; "உலகம் இனி என்னை, தாஸி என்று சொல்லாதே! என்னை உங் கள் பெண்டாட்டி என்று சொல்லுமா?" என்று நூறுதடவை கேட்டாள். ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள். வீட்டிலிருந்த பணப்பெட்டியின் சாவியை அவரிடம் ஒப்புவித்துவிட்டாள். சுப்பு ஸாமியும் நாளடைவில் பகிரங்கமாகவே அவள் விட்டிற்கு வந்துபோக ஆரம்பித்தார்.

சுப்புஸாமி அவசரமாகநடந்து போய்க்கொண்டி ருப்பார். வழியில் ஒரு திண்ணையில் சீட்டாடிக் கொண்டிருப்பார்கள் "சுப்புஸாமி, வாரும் ஒரு கை குறைகிறது" என்பார்கள்.

"இல்லை! மகாலக்ஷ்மியை டவுனுக்கு அழைச் சிண்டு போறதாச் சொல்லியிருந்தேன்! நேரமா யிடுத்து" என்று கூறிவிட்டுப் போய்விடுவார்.

அதேபோல் கோவிலில் யாராவது பெண்கள் மகாலக்ஷ்மியிடம் „இந்தப்புடவை எங்கே எடுத்தீர்கள், அம்மா! நன்ருக இருக்கிறதே" என்று கேட்பார்கள், மகாலக்ஷ்மி பெருமை ததும்ப "இதுவா, அம்மா! நேற்றைக்கு நானும் அவரும் டவுனுக்குப் போயிருந்தோம். அவரேதான் பார்த்துப்பொறுக்கினுர். நன்ருக இருக்கிறதா, அம்மா!" என்பாள்.

மகாலக்ஷ்மிக்குக் குழந்தை இல்லையே என்று பெருங்குறை. அதை அடிக்கடி சுப்புஸாமியிடம் சொல்லுவாள். என்னை 'என்ன செய்யச்சொல்லுகிருய்! வேண்டுமாஞல் வா! பழனிக்குப்போய் வரலாம்! தண்டபாணிதான் என் குலதெய்வம்! வருகிருயா?" என்ருர் சுப்புஸாமி.

சுப்புஸாமியும் மகாலக்ஷ்மியும் பழனிக்குப் போனுர்கள். அர்ச்சனை செய்தார்கள். இருபத்தைந்து ரூபாய் செலவுசெய்து அபிஷேக ஆராதனைகள் பண்ணினுர்கள். பஞ்சாமிர்த டின்கள் சகிதம் ஊர் திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

பழனியிலே தண்டபாணியின் சந்நிதானத்திலே அவர்கள் நின்றபோது முருகன் அவர்களைப் பார்த்துச் சிரித்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் தாஸித்தனத்தில் ஊறி, பிறகு குடியும் குடித்தனமுமான ஒரு பெண்ணும் ஒரு அந்தணனும் இத்தனை ஒற்றுமையாக இருப்பதா என்று எண்ணிப் பொருமையடைந்திருக்க வேண்டும். ஏனென்ருல் அந்தப் பழனி யாத்திரையே மகாலக்ஷ்மியையும் சுப்புஸாமியையும் பிரித்துவிடக் காரணமாயிற்று.

சுப்புஸாமியின் சம்சாரம் தன் கணவனும் மகாலக்ஷ்மியும் சேர்ந்து பழனிக்குக் கிளம்பியதுமே கொதிப்படைந்தாள். புருஷனை நாலா விதத்திலும் சொல்மாரி பொழிந்து தாக்கினுள். ஆனுல் அவரோ அதைத் துளியும் லக்ஷியம் செய்யாமல் கிளம்பிப் போய்விட்டார்.

'வரட்டும் என்று மனம் கறுவினுள் அவள். மகாலக்ஷ்மியும் சுப்புஸாமியும் ஊர் திரும்பிய பின்னர், மீனுக்ஷி பழனியிலிருந்து வந்த பஞ்சாமிர்த டின்களைக் கொண்டு வந்து உள்ளே வைத்ததைப் பார்த்தாளோ இல்லையோ அடக்கிக் கொண்டிருந்த ஆங்காரம் எல்லாம் பீறிட்டுக்கிளம்பிற்று.

"இந்தப்பீடை எல்லாம் யாருக்கு வேணும்? அந்தக் கேடுகெட்ட மூதேவிகளையே உட்கார்ந்து பன்றியாட்டமா தின்னச்சொல்லு" என்று கூறின படியே அவைகளை எடுத்து வெளியே வீசினுள்.

அப்போதுதான் சுப்புஸாமி சில நண்பர்களுடன் உள்ளே வந்துகொண்டிருந்தார். எல்லோருடைய காதிலும் இந்த வார்த்தைகள் விழுந்தன. டின்கள் சுப்புஸாமியின் காலடியில் வந்துவிழுந்து உருண்டன.

அந்த நிமிஷமே சுப்புஸாமியின் மனது உடைந்துபோய்விட்டது. "சீ! பெண்டாட்டியாவது, குடும்பமாவது" என்ற விரக்தி மேலிட்டது. பூணூலை அறுத்து எறிந்துவிட்டுத் தடதடவென்று வெளியே போய்விட்டார்.

மறுநாள் காஞ்சீவரம் முத்திரையுடன் ஒரு கடிதம் மகாலக்ஷ்மிக்கு வந்தது.

"ஆசீர்வாதம்!

என் மனது சரியாக இல்லை. போகிறேன். எங்கே, ஏன், எதற்கு என்றெல்லாம் எனக்கே தெரியாது. உன் தர்மத்தைத் தவருது செய்துவா! எப்போதாவது என் மனது திரும்பினுல் உன்னைப் பார்க்க வருவேன். சுப்புஸாமி,

மகாலக்ஷ்மி காஞ்சீவரத்திற்கு உடனே ஓடினுள். ஆள் கிடைக்கவில்லை. விசாரித்ததில் திருக்கழுக்குன்றத்தில் யாரோ பார்த்ததாகச்சேதி கிடைத்தது. அப்புறம் இப்படியேதான். அங்கே பார்த்தோம். இங்கே பார்த்தோம் — என்கிற கதைதான். மகாலக்ஷ்மி பித்துப்பிடித்தவள்போல் சுற்றி அலைந்துவிட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக வேதபுரத்திற்கே வந்துசேர்ந்தாள்.

மகாலக்ஷ்மியின் வாழ்க்கையில் இரண்டாம் தடவையும் மாறுதல் உண்டாயிற்று. இப்போதெல்லாம் இரவு பதிஞேரு மணிக்குக் கதவு திறப்பதோ, அதிகாலையில் மீண்டும் திறந்துமூடுவதோ கிடையாது.

* * *

எல்லாம் பழைய கதை! எத்தனையோ வருஷம் ஓடிவிட்டது. காலம் யாருக்காகவும் எதற்காகவும் நிற்பதே இல்லை!

மகாலக்ஷ்மி என்றைக்காவது 'சுப்புஸாமி திரும்பிவரமாட்டாரா' என்ற தாபத்திலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள். ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் தன்னுல் ஆன உதவியைச் செய்துகொண்டிருந்தாள்,

ராமன் அந்த வருஷம் 'மெட்ரிக்' பாஸானுன். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்பதற்காக மகாலக்ஷ்மியிடம் வந்திருந்தான்.

"என்னைக் கேட்கிருயேடா? எனக்கென்ன தெரியும்? நான் நாலு கிளாஸ் படிச்சவள்தானே" என்ருள் மகாலக்ஷ்மி.

"இல்லையம்மா! நீங்கள் சொல்கிறபடி கேட்கிறேன்" என்ருன் ராமன்.

மகாலக்ஷ்மி கொஞ்சம் யோசித்தாள். பிறகு "உன்னிடம் நான்நிறையப் பணம் கொடுக்கிறேனடா, ராமா! நீ இந்தத் தேசம் பூராவும் சுற்றி உன் அப்பாவைத் தேடிப்பிடிக்கணும்! செய்வையாடா?" என்று கேட்டாள்.

அப்போது கோவிலில் சந்தியாகால பூஜை நடந்துகொண்டிருந்தது. டாண் டாண் என்று கண்டாமணியின் ஓசை காற்றில் மிதந்து வந்தது.

"மகாலக்ஷ்மி" என்ற பழக்கமான குரல் வாசலில் கேட்டது,

மகாலக்ஷ்மியும் ராமனும் திடுக்கிட்டார்கள்; திரும்பிப்பார்த்தார்கள், ஐயோ! யாருடைய குரல்?

தாடியும் மீசையுமாக நின்றுகொண்டிருந்தார் சுப்புஸாமி!

"ஸ்வாமி" என்று கூவி அவர் காலடியில் விழுந்து மூர்ச்சையானுள் மகாலக்ஷ்மி. ●

நமது புது டில்லி கடிதம்

கே. ஸ்ரீனிவாசன்

*மாதந்தோறும் புது டெல்லியிலிருந்து ஹிந்துஸ்தான் பத்திரிகையில் எழுதும் ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாஸன் அவர்கள் **காவேரி**க்கெனப் பிரத்யேகமாக ஓர் கடிதம் எழுதுவார். முதல் கடிதம் இது.*

காங்கிரஸில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றியும் கூடப்போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தைப் பற்றியுமே தற்போது மக்கள் கவனம் செலுத்துகின்றனர்.

காங்கிரஸுக்கும் கவர்மெண்டுக்கும் அபிப்பிராய பேதம் உள்ளது என்பது புதிதல்ல. பண்டித நேரு இதைப்பற்றி நெடு நாளாகவே ஆதுரப்பட்டு வருகிறார். ஆயினும் ஸர்தார் படேல் இருக்கும் வரை இந்த அபிப்பிராய பேதங்கள் மேலோங்கவில்லை. சர்தார் படேலும் நேருவுமே பலவிஷயங்களில் அபிப்பிராய பேதங் கொண்டிருந்தனர் என்பது பகிரங்க ரகசியம். அப்படியிருப்பினும், படேலும் நேருவும் வெளிப்படையாக அவர்களிடையே ஒற்றுமை இருப்பதாகக் காட்டி வந்தனர்.

ஆனால் உண்மை புருஷோத்மதாஸ் டாண்டன் தலைமை தாங்கிய நாஸிக்கில் வெடித்தது. டாண்டன்ஜீ படேலுடைய நியமனம். படேல் அவரை வெளிப்படையாக ஆதரித்தார். ஆச்சாரிய கிருபளானியை மறைமுகமாக நேரு ஆதரித்தார். ஆனால் பலிக்கவில்லை. சில ஏட்டுச்சுரைக்காயத் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுக் காங்கிரஸ் கலைந்தது. நேரு கோரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் காலக்கிரமத்தில். செய்கையில் அவை நிறைவேற்றப் படவில்லை என்று நேரு உணர்ந்தார்.

சர்தார் படேலின் மரணத்திற்குப் பிறகு கவர்மெண்டுக்கும் காங்கிரஸுக்கும் உள்ள பிளவு அதிகரித்துக் கொண்டே வந்தது. சர்தார்படேல் பார்லிமெண்டரி கட்சியை ஆக்கியவர். அதில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரையும் — சாதாரணமானவரிலிருந்து பெரியவர் வரை— நேரடியாகத் தெரிந்து வைத்திருப்பார். எனவே படேலைப் பின்பற்றும் அங்கத்தினர்கள் அதிகம். நேரு கொஞ்சம் சரஸமாகப் பழகும் தன்மை இல்லாததினாலும் எதையும் பற்றின்றி நோக்கும் குணத்தினாலும், அவ்வளவாகப் பற்றுதல் உண்டாக்கிக் கொள்ளவில்லை. எனவே, மக்களைப் பொறுத்தவரை நேரு நிகரில்லாத் தலைவராக விருப்பினும், காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை அதைத் தம் வழிப் படுத்த அவருக்குச் சக்தியில்லாதிருந்தது.

ஸர்தார் படேல் உயிருடன் இருக்கும் பொழுதும்கூட, அவர் முதலாளிகளின் துணைவர் என்று கூறுவதுண்டு. படேல் இதைப் பன்முறை மறுத்தும், அவர் பழைய காலப் பேர்வழி என்பதும், அரசாங்கம் எவ்வகையில் பொருளாதாரத் துறையில் ஈடுபடவேண்டும் என்ற விஷயத்தில் அவருக்கும் நேருவுக்கும் எத்தகைய அபிப்பிராய பேதம் இருந்தது என்பதும் வெளிப்படை. படேல் அபிப்பிராயம் கொண்ட பல தீவிர காங்கிரஸ் வாதிகள் இன்று டாண்டன்ஜீயை ஆதரிக்கின்றனர். அவர்களில் முக்கியமான தலைவர்கள்.— மொரார்ஜி தேசாய், எஸ். கே. பாடில் (பம்பாய்) ஆர். எஸ். சுக்லா, மத்திய மாகாண பிரதமர் டி. பி. மிஸ்ரா, ஸி. பி. குப்தா அல்கூரை சாஸ்திரி (ஐக்கிய மாகாணம்) டாக்டர் பி. ஸி. ராய். எனவே டாண்டன்— நேரு பலப்பரீக்ஷையில் இவர்கள்தான் அ. இ. கா. க. கூட்டத்தில் தங்கள் பலத்தைப் பிரயோகித்து முடிவை ஆக்கிவைப்பார்கள்.

டாண்டன்ஜியும் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் நேருவுக்கு என்ன அப்படிப் பெருத்த இடையூறுகள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று கேட்கப்படுகிறது. மிஸ்ரா நேருவை ஸர்வாதிகாரி என்று அறை கூவியதைப் போல் கூறுவிட்டாலும், நேருவின் அபிப்பிராயம் எல்லோரும் அறிந்ததே, மதப்பற்றற்ற ஸ்தாபனமாக அரசாங்கம் இருத்தல்வேண்டும் என்பதில் பண்டித நேரு பூரணமாக நம்புகிறார். டாண்டன்ஜி அப்படியல்ல. இவரை

ஆதரிப்பவர்களும் அப்படியே. ஹிந்துமதச் சீர்திருத்த மசோதா அவசியம் என்று நேரு கருதுகிறார். டாண்டன் அது பெருத்த அநீதியான மசோதா என்று கருதுகிறார். வெளிநாட்டுக் கொள்கை விஷயத்தில் பொதுவாக நேருவின் கொள்கைகள் ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும், உள்ளூரப் பூரண திருப்தியுடன் அதைப் பலர் அங்கீகரிக்க வில்லை. அமெரிக்காவை அனாவசியமாகப் பகைத்துக்கொள்ளுகிறார் நேரு என்று டாண்டன் கோஷ்டியினருடைய அபிப்பிராயம். நேருவுக்கு ஒரு வெளிநாட்டு கோஷ்டியினருடனும் அதிக ஐக்கியம் கொண்டாடுவதில் அபிப்பிராயமில்லை. தேசிய பாஷை விஷயத்தில், அரசியல் சட்டத்தில் விதித்துள்ள பாதுகாப்புகளின்படியே செல்ல வேண்டுமென்று நேரு நினைக்கிறார். டாண்டன் ஆங்கிலத்தை உடனேயே எடுத்துவிட வேண்டுமென்று நினைக்கிறார். இவருடைய கோஷ்டியினர்தான் ஹிந்தி எண்கள் வேண்டும் என்று வாதாடியது.

விஷயம் முற்றிவிட்டது. டாண்டன் நேரு சொற்படிக் காரியகமிட்டியைக் கலைத்து மாற்றியமைக்க இஷ்டப்படமாட்டார். ஆனால் அவர் ராஜீநாமா செய்யக்கூடும். டாண்டன் ஜீயினுடைய கோஷ்டியினரே நேருவைத் தலைவராகவும் ஆக்கக்கூடும். ஏனெனில், அவரின்றி, தேர்தலில் வெற்றிபெறமுடியாது. ஆனால் தேர்தலுக்குப்பிறகு எஸ். கே. பாடீல் கோஷ்டியார் எப்படி மாறுவார்கள் என்று சொல்லுவது கடினம். நேருவுக்கும் இது தெரியும். ஆயினும் எந்தக் கட்சிக்குக் கட்டுப்பாடான கிளை ஸ்தாபனங்கள் நாடெங்கும் உள்ளதோ அக்கட்சிதான் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்று நினைக்கிறார் நேரு.

* * *

இந்தியா—பாகிஸ்தான் உறவு, நாளுக்கு நாள் விசித்திரமாக மாறிக்கொண்டு வருகிறது. பழைய பயமுறுத்தல் இல்லை. என்றாலும், பாகிஸ்தான் அடங்கிவிட்டது என்று நினைப்பதற்கில்லை. அவர்கள் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறார்கள். காஷ்மீர் பிரச்னையைப்பற்றிப் பத்தி பத்தியாகப் பத்திரிகைகள் செய்திகள் பிரசுரிக்கின்றன, என்றாலும், அதைப் பற்றிப் பொதுமக்கள் கலவரப்பட்டதாகத் தெரியவில்லை. மக்கள் இப்படி இருப்பதைக் குறித்து நேரு திருப்தியடைகிறார். ஆனால் விஷயமறிந்த வட்டாரங்களில் இப்படி பொது மக்கள் சிந்தனையின்றி, காஷ்மீர் போர் விஷயத்தில் சும்மா இருப்பதைக் குறித்து கொஞ்சம் பயப்படுகிறார்கள். நெருக்கடியான நிலைமை ஏற்படுமானால், மக்கள் உற்சாகமின்றி இருந்துவிடப் போகிறார்களே என்று ஐயப்படுகிறார்கள்.

'முஷ்டி' பிரசாரம் பாகிஸ்தானில் கொஞ்சம் அடங்கியிருப்பினும், பாகிஸ்தான் உளவாளர்களின் செயல்கள் இங்கு அதிகரித்துவிட்டன. சென்ற நான்கைந்து வாரங்களில் நன்கு படித்த அழகிய பாகிஸ்தானிப் பெண்கள் கிளப்புகளிலும், ரெஸ்டிரண்டுகளிலும் ஆபீஸ்களிலும் எங்கும் காணப்படுகின்றனர். வெகு எளிதில் இவர்கள் ஸ்னேகிதம் பிடித்து உறவாடுகிறார்கள். மிக்க சாமர்த்தியமாகக் கொஞ்சிக் குலாவி, உளவறிய முற்படுகிறார்கள். இத்தேசத்துப் பாதுகாப்பு விஷயத்தில்கூட, நம்முடைய உளவறியும் இலாகா மிக்க உதவாக்கரையாக இருப்பது வருந்தத்தக்கது. இந்தப் பெண் உளவாளர்களைப் பற்றி அதிகாரிகள் கவனித்ததாகவே தெரியவில்லை. சீப் கமிஷனர் ஆபீஸில் சில பெண்களுடைய இந்தியாவில் தங்கும் பர்மிட்டுகளை நீடிக்கக் கோரிக்கை வந்தபோது, அங்குள்ள ஆபீஸர் மிக்க கனிவுடன் இப் பெண்களுக்கு உதவி புரிந்தார், தாம் செய்வது சரியோ தப்போ என்று உணராமலேயே.

பாகிஸ்தானில் இந்தியா துப்பறியும் விதமும் சிந்தனையற்றதாகத்தான் இருந்து வருகிறது, சமீபத்தில் இரண்டு ஆபீஸர்கள் இத் துப்பறியும் வேலைக்குப் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் பிரிவினை ஆகும் முன்னர் அந்த ஸ்தாபனத்தில் இருந்தவர்கள். எனவே அவர்களைப் பாகிஸ்தானிலுள்ள மற்ற அதிகாரிகள் எளிதில் கண்டுகொண்டனர். எனவே எவ்வித உளவும் அறியுமுன்னரே இவர்கள் சில பத்திரங்களுடன் கைது செய்யப்பட்டனர். ஒருவர் தம் பத்திரத்தை விழுங்கமுயற்சித்தார். ஆனால் மோவாய்க்கட்டையில் கொடுக்கப்பட்ட உதையில் அதைக் கக்க நேர்ந்தது. பிறகு அவர் ஜெயிலிலிருந்து சுவரேறித் தப்ப முயற்சித்தார். பலிக்கவில்லை. நமது போலீஸார் அறிமுகமாக வேறு சிலரை அனுப்பாதது வருந்தத் தக்கது.

* * *

டில்லி தலைநகரில் எலெக்ஷன் ஜ்வரம் அதி தீவிரமாக அடிக்கிறது. எல்லாக் கட்சியினரும் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

—காங்கிரஸ், கிஸான்—மஸ்தூர்—பிரஜா, கம்யூனிஸ்ட், ஸோஷலிஸ்ட், ஹிந்து மஹா சபா, பாரதீய ஜன சங்கம், ராடிகல் ஸோஷலிஸ்ட்ஸ், பார்வேட் பிளாக், மார்க்ஸிஸ்ட் பார்வேட் பிளாக்.

டில்லியில் முதன்முதலில் வயதுவந்த மக்கள் தொகுதிப்படி முனிஸிபாலிடிகளுக்குத் தேர்தல் நடக்கும். டில்லி முனிஸிபாலிடியில் 47 ஸீட்டுகள் உண்டு. இதற்கு ஐந்து முக்கிய கட்சிகள் 267 நாமினேஷன்களை தாகல் செய்துள்ளன. கம்யூனிட்ஸ், பார்வேட் பிளாக்காரர்கள், ராடிகல் ஸோஷலிஸ்டுகள்—இவர்கள் எலெக்‌ஷனை உத்தேசித்து ஓர் ஐக்கிய முன்னணி ஆக்கியுள்ளார்கள்.

ஓர் சிறு தொகுதியில் எலெக்‌ஷன் ஆய்விட்டது. மொத்த ஓட் 271. 5 காண்டிடேட்டுகளில் மூன்றுபேர் ஒதுங்கிவிட்டனர். எனவே ஜன ஸங்குக்கும் (ஆர். எஸ். எஸ். இன் கிளை) காங்கிரஸுக்கும் நேரடிப்போராட்டம் நடந்தது. காங்கிரஸ் 37 வோட்டுகள் அதிகமாகப் பெற்று ஜயித்தது. ஜன சங்கக் கட்சி ஆள் ஓர் அகதி; அவருக்கு 95 வோட்டுகள். காங்கிரஸுக்கு 132. இதிலிருந்து மக்களிடம் கட்சிகளுக்குள்ள பலத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

மற்ற மாகாணங்களில் தேர்தல் காற்று எப்படி அடிக்குமோ, டெல்லி, பஞ்சாப், இவ்விரண்டு பிரதேசங்களிலும் ஜன சங்கம் மக்களிடம் அதிக வோட்டுகள் பெறுவது திண்ணம். டெல்லி ஜனத்தொகை 13 லக்ஷத்தில், 6 லக்ஷம் பஞ்சாபிகள்; இவர்களில் 75 சதம் அகதிகள். இவர்கள் பிரிவினையினால் மிகவும் அவதிப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஒரே நோக்கம்தான். தற்போதுவீற்றிருக்கும் அரசாங்கத்தை வீழ்த்தி. மதப்பற்றற்ற அரசாங்கம் என்ற கொள்கையைக் கைவிடும் அரசாங்கம் ஒன்றைப் பதவியிலேற்றி வைக்கவேண்டுமென்பதே, எஸ். பி. முகர்ஜியிலிருந்து கோல்வால்கர்வரை எல்லோரும் தீவிர மத வெறி கொண்டவர்கள் தாம், பொதுமக்களில் பெரும்பாலோர் சங்கத்தை ஆதரிப்பவர்களாக இருப்பதால் தேர்தலில் கட்சி பலம் எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. முனிஸிபல் எலெக்‌ஷனில் சங்கத்தார் 40 சதம் ஸ்தானங்களைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் 30 சதம், இதர கட்சி 20 சதம், தனிப்பட்ட நபர்கள் 10 சதம்.

பார்லிமெண்டு எலெக்‌ஷனில் இன்னும் கவனிக்கத்தக்க நிகழ்ச்சிகள் நேரலாம். வயதுவந்த வாக்காளர் திட்டத்தில் எக்கட்சிகளினுடைய பலத்தையும் நிச்சயமாக நிர்மாணிக்க முடியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். காங்கிரஸுக்குப் பழைய திட நம்பிக்கையில்லை. டெல்லி பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் பிரம்பிரகாச் நம்பிக்கையில் மூழ்கியிருக்கிறார். அவருடைய கட்சியினர் வகுப்பு வாதிகளுக்கு தங்கள் மேடையைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கின்றனர். டெல்லி மாகாணத்திலிருந்து பார்லிமெண்டுக்கு 5 ஸ்தானங்கள் உண்டு. இவற்றில் காங்கிரஸ் 2 ஸ்தானங்களைப் பெறுவதே மகத்தான காரியமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. தென்னிந்தியாவிலிருந்து 20 வருடகாலமாகக் குடியேறி, டெல்லி கிராமாந்தரங்களில் பேசப்படும் ஹிந்தியைக் காட்டிலும் மிக்க சரளமாகப் பேசும் வன்மை வாய்ந்த ஸ்ரீமான் கிருஷ்ணன் நாயர் வெற்றிபெறுவது திண்ணம். புது டெல்லியிலிருந்து தேர்தலில் நிற்க ஆசைப்படுகிறவர்கள்:- இந்தியன் நியூஸ் கிரானிகள் ஆசிரியர் தேசபந்து குப்தா (காங்கிரஸ்) லாலா ஹான்ஸ்ராஜ் (ஜன சங்கம்), ஹிந்துஸ்தான் டைம்ஸ் துர்கா தாஸ் (கட்சியற்ற முறையில்) பாவா பச்சிட்டார் (சங்கம்) முதலியோர். காங்கிரஸ்காரர்கள் தங்கள் வெற்றியில் பூரண நம்பிக்கையின்மையால் பண்டித நேருவை டெல்லியிருந்தே நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால் புது டெல்லியில் தோல்வி ஏற்பட்டால் அது காங்கிரஸின் கௌரவத்தைக் குலைக்குமன்றோ. தேர்தல் நெருங்க நெருங்க, நடவடிக்கைகளும் மிகத் தீவிரமாக நடைபெறுகின்றன. சாதாரணமான மனிதன் வாயில் எழும் பிரச்னை இதுவே: "அடுத்த கவர்மெண்ட் எத்தகைய தன்மை வாய்ந்ததாய் இருக்கும்?"



பட்டினிச் சாவு?

விஸ்வம்

கடுமையான வெயில். தெருவிலிருந்த குப்பைத்தொட்டியோரத்தில் கொஞ்சம் நிழல். அதில் ஒரு நாய். பசியின் சாயல் அதன் கண்களிலே படர்ந்திருந்தது. எங்கேயாவது இலை விழாதா!

நாயினும் கேடான நிலையில் ஒரு நரஜீவன். நிழல் கிடைக்காமல் வெயிலிலேயே விழுந்து கிடந்தான். வறுமையின் சின்னம்; பஞ்சத்திற்குப் பலி. வயிறு ஒட்டி உடல் சோர்ந்து வதங்கியிருந்தான். எங்கேயாவது இலை விழாதா!

தொப்! இலைதான் விழுந்தது. இரு ஜீவன்களும் ஒருங்கே யெழுந்தன. இலை விழுந்த இடத்தைநோக்கி விரைந்தன.

எச்சில் பொறுக்குவதில் இரண்டுக்கும் போட்டி. வாலை நிமிர்த்தி மனிதன்மேல் சீறிவிழுந்தது நாய். இடதுகாலால் நாயை எட்டி உதைத்தான் மனிதன். ஏற்கனவே ஆயிரம் கண்களுடைய அவன் வேஷ்டியைப் பிடித்திழுத்து இன்னும் ஒரு கிழிசல் உண்டாகிற்று நாய். மறுபடியும் உதை. வெறிப்போர். உணவில்லாமல் சோர்ந்திருந்த உயிர்களுக்கு எங்கிருந்துதான் வந்ததோ பலம்!

மனிதன் இலையுணவை எடுத்துத் தன் வேஷ்டியில் முடிந்துகொண்டான். நாயும் பாதியை இழுத்து ஆத்திரத்தோடு உண்டது. மனிதன் இலையை எடுத்துக்கொண்டு மறைந்தான். நாய் சிந்தியிருந்ததைத் தின்றுவிட்டு மறைந்தது.

* * *

கந்தசாமி பெரிய மிராசுதார். கூட தரகு வியாபாரம் மும்முரம். காசோடு காசு கூடிற்று, கண்ணியமானவன்தான். ஆனால் ஒரே ஒரு களங்கம்!

குடும்ப வழக்கப்படி சிறு வயதிலேயே கல்யாணமாயிற்று. ஏழெட்டு வருஷங்கள் மனைவியோடு அன்பு வாழ்வு நடத்திவந்தான். தம்பதிகளுள் ஏக ஒற்றுமை.

எங்கோ வியாபாரத்திற்குச் சென்றிருந்த இடத்தில் அம்புஜத்தோடு பழக்கம் ஏற்பட்டது. அடிக்கடி அவ்வூருக்குச் சென்று தங்கிவந்தவன் அவளோடு நெருங்கிப் பழகிவிட்டான். அவள் என்ன வலை வீசினாளோ! அவளுடைய அழகுக்கு அடிமையாகிவிட்டான். அவள் இவன் அழகிற்கு அடிமையோ? ஐசுவரியத்திற்கு அடிமையோ?

கந்தசாமி மனைவி ஆண்டாள் காதுக்கும் எட்டியது விஷயம். நாளடைவில் புருஷன் மனைவிக்கிடையே ஒரு கசமுசப்பு உண்டாயிற்று. முதலில் ஆயிரம் ஆட்சேபனை சமாதானங்கள். பிறகு மனஸ்தாபம். மனஸ்தாபம் வந்தபோதெல்லாம் கந்தசாமி அம்புஜத்தோடேயே கொஞ்ச நாட்கள் தங்கிவிடுவான். வீட்டுக்குப் போனதும் ஆண்டாள் சகஜமாக இருப்பாள். மறுபடியும மனஸ்தாபம் முளைக்கும். அம்புஜத்திடம் சென்றுவிடுவான்,

தன்னைக் கல்யாணம் செய்துகொண்டுவிடுமாறு அம்புஜம் நச்சவாரம்பித்தாள். கந்தசாமி என்னென்னவோ சாக்கெல்லாம் சொல்லித் தட்டி வந்தான்.

ஆண்டாளும் புருஷனிடம் கரிசனம்காட்டவாரம்பித்தாள். தன் புருஷன் வேசி வைத்திருப்பது கௌரவக் குறைச்சல் என்று எடுத்துக்காட்டினாள்.

“ஏதோ நடந்தது நடந்துவிட்டது. ஊர் வாயில் விழுந்தெழாமல் கௌரவமாய் அம்புஜத்தைக் கல்யாணம் செய்துகொண்டுவிடுங்கள்” என்று ஆயிரந்தடவை சொல்லிவிட்டாள்.

திடீரென்று சக்களத்திகள் ஒவ்வொருவருக்கும் மற்றவளிடத்தில் அக்கறையும் அனுதாபமும் உண்டாயின. அம்புஜத்தையழைத்து வந்துவிடவேண்டும் என்று தூண்டினாள் ஆண்டாள். ஆண்டாளிடம் போனாலொழியத் தீராது என்று பிடிவாதம் செய்தாள் அம்புஜம்.

கந்தசாமி சந்தோஷப்பட்டான். எப்படியாவது அவர்களிருவரும் ஒன்றுபட்டு வாழ்

ந்தால் போதும் அவனுக்கு. தடை சொல்லாமல் அம்புஜத்தை யழைத்து வந்துவிட்டான்.

அம்புஜம் வந்த மறுநாள். சக்களத்திகள் இருவரும் தினுசுதினுசாகச் சமையல் செய்வதில் முனைந்தனர்.

"அம்புஜம்! நீ முதலில் சாப்பிடணும். நான் உனக்குப் பரிமாறணும்னு ஆசையாயிருக்கு." என்று கரைந்தாள் ஆண்டாள்.

"இல்லேக்கா! உங்களை உக்காத்திவச்சுப் போடவேண்டியது என் கடமை. அதை விட்டு......" என்று ஆட்சேபனை செய்தாள் அம்புஜம்.

ஆண்டாள் பறக்கப் பறக்க இலை போட்டாள். அம்புஜம் பரிமாற வாரம்பித்தாள். இருவரும் போட்டி போட்டுக்கொண்டு பரிமாறினார்கள். இவள் அவளை இழுத்து இலைமுன் உட்காரவைப்பதும், அவள் எழுந்து இவளை உட்காரவைப்பதும், மாறிமாறி ஒருவரையொருவர் உபசாரம் செய்வதுமாயிருந்தார்கள். ஒருவரும் முன்னால் சாப்பிட இசையவில்லை.

இதற்கிடையில் வந்தான் கந்தசாமி. இவர்கள் உபசாரத்தைக் கொஞ்சநேரம் கவனித்துக் கொண்டிருந்தான். சிரித்துக்கொண்டே இருவருக்கும் நடுவில் நின்றுகொண்டு "இதென்ன போட்டி!" என்றான். இருவரும் விழித்துக்கொண்டு நின்றார்கள். எங்கே தன்னை முதலில் சாப்பிடச் சொல்லிவிடுவானோ என்ற பயம் ஒவ்வொருவருக்கும்.

"இந்தச் சின்ன விஷயத்திற்கு ஏன் சண்டை? மூவரும் சேர்ந்தே சாப்பிட்டுவிடலாம். கொண்டா இன்னும் இரண்டு இலை." என்று சொல்லிக்கொண்டே இலையில் உட்கார்ந்து இதையும் அதையும் மாதிரிபார்க்கத் தொடங்கிவிட்டான். ஏனோ இரு பத்தினிமாரும் ஒருங்கே வீரிட்டனர். கந்தசாமி அதற்குள் எதை எதையோ தின்றுவிட்டான். ஆண்டாள் செய்த பாயசம்; அம்புஜம் செய்த பச்சடி. இரு மனைவிமாரும் ஒரே சமயத்தில் பாய்ந்து இலையை இழுத்தார்கள். பரபரவென்று வீதியில்கொண்டு எறிந்தார்கள். ஆண்டாள் பாயசத்தை எடுத்துத் தொட்டியில் கொட்டினாள். அம்புஜம் பச்சடியைச் சாய்த்தாள்.

கந்தசாமிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆம். அவனுக்கு ஒன்றுமே விளங்காமல் தான் போய்விட்டது. கண் இருண்டது. தலை சுற்றியது. சுருண்டு விழுந்தான்.

ஒருத்தி டாக்டருக்கு 'போன்' செய்தாள். டாக்டர் வந்தார், பார்த்தார், மருந்து கொடுத்தார். கந்தசாமி நினைவு மறுபடி பெற இரண்டுமணி நேரமாயிற்று.

"கண்ட ஹோட்டலில் சாப்பிட்டாலே இப்படித்தான். காலையுணவில் ஏதோ கெடுதலிருந்திருக்கவேண்டும்" என்றார் டாக்டர். "நல்லவேளை, சமயத்தில் நான் வந்துவிட்டேன். இல்லாவிட்டால்............"

பத்தினிமார்கள் டாக்டரை வாழ்த்தினர்.

* * *

தெருக் கோடியில் ஒரு பிச்சைக்காரன் இறந்து விழுந்துகிடந்தான். சற்றுத் தூரத்தில் ஒரு இறந்த நாய்.

"ஐயோ பாவம்! பட்டினிச்சாவு" என்றார்கள் பொதுமக்கள்.



உயர் ரக கடிகாரங்கள்

ஒவ்வொன்றும் 10 வருஷ கியாரண்டி



No. 80 — சைஸ் $10\frac{1}{2}$

5 ஜ்வல்ஸ் க்ரோம்	...16/-	உயர்தரம் ...	18/-
,, ,, சென்டர்க்ரோம்	20/-	ரோல்டுகோல்டு	20/-
15 ,, வாடர் புரூப்	60/-	,,	70/-



No. 81 — சைஸ் $6\frac{3}{4}$

5 ஜ்வல்ஸ் க்ரோம்	30/-	ரோல்டு கோல்டு	33/-
15 ,, ரோல்டு கோல்டு	45/-	உயர்தரம்	48/-

ஜெண்ட்ஸ் & லேடிஸ்க்கு



No. 82 — சைஸ் $6\frac{3}{4}$

5 ஜ்வல்ஸ் க்ரோம்	22/-	ரோல்டு கோல்டு	26/-
15 ,, ,,	40/-	,,	48/-
பாக்கெட் வாட்ச்	12/-	உயர்தரம்	15/-
டயம்பீஸ்	19/-	மிகச் சிறந்தது	22/-

51 மாடல் கோல்ட் காப் 5/- உயர்தரம் 8/-

தபாற் சிலவு தனி. இரண்டு வாட்சுகள் ஆர்டர் செய்தால் தபாற் சிலவு கிடையாது.

பாக்கெட் பிரஸ்

கார்டுகள், லெட்டர்பேப்பர் லேபிள், பிட்நோட்டீஸ், நிகழ்ச்த் குறிப்பு, விஸிடிங் கார்டு, முதலியன ஒவ்வொரு பெட்டியிலும், டைப்கள், பின்ஸர், இங்குபேட் முதலியன உண்டு.

உயர் ரகம் 7/- மிகச் சிறந்தது 12/-

தபால் செலவு தனி.

பெட்டித் தீ

நீங்கள் தீப் பெட்டியை இனி கைவசம் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம். இந்த பெட்டியை பாக்கெட்டில் வைத்துக்கொண்டால் போதும். தீப் பெட்டியைக் காட்டிலும் சிறிய தாகையால் புகை பிடிப்பவர்கள் கைவசம் இருக்கவேண்டும்.

சாதா ...	ரூ.	3—8—0
உயர் ரகம் ...	,,	7—0—0
மிகச் சிறந்தது ...	,	12—0—0
1 டஸன் எக்ஸ்ட்ரா லைடிங் ஸ்டோன்	,,	1—0—0
அழகிய ஸிகரட் கேஸ்	,,	2—0—0

தபால்செலவு தனி. ஒரு டஜன் ஸ்டோன்களுக்குக் குறைந்து ஆர்டர்கள் ஒப்புக்கொள்ளமாட்டாது. கடிதப் போக்கு வரத்து ஆங்கிலத்தில்.

THE EDEN WATCH Co. (See 64)

P. O. 11447, Calcutta—6.

போலி விளம்பரங்களைக்கொண்டு ஏமாருதீர்கள்

ஒரே வாரத்தில் ஹிந்தி

கற்க முடியும்

—o—

உருது, இங்கிலீஷ் முதலானது தெரிந்திருந்தாலும் நீங்கள் நிச்சயமாக ஒரே வாரத்தில் உபாத்தியாயரின் உதவியில்லாமலேயே இந்தப் புஸ்தகங்களின் உதவியால் ஹிந்தி கற்கலாம்.

எங்களுடைய ஹிந்தி, பஞ்சாபி முதலிய பாஷைகளின் பலவித போதனு முறைகள், பஞ்சாப், டெல்ஹி, ஹிமாசல பிரதேஷ், பெப்ஸு, இந்தியன் மிலிடரி டிபார்ட்மெண்ட் முதலிய கல்வி இலாக்காக்களால் அங்கீகாரம் பெற்றுள்ளன.

ஹிந்தி போதனுமுறை ஒரு செட் புஸ்தகங்கள் விலை ரூ. 2—8—0

அனுப்பும் செலவு தனி ரூ. 0—8—0

பஞ்சாபி போதனுமுறை விலை ரூ. 2—8—0

Steno House Agency, Steno Bldgs.

(27 D) AMRITSAR

ஆவணி இதழ் தொடர்ச்சி

சுதந்திர பலிகள்

சபரி



5

"யாரோ கண்ணம்மாவாம், உங்களைப் பார்க்கணுமாம்" என்று ஒரு 'சல்யூட்' அடித்தான் வெள்ளைக்காரச் சிப்பாயொருவன்.

"என்ன வேணும்? வரச் சொல் அவளை" என்றான் காலின்ஸ் துரை.

கண்ணகியின் 'மதுரைப் பார்வை' காலின்ஸுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் கண்ணம்மாவின் கோரப் பார்வையைக் கண்டு கொக்கரித்துச் சிரித்திருப்பானா?

புருவத்தை நெறித்து நின்ற பருவக் கண்ணம்மாளின் கிட்ட நெருங்கினான். உற்றுப் பார்த்தான் அவளை. இன்னும் கொக்கரிக்க எண்ணந்தான் அவனுக்கு. ஆனால் 'கட்' டென்று அடக்கிக் கொண்டான்.

போர்ப் பிரியன்தான் காலின்ஸ். ஆனால் பெண்களுக்கு மதிப்புக் கொடுக்கும் 'தங்கமான' நாட்டைச் சேர்ந்தவன். கண்ட பெண்களிடம் நையாண்டி பண்ணிக் கேவல நடவடிக்கைகளைக் கையாளும் பெரும்பாலான பாரத கூட்டத்தில் உதித்தவனல்ல அவன். பெண்களுக்குக் கண்ணியமும், பிறப்புரிமைச் சமத்துவமும், கண்டவுடன் கௌரவிக்கும் இங்கித கலாசாரமும் கொண்ட இங்கிலீஷ் கூட்டமல்லவா அவன்? அகதி போல் அவன் முன் நின்ற கண்ணம்மா அழுது பரிதவிக்கும் துர்ப்பாக்கியம் அடையவில்லை. அமைதியான முறையில் அவன் காட்டிய ஆசனமொன்றில் அமர்ந்தாள்.

"என்ன வேண்டும் உனக்கு?" என்றான் காலின்ஸ்.

"கலிங்க............"என்று வாயெடுத்தாள் கண்ணம்மா. மறு கணம் கதறித் துடித்து விட்டாள். "கலிங்கத் தேவனை நான் பார்க்கவேண்டும். அவர் என்............"

"கணவனா?" என்று நெற்றியை நெறித்தான் காலின்ஸ்.

"ஆ......மா... இல்லை..." என்று தடுமாறினாள் கண்ணம்மா.

"காதலன் போலிருக்கிறது" என்று சிரித்தான் அங்கே நின்ற வேறொரு வெள்ளையன்.

"ஷட் அப்" என்று கதறினான் காலின்ஸ். "போ, வெளியே நில்" என்று சிரித்த வெள்ளையனை வெறித்துப் பார்த்தான்.

"கலிங்கத்தேவனை நீ பார்க்க வேண்டும் இல்லையா?" என்றான். கனிவும் கௌரவமும் தொனித்தன அவன் வார்த்தைகளில்.

"இல்லை.........அவரை நான் கல்யாணம் செய்து கொள்ள வேணும்" என்று திடமாய்க் கூறினாள் கண்ணம்மா.

"என்ன?" என்ற காலின்ஸின் முகத்தில் அவநம்பிக்கை அஸ்திவாரமிட்டது.

"ஆமா, எனக்கு அவர் தாலி கட்ட வேணும்... அதுக்காகத்தான் வந்தேன்" என்றாள் அவள்.

"நாளைக்குத் தூக்கு அவனுக்கு. நரம்பும் சதையும் இப்பொழுதே நசித்துப் போயிருக்கும். சவத்தைக் கட்டிக் கொண்டு என்னம்மா செய்வாய்?" என்றான் காலின்ஸ்.

"அந்தச் சவத்துக்குள்ளேதான் என் சத்துவமெல்லாமிருக்கு, என் கலிங்கன்தான் எனக்குக்

கதி.........என் கிட்டெ தயவு செய்து அதையும் இதையும் பேசவேண்டாம். என் கலிங்கன்......,,

"அதற்குச் சொல்லவில்லை யம்மா. இந்தப் பெரிய தமிழ் நாட்டில் நாளை சாகப் போகும் கலிங்கன் தானு உனக்கு வேண்டும்? எத்தனையோ இளைஞர்கள்—அவர்களைக் கட்டிக் கொண்டால் ஐம்பது, அறுபது வருஷம் கூட இன்பமாய் வாழலாமே. கலிங்கனைக் கட்டிக் கொண்டால் வருங்காலத்தில் உன் இளமையின் கதி? உன் வாழ்வுதான் என்னவாகும்.........? அதற்காகச் சொன்னேன் என்றுன் காலின்ஸ்.

கண்ணம்மாவின் கண்ணீர்த்துளி ஒவ்வொன்றும் திரண்டு திரண்டு வெடித்தன. அவள் வார்த்தைகளும் திடமாயும், நிதானமாயும் ஒலித்தன. "தமிழ் நாட்டுலே மட்டு மென்ன? எங்க இந்தியாவிலேயே எத்தினையோ ஆயிரம் வாலிபர்கள் இருக்காங்க. அவர்களைக் கட்டிக் கிட்டா நீங்க சொல்ற மாதிரி ரொம்ப வருசம் சந்தோசமாய்த் தானிருக்கலாம். ஆனு அத்தனை வாலிபர்கள் லேயும் ஒருத்தர்தான் கலிங்கனுயிருக்காரு. அந்த ஒரே கலிங்கத்தேவனுக்குத்தான் ஒலகத்திலேயில்லாத அதிசயம்— சாகப்போருரும்னு தெரிஞ்சும் முதல் நாள் கல்யாணம் நடக்கும். அதுவும் இந்தக் கண்ணம்மா ஒருத்தியோடுதான். கலிங்கனுக்காவத்தான் கண்ணம்மா, கண்ணம்மாவுக்காவத்தான் கலிங்கன்........." என்று கட்டுக் கடங்காமல் கதறினுள்.

தேம்பலுக்கும் விம்மலுக்கு மிடையே அவள் இன்னும் தொடர்ந்தாள்: "ஆயிரம் ஆயிரம் ஆம்பளைகளை— உலகத்திலேயே அறிமுக மில்லாதவங்களைக் கல்யாணம் பண்ணி அனுதி காலம் ஆனந்தமாய் வாழறதை விட, ஒரு கலிங்கனை— உலகத்தை யெல்லாம் படையெடுத்த உங்களை எதிர்த்தவரை— சாவுன்னு தெரிஞ்சும் சலிக்காம சண்டை செய்த வீரரைக் கட்டிக்கிட்டேன்ங்கற ஒரு நிமிச எண்ணம் போதும். அந்த ஒரு நிமிச எண்ணம் குடுக்கிற சந்தோசம் உலகத்திலெ ஓராயிரம் பெறப்பிலே வருற சந்தோசத்துக்கு மேல்" என்றுள்.

காலின்ஸின் கண்களைக் கலக்க ரேகை வட்டமிட்டது. "கண்ணம்மா, போ; சிறைப்பட்டிருக்கிற உன் காதலன் கலிங்கனைப் போய்ப் பார்" என்று அவன் வாய் உதிர்த்த வார்த்தைகளும், கசிந்து உருகிய கண் உதிர்த்த நீர் முத்துக்களும் ஒரே சமய நிகழ்ச்சிகள்.

தனக்கு வழிகாட்டிச் சென்ற சிப்பாயைப் பின் தொடர்ந்தாள் கண்ணம்மா. 'ஷேக்ஸ்பியரின் கற்பனையிலும் எழாத அற்புதக் காதல் நிகழ்ச்சி' என்று முணுமுணுத்தான் காலின்ஸ் துரை.

"கண்ணம்மா" என்று கலிங்கத்தேவன் போட்ட இரைச்சலில் கும்பினியாரின் சிறைத் தளமே கிடுகிடுத்தது. ஆசையின் ஆவேசத்தால் துடி துடித்தான். "அத்தான்..............." என்று அலறிப் புடைத்து ஓடிய கண்ணம்மா அவனை அணைக்கும் ஆர்



வத்தில் இடையே குறுக்கிட்ட சிறைக் கம்பி களைக்கூட லட்சியம் செய்யவில்லை. கம்பிகளின் இடையில் நீட்டிய தன் கைகளால் அள்ளி அணைத் துக் கொண்டான் கலிங்கன். விம்மலும் பொரு மலும் சிறைக்கோட்டத்தின் நிசப்தத்தில் மிகத் தெளிவாகக் கிளம்பிப் பரவின.

அந்தப் பரவச நிலையிலிருந்து விடு பட இருவ ருக்குமே வெகு நேரம் பிடித்தது. 'கண்...ண...ம் மா.........' என்ற அவன் ஜீவ ஒலியில் பெரு மூச் சின் அழுத்தம் பதிந்திருந்தது. குமுறிய வானம் கொட்டும் மழைபோல் திமிறி யெழுந்த அழுகை யால் அவன் கண்கள் சுனையாகி விட்டன.

"அத்தான்" என்றாளே அவள். அதில்தான் எத்தனை புழுக்கம். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது அவளுக்கு. "இந்தக் கம்பிகள்...... ......" என்று அவன் கண்களைத் தன் முன்தானை யால் துடைத்தாள்.

"இந்தக் கம்பிகள் மட்டும் நமக்கு இடையே குறுக்கிடா விட்டால், நான் தூக்கு மேடை ஏறும் வரை உன்னைத் தொட்ட இந்தக் கையை எடுக்க மாட்டேன் கண்ணம்மா. நிலாவும், தாமி ரபரணிக் கரையும் பார்த்துப் பார்த்துப் பூத்துப் போகும் வரையிலே உன்னை சந்தோசப் படுத்த ணுங்கற என் நினைப்பைக் கேட்டு கேட்டு இந்தக் கம்பிகள் சிரிக்குது. உன்னை அணைத்து உன் அழகுக் கன்னத்தில் முத்தமிடுறதைக் கேவலம் இந்த உயிரில்லாத இரும்புக் கம்பிகள் தடுக்கிறதே. முறைப் பெண்ணிடம் கொஞ்சுற துக்குக்கூடச் சுதந்திரமற்ற வீரன் நான்............ ஹஹ்............ஹா.........ஆனால் நாட்டுக்காகக் காதலையோ, உன்போன்ற கன்னியையோ தியா கம் பண்றேங்கற எண்ணம் எனக்கு எவ்வளவு இன்பமாயிருக்கு தெரியுமா? ஒரு வார்த்தை போதும் கண்ணம்மா. 'கும்பினிப் படையை நான் இனிமேல் எதுக்க மாட்டேன்'னு எழுதிக் குடுத்து, சத்தியம் பண்ணினா இன்னிக்கே என்னை விடுதலை செய்து, பெரிய பெரிய உத்யோகம் கொடுக்க இந்த வெள்ளைக்காரனுக தயார்......... ஆனால்.........."

"ஆனால், அந்த உத்யோகத்தையும், பெருமை யையுமே நீங்க கட்டிவாழவேண்டியிருக்கும். பேடி மாதிரி வீரத்தையும், சுதந்திரத்தையும் அடகு வெச்சு நீங்க வெளியே வந்தா அப்புறம் இந்த கண்ணம்மா ஏது உங்களுக்கு? அத்தான், கும்பி னிக்காரனுடைய 'ஆள்—கலிங்கனோட' கும் மாளம் போட்டு வாழ்றதை விட, கும்பினியா னோட 'விரோதி—கலிங்கனோட' இந்தக் கம்பி களிலேயே முட்டி மோதி உயிரை விட நான் தயார்" என்றாள் கண்ணம்மா.

"கண்ணம்மா, வீரமும், வீரத்துக்கு வெகுமதி யான இந்த சிறையும், இந்த சிறைச்சாலையில் கேட்கிற உன் வார்த்தையிலும் இருக்கிற சந்தோ சமும், அன்பும் ஆங்கிலனைக் கால்பிடிச்சு, ஆத் தங் கரையிலும், நிலா அடியிலும் பெறுற வாழ்க் கையில் வருமா? ஆனந்த போகமான அடிமை வாழ்வைக் காட்டிலும் இந்த கைகால் விலங்கு கள் 'சல சல'ங்கிற மாதிரியான உன் பேச்சிலே ஆயிரங்கோடி இன்பமான நினைவுகள் சுதந் திரமா தெரியுது. நாளை இந்நேரம்............"

"நாளை இந்நேரம் நீ என்னைப் பாத்துப் பேச முடியாது. தூக்கு மேடையிலே உயிரைப் பறி கொடுத்துட்டுச் சவமா விடுவேங்கிறீங்களா? அத்தான் உங்க வாய் பேசாது. பலமான இந்தக் கை என்னை அணைக்காது. ஆனால் நம்ம ரெண்டு பேரோட ஆவியும் நீங்க சொன்ன நிலா அடியிலேயும், தாமிரபரணிக் கரையிலேயும் கட் டிப் புடிச்சுக் கிடக்கும் அத்தான். அப்புறம் இந்தக் கும்பினிக்காரனோ, இந்த சிறைச்சாலை யோ எதுவும் நம்பளைத் தடுக்காதில்லையா......... அத்தான்............நீங்க கைதியாகிட்டீங்கன்னு கேள்விப்பட்டதும் அம்மா அதே ஏக்கத்திலெ பொசுக்குன்னு போயிடுச்சு" என்று தாரை தாரையாகக் கண்ணீர் விட்டாள் கண்ணம்மா.

நாளைக்கு ஏற வேண்டிய தூக்கு மேடையை இன்றைக்கே மிதித்து விட்டது போன்ற உணர்ச்சி கலிங்கனுக்கு ஏற்பட்டது. தன் அத் தை மரித்து விட்டாள் என்று கேள்வியுற்றதும் "கண்ணம்மா இவ்வளவு நேரம் வெட்டிக் கதை கள் பேசினியே யொழிய அத்தை இறந்ததைப் பற்றி ஒண்ணுஞ் சொல்லலியே" என்று கடிந்து கொண்டான் அவளை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். குலுங்கி அழும் ஓசை மட்டும் கேட்டது.

"அத்தான்" என்று புலம்பிக் கொண்டே கம்பி களுக்கிடையே தன் கைகளை நீட்டி அவன் தோளை வருடினாள் கண்ணம்மா.

"கண்ணம்மா என்ன இருந்தாலும் பொம்பளை நீ, இந்தக் கல் மனம் கூடாது" என்று அவள் பக்கம் திரும்பினான் அவன்.

"அம்மாவுக்கு, என் கழுத்திலெ நீங்கள் மஞ்சள் கயிறைக் கட்டி முடியற காட்சியைப் பார்க்கணும்ங்கிற ஒரே ஆசைதான் அத்தான். சாகும்போது கூட, 'உன் கழுத்திலே ஒரு மாங் கல்யத்தை பாக்காமல் சாகிறேனே'ன்னுதான் கண்ணை மூடிச்சு. இப்போதான் என்ன......... அத்தான். அதோ அதோ என் அம்மா—உங்க அத்தை—நம்ப ரெண்டுபேரையும் பார்த்துச் சிரிக் குது. இந்த சமயத்தைத் தவற விடாதீங்க" என்று சிறை அறையின் இருளை வெறிக்கப் பார்த்து, பித்துப் பிடித்தவள் போல் கதறினாள். "கண்ணம்மா" என்று கதறிய அவள் வாயைக் கெட்டியாகத் தன் கைகளால் பொத்தினான் கலிங்கன்.

சில நிமிட மௌனத்துக்குப் பின் கண்ணம்மா வின் சில நிதானச் செய்கைகளால் வாயடைத்துப் போனான் கலிங்கன்.

"அத்தான் நான் கிறுக்குப் பிடித்துக் கதறவில்லை, இன்னும் என் கண்களுக்கு அம்மாவோட உருவம் மறையலை. இந்தாங்க அம்மாவின் கடைசி ஆசையை முடிச்சிடுங்க" என்று தன் முன்தானையில் முடிந்திருந்த ஒருவஸ்துவை எடுத்தாள். கலிங்கனின் திறந்த கண்களும், வாயும் மூடாது பிரமையின் சின்னங்களாக விளங்கின. கண்ணம்மா, "இந்தாங்க" என்று அவன் கையில் திணித்த வஸ்து பள பளக்கும் தங்க மாங்கல்யம். மங்களமான மஞ்சள் கயிற்றில் பிணைத்திருந்த தாலியைக் கண்டவன் "கண்...ணம்மா......" என்று அரற்றினான்.

இருவருடைய கைகளும் ஒன்றை யொன்று கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டன. இரு ஜோடிக் கண்கள் ஒன்றை யொன்று விழுங்குவனபோல் விரிந்து பார்த்தன. நான்கு கண்களிலிருந்தும் பெருக்கெடுத்த நீரோட்டம், தன் கையோடு அவள் கையைப் பிணைத்திருக்க, அவள் கையில் தக தகத்துக் கொண்டிருந்த தாலியில் சிந்திச் சிதறி அதன் ஒலியை மங்க வைத்தது, இருவர் கைகளும் நடுங்கின. புரியாத நடுக்கம். பதைத்த கரங்களிலிருந்து மாங்கல்யம் 'கண்' என்று தவறி விழுந்தது. சிறைக் கதவுக்கு உள்ளே பாதியும், வெளியில் பாதியுமாக ஒட்டியும் ஒட்டாமல் தாலிக் கயிறு நீண்டு நெளிந்து கிடந்தது.

"கண்ணம்மா, அத்தான்" என்ற இரு வார்த்தைகளும் ஏக காலத்தில் ஒன்றோடொன்று பிணைந்து எழுந்தன. கீழே குனிந்து தவறிய தாலியை எடுத்தான், "தாலி தவறி விட்டதே கண்ணம்மா" என்று ஏதோ தவறு நடந்து விட்டதைப்போல் துடித்தான், கலிங்கத்தேவன்.

"அதனால் என்ன அத்தான். அம்மா இன்னும் சிரிச்சுக்கிட்டே நிக்குது. சீக்கிரம் அத்தான், அம்மாவுக்கு அதே ஆசைதான். 'உன் அத்தான் தூக்கு மரம் போறதுக்குள்ளே கண்ணம்மா......னோட மனைவியாயிடணும். நாட்டுக்காக உசிரை குடுத்த............கண்ணம்மாவின் புருஷன்னு ஆகணும்'. இதுதான் அம்மாவுக்குக் கடைசி ஆசை. அந்தக் காரியம் இன்னும் முடியலைங்கிறதனாலோ என்னமோ அம்மா என்னைச் சுத்திக்கிட்டே வருது. அம்மாவுக்கு சொர்க்கத்திலே சாந்தி வேணும் அத்தான். அதோ......" என்று மறுபடியும் சிறையின் இருட்டைச் சுட்டிக் காட்டினாள். கலிங்கன் திரும்பிப் பார்த்தான். சூன்யம்; சுத்த சூன்யம்தான் அவனைப் பார்த்துப் பரிகசித்தது.

கண்ணம்மா என் அத்தையின் ஆவி சாந்தியடையட்டும் என்று உஷ்ணத்தால் நடுங்கும் தன்கைகளால் கம்பிகளின் இடுக்கு வழியாகக் கண்ணம்மாவின் துவண்ட சன்னக் கழுத்தில் தாலியிட்டான் கலிங்கன். கொதியாய்க் கொதித்தது, தாலி கட்டியதும் அவன் தன் உதடுகளோடு இறுக்கிப் புதைத்த அவள் மலர் இதழ்கள். சிறைக்கு வெளியே வெடித்த சில குண்டு சப்தங்கள்தான் அக்கல்யாணத்திற்கான கொட்டு மேளம் போலும்!

பரவச நிலையில் வெளியே வந்த கண்ணம்மாவால் பேச முடியவில்லை. "என்ன கலிங்கத்தேவனைப் பார்த்தாச்சா?" என்ற காலின்ஸ் துரைக்கு நன்றி கூற வாயெடுத்தாள். ஆனால், பதிலுக்குக் கண்கள்தான் பேசின 'கட கட'வென்று நீரைக் கொட்டி.

"தூக்குப்போடும் பொழுது இந்த மாதிரி நீங்கள் வரக்கூடாது, தெரியுமா? அவன் பிணத்தை வேண்டுமானால் பிற்பாடு வந்து தரிசிக்கலாம்." என்ற காலின்ஸின் குரலில் கண்டிப்போடு கண்ணியமும், கருணையும் நிறைந்திருந்தன.

6

அவலக்ஷணமாக ஆந்தை யொன்று அலறியது. குரூரத் தோற்றத்தில் ஒரு பூனை குறுக்கும் நெடுக்குமாக ஓடியது. வெளவால்கள் 'கிறீச்' என்று வட்ட மிட்டன. கனத்த இருளைக் கிழித்த குட்டி போட்ட நாயொன்றின் முனகல் கேட்கப் பயமாயிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக 'உய்ங்' என்று வீசிய காற்றோடு இரவுக் காதல் புரியும் மரங்களின் சல சலப்பில் மந்த ஹாசத்துக்குப் பதில் மருட்சியின் 'பாவம்' படர்ந்திருந்தது.

இத்தகைய 'சுபமான சூழ்நிலை'களிடையே மாங்கல்யம் தரித்த மணக் கோலத்தோடு, 'இப்பவோ பிறகோ' என்று சரியும் நிலையை எதிர்நோக்கி நின்ற பாழும் மண்டபம் ஒன்றில் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தாள் கண்ணம்மா.

நாளைக்குத் தன் ஆசை அத்தானுக்குத் தூக்கு என்று அறிந்தவள் வேறு எங்கே செல்லத் துணிவாள்? சொந்த ஊரைப் பொறுத்த அளவில் அவள் அனாதையாகி விட்டாள். சமூகத்தோடு ஒட்டி வாழவே சஞ்சலப் பட்டது அவள் மனம். இனி அத்தானை உயிரோடு பார்க்க முடியாது. விடிந்து உச்சிநாழிகை கடந்தால் அவரின் செத்த உடலைத்தான்காண முடியும் என்று நினைத்துப் புழுங்கிய அவள் இதயம் விண்டு போயிற்று. 'அத்தானின் பிணத்தைக் காணும்வரை எங்கும் போகக் கூடாது' என்ற தீர்மானத்தோடு பாளையங் கோட்டையின் கடைசியிலிருந்த அப்பாழும் மண்டபத்தில் பயங்கரத்தின் நடுவே இரவைக் கழித்தாள். தூக்கமின்றிக் கண்களைக் கொட்டிக் கொண்டிருந்தவளை மேற் கூறிய காட்சிகள் வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன. இந்த லட்சணத்தில் இரவு மங்கிப் பகல் மலர்ந்தது.

7

'டுமீல்' என்று வெடித்தது குண்டு. கும்பினிச் சிப்பாய்கள் கூடிக் கூடி ஏதேதோ பேசினர். மறுபடியும் குண்டு வெடித்தது. காலின்ஸ்

துரை 'கட் கட்' என்று நடந்துவந்து தன் ஆச னத்திலமர்ந்தான். நான்கு வெள்ளைச் சிப்பாய் கள் அவன் முன்னால் வந்து 'சல்யூட்' அடித்து விலகினர். அவர்கள் பின்னால் கட்டுண்ட விலங் குகளோடு திமிறித் துடிக்கும் காளையாகக் காட்சி யளித்தான் கலிங்கத்தேவன்.

சரித்திரம் கூறும் புருஷோத்தமனின் கம்பீர மும், வில்லை முறித்த வீர ராமனின் நிமிர்ந்த பார் வையும், கல்லேற்றிய சேரனின் செருக்கும், மண்டியிட மறுக்கும் மத யானையின் சண்டித் தனமும் நிதர்சனமாகிக் கொண்டிருந்தன கலிங் கத்தேவன் நின்ற நிலையில்.

''கொண்டு போங்கள் இவனை'' என்று இரைந் தான் காலின்ஸ். நான்கு சிப்பாய்களால் தள்ளப் பட்டுத் தூக்கு மேடை யேறினான் கலிங்கன். கழுத்திலே கயிறு மாட்டப் பட்டது. முகத்தி லே கரும் திரை மூடப்பட்டது. ''ரைட்'' என்று ஊழிக்கால வேகத்தில் உறுமினான் காலின்ஸ், 'படார்' என்று அடித்தது 'சக்கி.' 'கிர்ர்' என்று சுற்றியது கலிங்கனின் உடல். கழுத்தைக் கயி றும், கயிற்றிலே பிணைத்திருந்த சுயக் குண்டு களும் நெருக்கின. வீரனின் உறுதியான தொண்டைக் குழி எலும்புகள் 'நெறு நெறு' என்று நொறுங்கின. 'குமரித்தாயே, என் கண் ணம்மா…………' என்ற கலிங்கத்தேவனின் வார்த்தைகள் முடிந்தும் முடியாமல் காற்றோடு அமுங்கி விட்டன. 'சரே'லென்று பாதாளக் குழியுள் புதைந்தது அவன் சரீரம்.

''அதை எடுத்து வெளியில் கிடத்துங்கள்'' என்று எழுந்தான் காலின்ஸ் துரை. இரு இந் தியச் சிப்பாய்கள் பிணம் தூக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டார்கள்.

காலின்ஸ் என்ன நினைத்தானோ அது நடந்தே விட்டது. சிதைந்த கோலத்தில் பதை பதைக் கும் உள்ளத்தோடு அவன் அறை முன்னால் வந்து நின்றாள் கண்ணம்மா. எதையும் எதிர் நோக் கும் நிதானம் பொலிந்திருந்தது அவளுடைய அவக் கோலத்திலும்.

''யாரங்கே?'' என்றான் காலின்ஸ், ''கலிங்க னின் சவத்தை இந்தப் பெண்ணுக்குக் காட்டி விட்டுப் பத்திரமாக வெளியே அனுப்புங்கள்'' என்று கலவர மடைந்தாற்போலிருந்த தன் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

கறுப்புத் துணியால் மூடப்பட்டிருந்த கலிங்க னின் சவம், ஒரு காந்த சக்திபோல் கண்ணம் மாவை இழுத்தது. காட்டாறு போன்று பெரு கிய கண்ணீரோடு புயல் வேகத்தில் ''அத்தான்'' என்று பாய்ந்தாள் அவ்வுடல்மேல். சில்லிட்டி ருந்த அத்தானின் முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். கல்லின் உறுதியான அவன் நெஞ் சில் புதைந்து புதைந்து அழுதாள். கர்வம் மிளிர்ந்த கலிங்கத் தேவனின் முகமெல்லாம் கண்ணம்மாவின் கண்ணீரால் குளிப்பாட்டப் பட்டது. துக்கத்தால் விம்மி யெழுந்த மார் பகத்தை, வினாடியில் வெடித்து விடும் நிலையான தன் இதய பாகத்தை அழுத்திப் பிடித்துக் கொண் டாள். அவள் புலம்பல் நின்றது. சிறைக்கூடம் முழுவதும் அமைதி. ஆம், அவள் மனதிலும் அமைதி கொஞ்சம் கொஞ்சமாய் நிழலிட்டது.

நிதானமாகத் தன் கையைக் கழுத்துக்குக் கொண்டு சென்றாள். அடுத்த வினாடி 'படக்' கென்று அறுந்தது தாலிக் கயிறு. வீர மரணத் தால் மரத்துப்போன அத்தானின் வலது புஜத் தை எடுத்தாள். தன் வாயிலும் கண்களிலும் ஒற்றிக்கொண்டாள். அறுந்த தாலியைக் கலிங்கத் தேவனின் வலது மேல் புஜத்தில் வீரக் கயிறாகக் கட்டினாள். அவன் முகத்தில் வெற்றிச் சின்னம் பெற்றுவிட்ட வீர முறுவல் பூத்தது போலிருந் தது. சிறைக்கூடத்திலிருந்து வெளியேறிவிட்ட அவள் காதுகளில், ''அவன் உடலை நாய் நரிகளுக் கும் காகம் கழுகுகளுக்கும் இரையாக கோட் டைக்கு வெளியே தூக்கி எறியுங்கள்'' என்ற காலின்ஸ் துரையின் வார்த்தைகள் துப்பாக்கிக் குண்டுபோல் பாய்ந்தன.

8

கணவனைப் பறிகொடுத்துக் கைம்பெண்ணாகி விட்ட கண்ணம்மா கடாரபுரத்திற்குச்சென் றாளா? தன் சொந்த வீட்டைப் பற்றிய சிந்தனையே யில்லை அவளுக்கு. காலின்ஸ்துரையின் கடைசி வார்த்தைகள் அவள் உள்ளம்வரை ஊடுருவிப் பாய்ந்தன. கோட்டைக்கு வெளியே தூக்கி எறி யப்படப்போகும் தன் அத்தானின் உடலை ஏந்திக் கொள்பவளைப்போல் கும்பினிக் கோட்டையை வலம் வந்தாள்.

இரவு நடுச் சாமம் இருக்கும். சிதை காப்பவளைப் போல் கோட்டைச் சுவரோடு சுவராக ஒட்டிக் குந்தியிருந்தாள் கண்ணம்மா. எங்கோ ஒரு மூலை யில் 'பொத்' தென்று கேட்ட சத்தம் அவளைப் பைத்தியமாக்கிவிட்டதோ. 'விர்' ரென்று சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினாள். ''அத்தான்'' என்று கீழே கிடந்த சடலத்தைத் தன்னோடு அணைத்துக்கொண்டாள். 'நாய் நரியும், கழுகும் நானிருக்கும்வரை உங்களை நாடுமா? அத்தான்' என்று புலம்பினாள். இரவின் பேய்ப் புலம்பலா கக் கிடுகிடுத்தது அவள் குரல்.

செத்த சவத்தோடு தன்னையும் மறந்துகிடந்த கண்ணம்மாவின் காதுகளில் 'டக் டக்' என்ற குதி ரைகளின் காலடிச் சத்தம் வெகு தூரத்திலிருந்து ஒலித்தது. நிமிர்ந்து உட்கார்ந்தாள். பல புரவி களின் காலடிகள் தாறுமாறாகக் கேட்டன. கடைசியில் சிப்பாய்கள்—கட்டபொம்மனின் ஆட் கள்—அவள் கண்களில் பட்டனர்.

தன் பலமெல்லாம் கூட்டி எழுந்தாள் கண் ணம்மா. கலிங்கத் தேவனின் உடலைத் தூக்க

முயன்ருள். முடியவில்லே. மெதுவாக இழுத்துக் கொண்டுபோயாவது சுற்றியிருந்த செடிப்புதருக்குள் தன் அத்தாணே மறைக்க முயன்ருள். செத்த நிலையிலும் அவ் வீரனின் உடல் அசைக்க முடியாத பளுவாகப்பட்டது அவளுக்கு. இதற்குள் குதிரைகள் நெருங்கின. என்ன நினைத்தாளோ கலிங்கனின் உடலை அங்கேயே போட்டுவிட்டுச் செடிகளுக்குள் ஒன்றி மறைந்தாள்.

எல்லோருக்கும் முன்னுல் பாய்ந்து வந்த குதிரை 'சடக்' கென்று நின்றது. "யாரது" என்ற அதட்டலுடன் அதன் மீதிருந்த வீரன் கீழே குதித்தான். பின்னுல் வந்த சிப்பாய்களும் அங்கங்கே நின்றனர் "என்ன?" என்ற ஆத்திர சத்தத்துடன்.

கீழே கிடந்த சடலத்தை உற்று நோக்கிய வீரன், "பிரபு, நம்ம கலிங்கத் தேவன்" என்று கதறினுன். "எங்கே?" என்று பதறி யடித்துக் குதிரயை விட்டு இறங்கினுன் கட்ட பொம்மன். "கும்பினி நாய்கள் மிருகங்களுக்குத் தினி யாகட்டுமென்று எறிந்திருக்கிருர்கள். நல்ல வேளே நாம் வந்துட்டோம்." என்று கலிங்கத் தேவனேத் தன் கைகளால் ஏந்தித் தூக்கினுன். கட்ட பொம்முவின் கண் கசிவு இரவு நில வொளியில் 'வெளேர்' என்று மின்னியது. "பொன்னு, வீரமுத்து, நீங்களிரண்டு பேரும் கலிங்கனின் உடலைப் பத்திரமாகக் கூடாரத்தில் கொண்டு சேருங்கள்" என்று மேலும் முன்னேற ஆணே யிட்டான். கும்பினியாரின் கோட்டையைச் சுற்றி இரகசிய நடையுடன் கட்ட பொம்மனின் குதிரை வீரர்கள் பதுங்கி பதுங்கிச் சென்றனர். செடி மறைவிலிருந்து நடவடிக்கைகளேச் செவியுற்றுக் கொண்டிருந்த கண்ணம்மா நிம்மதிப் பெருமூச்சுடன் கட்ட பொம்மனின் பட்டாளத்தின் பின் நடந்தாள்.

9

'கட்டபொம்மனே நேர்த்தாக்குதலுக்காக வந்திருக்கிருன்' என்று கேள்விப்பட்ட காலின்ஸ் துரை கடுஞ்சினத்துடன் காணப்பட்டான். 'நானே போரின் முன்னணிக்குச் செல்ல வேண்டியதுதான்' என்று அவன் மனம் பொருமியது.

அப்பொழுது கிளம்பிய பீரங்கிப் புகைக்கூட்டத்தில் யார்? எங்கே? என்பதே புலப்படவில்லே. கட்டபொம்மனேயே குறிவைத்துக் கொண்டு கண்களேச் சுழற்றினுன் காலின்ஸ். காலின்ஸையே கருவறுக்கத் தேடினுன் கட்ட பொம்மு. இரு கழுகுக் கண்களும் முடிவில் கொத்திக் கொண்டன. கோட்டைச் சுவரோடு சுவராய் மறைந்து கொண்டு கட்டபொம்மனின் நெஞ்சுக்கு நேராகக் குறி வைத்த தன் துப்பாக்கிக் 'குதிரையை' அழுத்தினுன் காலின்ஸ். அடுத்த விஞடி "ஐயோ அத்தான், இதோ வந்துட்டேன்" என்று கதறிய பெண் குரல் பீரங்கிகள், துப்பாக்கிகளின் பேரொலியில் யாருக்கும் கேட்கவில்லே. கட்டபொம்மன் தப்பி விட்டான் எப்படியோ!

கும்பினிக் கோட்டையில் பாதி இரவுக்கிரவே பாழாயிற்று. 'கட்டபொம்மன் தப்பி விட்டான்' என்ற வெறுப் பூட்டும் செய்தி விடிந்ததும்தான் காலின்ஸுக்கு எட்டியது. அப்படியானுல்தான் இரவு குறிவைத்துச் சுட்டது.........? கோட்டைக்கு வெளியிலும், உள்ளும் மாண்டு கிடந்த கறுப்பரின் பிணங்களேப் புரட்டிப் பார்த்தான். "ஓ கடவுளே' என்று ஸ்தம்பித்துப் போய் விட்டான் காலின்ஸ். அவன் கண்ட காட்சி—கண்ணம்மா அவன் காலடியில் நெஞ்சில் குண்டுக் காயத்துடன் கிடந்தாள்.

இரவு நடந்த சிறிது நேரத் தாக்குதலின் பொழுது கட்டபொம்மனுக்கு நேராகப் பாய்ந்து வந்த குண்டைத் தான் ஏற்றுத் தமிழ்நாட்டுத் தலைவனேக் காத்த பெரும்பணியால் இறந்துகிடந்த கண்ணம்மாவின் முகம் பொலிவுற்றுக் கிடந்தது. அவை யெல்லாம் புரியாத புதிர் காலின்ஸுக்கு.

'இவளல்லவா காதல் தெய்வம்; தன் காதலன் போனகதியே தனக்கும் வேண்டும் என்ற பிடிவாதத்தால் வீர மரணம் அடைந்து விட்டாளே, கடவுளே, இவள் ஆத்மா சாந்தியடையட்டும்' என்று கண்ணம்மாவின் காதலே மட்டுமே புகழ்ந்து வியந்து கொண்டிருந்தான்.

ஆனுல் கலிங்கத் தேவனின் ஆவி தன்னேத் தேடிப் பறந்து வந்த கண்ணம்மாவின் ஆவியைக் கண்டு என்ன பேசி யிருக்கும்?

"கண்ணம்மா நான் நாட்டின் சுதந்திரத்துக்காக மட்டுமே பலியானேன். நீ என் மேல் கொண்ட காதலால் காதல் பலியாக மட்டுமல்ல, என் தலைவன் கட்டபொம்முவின் உயிரைக் காப்பாற்றித் தியாக பலியுமானுய். ஆகவே நம் இருவருக்குமே சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு உண்டு. ஏனெனில் நாம் சுதந்திரப் பலிகள்......" என்றுதான் மகிழ்ந்திருக்கும். ●



உத்தரவைப் படித்ததும் பசுபதி திடுக்கிட்டு "ஸார்............" அவனால் மேலே பேச முடியவில்லை.

"இப்பொழுது சந்தோஷந்தானே பசுபதி? நீ விரும்பிய இடமாறுதலோடு புரமோஷனும்......"

பசுபதிக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அவன் இடமாறுதலை வேண்டினான், அதோடு உத்தியோக உயர்வையும் விரும்பினான். ஆனால் மாற்றியிருக்கும் இடம்! அதை நினைத்த போதுதான் அவனுக்குத்திகில் எழுந்தது. எங்கேயாவது அவள் என் கண்களில் பட்டு விட்டால் ....?"

"என்ன பசுபதி? ஏன் முகம் இப்படி விழுந்து விட்டது? நல்ல சான்ஸ் தம்பீ. உனக்கு அதைக் கிடைக்கச் செய்ய நான் எத்தனை பாடுபட்டேன், தெரியுமா? வாடிபட்டி தண்ணீர் கிடையாத காடு தான். இருந்தாலும் ஸ்டேஷன் வட்டாரத்தில் வற்றாத கிணறு ஒன்று இருக்கிறது. ஆனால் ஊருக்கும் ஸ்டேஷனுக்கும் கொஞ்சதூரம்; அரைமைல், ஒருமைல் இருக்கும். சாப்பாட்டுக்கு மாத்திரம் ஏதாவது ஹோட்டலில் ஏற்பாடு செய்து விட்டாயானால், போர்ட்டர் போய் எடுத்து வந்துவிடுகிறான். கவலைப்படாமல் போய் வா, தம்பி."

'ஊருக்கும் ஸ்டேஷனுக்கும் வெகுதூரம்' என்பதைக்கேட்டதும் பசுபதிக்குக் கொஞ்சம் சமாதானம் ஏற்பட்டது. அந்த மட்டுக்கும், அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் குறைவாக இருக்குமல்லவா?

"இன்னும் என்ன ஆலோசிக்கிறாய், தம்பீ?"

"இல்லை ஸார், போகிறேன்."

"ராத்திரி பாஸஞ்சரில் கிளம்பவேண்டும். பாஸ் எழுதிக்கொண்டு வா; கையெழுத்துப் போட்டுத் தந்து விடுகிறேன். பிறகு, நேரே வீட்டுக்குப் போய், உன் மூட்டை முடிச்சுக்களைக் கட்டித் தயாராகிக் கொள்ளலாம். என்ன? நான் சொல்வது தெரிந்ததா?"

"சரி ஸார்"

டிராபிக் மானேஜர் அவனைத் தம்நாற்காலிக்கு அருகில் அழைத்து, முதுகைத் தட்டிக்கொண்டு, "இதோ பார், பசுபதி! உலகத்தில் இதெல்லாம் சகஜம்; நூற்றுக்கு ஒன்றிரண்டு பேர்கள்தான் விரும்பியதை விரும்பியவாறு பெறுகிறார்கள். தோற்றவர்கள் எல்லோரும் செத்தா போய்விட்டார்கள்? தனிமை, இடிந்த மனதுக்கு நிம்மதி அளிக்கும் என்றுதான் இந்தச் சின்ன ஸ்டேஷனில் வேலை காலி வந்ததும் உன்னைப்போட ஏற்பாடு செய்தேன் இங்குப் போல அங்கே உன் துயரைக் கிளறி விடக் கூடியவர் எவருமில்லை. இருப்பதெல்லாம் ஸ்டேஷன் மாஸ்டராகிய நீயும் ஒரே ஒரு போர்ட்டருந்தான். ஊர்கூடத் தள்

ளிப் போய்விட்டது. ஆகவே, இந்தத் தனிமையில் உன் ஏமாற்றத்தை மறக்கடித்து மீண்டும் பழைய பசுபதியாகி விடவேண்டும். என்ன? நான் சொல்கிறபடி செய்வாயா?" என்று வாஞ்சையோடு கூறினார்.

இந்த மாறுதல் உத்தரவு தனது நிலையை கொக்கிக்கும் வாணலியிலிருந்து நெருப்பில் தள்ளிய கதை' யாக்கிவிட்டது என்ற உண்மையைச் சொல்லப் பசுபதிக்கு நா எழவில்லை. கடந்த இரண்டு வருஷங்களாகத் தன்னிடம் விசேஷப் பரிவு காட்டி, தனது முன்னேற்றத்திற்குச் சகலவிதத்திலும் உதவி வந்திருக்கும் அந்த மேலதிகாரியின் மனம் இதை அறிந்தால் ஏமாற்றமடையும் என்று அதை மறுத்துவிட்டான்.

அவர் புத்திமதிப்படி நடப்பதாகக்கூறி விடை பெற்றுக்கொண்டு, பிரயாணத்துக்கான ஆயத்தங்களைக் கவனிக்கச் சென்றான், அவன்.

* * *

கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களுக்குப் பின்பு அன்று காலையில்தான் அவள் இருப்பிடத்தைப் பற்றிய செய்தியொன்று அவன் செவிக்கு எட்டிற்று. இரண்டு குமாஸ்தாக்கள் டிபன் அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பேச்சு அவனையும் அவளையும் பற்றிச் சென்றபோது உள்ளே வந்த மூன்றாமவர், "அவளைப் போன மாதம் வாடிபட்டி ஸ்டேஷனில் பார்த்தேன் ஸார். ஸ்டேஷன் கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்திருந்தவர்களுடன் ராதையும் நின்றாள். அதுதான் அவள் புக்ககத்தூரோ. என்னவோ?"

இந்தச் செய்தி எட்டிய சில மணி நேரத்துக்கெல்லாம் அதே ஊருக்குத் தன்னை ஸ்டேஷன் மாஸ்டராகப் போட்டிருக்கும் உத்தரவு வந்ததை நினைத்தபோது, பசுபதிக்கு 'இது நல்லத்துக்குத் தானோ?' என்ற விசாரம் ஏற்பட்டுவிட்டது.

ஆமாம்; அது அவனுக்கு நன்றாகத்தெரியும். இன்று பிறன் மனைவியாகிவிட்டாலும், அவள் உள்ளத்தில் அவனுக்காக ஒதுக்கப்பட்ட இடம் காலியாகவே இருக்கும் என்பது. அந்த இடம் இனி என்றென்றும் காலியாகத்தான் இருக்க வேண்டுமே யல்லாது அதில் மீண்டும் போய் அமர்ந்து கொள்ள வேண்டுமென்பது அவன் விருப்பமல்ல. ஆழ வேர்விட்டு அணு அணுவாக வளர்ந்த காதல் அரைக்கணத்தில் அடியோடு சாய்க்கப்பட்டால், அந்த இடிவைச் சம்பந்தப்பட்ட காதலர் ஒருவரை ஒருவர் காணாதிருந்து சகித்துக் கொஞ்சங் கொஞ்சமாக மறக்கவேண்டும். அதுவன்றி எதிரெதிரே இருந்தால், அத்துன்பம் பெருகி விபரீதத்துக்குக்கூட இடமளித்து விடக்கூடும் என்பது அவன் துணிவு. எனவேதான் அவளிருக்குமிடத்துக்குப் போய், அவள் கண்களில் பட அஞ்சினான்.

ஆனால் வாழ்வில் ஒரு தடவை குறுக்கிட்டு விபரீத விளையாட்டு விளையாடிச்சென்ற விதி, மறுமடியும் என்ன விபரீதத்துக்காக அவனை அவள் ஊருக்கு இப்பொழுது விரட்டுகிறது? பசுபதி வேண்டிக் கொண்டதெல்லாம், அப்பொழுது ஒன்றே ஒன்றுதான்: "கடவுளே, இன்று காலையில் நான் கேட்ட செய்தி— அவள் அவ்வூரில் வசிப்பதாகக் கேட்ட அச்செய்தி— பொய்யாக இருக்கட்டும். அப்படியே அவள் அவ்வூரில் இருந்தாலும், என் கண்களில் படாமலாவது இருக்கட்டும். என்னைப்போல் வாழ்நாள் முழுவதும் மனத்துயர் அரிக்காமல், அவளாவது கடந்ததை மறந்து கட்டிய கணவனுடன் களிப்போடு வாழட்டும்."

* * *

நினைவு என்பது நாகசர்ப்பத்தைப் போன்றது. தன் போக்குக்குத்தடை செய்யாத வரையில் பிறருக்கு அது தீங்கு இழைக்க. அன்றி, அதைக்கட்டிப் பிடிக்கவோ, விரட்டவோ முனைந்தோமோ, அவ்வளவுதான் வேகத்தோடு சீறிக்கொண்டு கிளம்பிவிடும்.

பசுபதி அவளைப்பற்றிய நினைவை அடியோடு அகற்ற முற்பட்டான். பயன், அது ஒன்றுக்கு இரண்டாகக் கண்ட காட்சியிலெல்லாம் படமெடுத்துக் கொண்டு கிளம்பிற்று. பெட்டி படுக்கையுடன் இரண்டாம் வகுப்பு வண்டியிலேறி அமர்ந்து கொண்டபொழுது, அவள் ஊருக்குப் போகிறோமென்ற நினைவை மாற்ற முயன்றான். ஆனால், அந்த இரண்டாம் வகுப்புப் பிரயாணமே அவள் நினைவை அவன்முன் கொண்டுவந்து நிறுத்திற்று. ஆமாம்; அன்று அவர்கள் இருவரும் காதல் களி வெறியில் மூழ்கித் தம்பதிகளாகப் போகிறோமென்ற இறுமாப்பில் மிதந்து கொண்டிருந்தபோது அவள் கூறிய வார்த்தைகளுக்கு அவன் மனம் தாவிற்று.

ரெயில்வேயில் உத்தியோக மேற்ற பிறகு, அப்பொழுதுதான் முதல் முதலாகப் பசுபதி இலவசப் பாஸ் ஒன்று வாங்கினான். சும்மாதான்; வேலைக்கு வந்து ஒரு வருஷமாகி விட்டது. லீவு நிறைய இருந்தது. ஒரு பத்துநாள் பட்டணம் போய்க் குஷியாகச் சுற்றியடித்து வரலாமே யென்று லீவுக்கும் பாஸுக்கும் எழுதிப்போட்டான். இரண்டும் கிடைத்து விட்டன. ஆனால் பாஸை வாங்கிய பிறகு ஏன்டா வாங்கினோமென்றிருந்தது, அவனுக்கு. பட்டணத்துக்கு ஒரு தடவை போய்வர வேண்டுமென்ற ஆசை அவனுக்கு நிறைய இருந்தது. ஆயினும், திருச்சியைவிட்டு அன்றை நிலையில் வெளியேற மனசும் வரவில்லை. 'பத்து நாட்களுக்கு ராதையை விட்டுப் பிரிந்திருப்பதா?' முடியுமா அது என்னால்?'

பாஸுடன் வீட்டுக்கு வந்தவன், போய்க் காபி கூடச்சாப்பிடாமல் மாடி வராந்தாவில் ஈஸிச்சேரை இழுத்துப்போட்டுக் கொண்டு, 'போவதா?

உங்கள் விருந்தாளிகளை மகிழ்விக்க...
அதிரசம்
இப்படி தயாரிப்பது மிகவும் சுலபம்:
2 கப் அரிசிமாவுடன், 1 கப் கம்பு மாவு, 3 கப் கொதிக்கும் வெல்லப் பாகு, சில கசகசா விதைகள், பொடிசெய்த சுக்கு இவைகளைச் சேர்த்து, கலந்து, பிசைந்தமாவு தயாரிக்கவும். சிறிய தட்டைகளாகதட்டி வாணலியில் டால்டா விட்டு பொரிக்கவும். டால்டாவை நன்ருக வடித்தெடுக்கவும்.
இதை தவற விடாதீர்கள்!
புதிய டால்டா சமையல் புத்தகம் —ஆங்கிலத்தில்—பல படங்கள் அடங்கியது—ஆர்ட் காகிதம்— 80 பக்கங்கள்—அகில-இந்திய, ஐரோப்பிய தின்பண்டங்கள்—ஆரோக்கியம், சுகாதாரம், சமையலறை இவைகளைப்பற்றிய குறிப்புகள்—விலை ரூ. 1/- தான். தபால் செலவு அணு 8 தனி.
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ 353, பம்பாய் 1
டால்டாவில் தயாரித்தது
விரும்பத்தக்க ருசிக்கு டால்டா உபயோகியுங்கள். ஊட்டத்தைத் தருகிறது. மேலும் எல்லாவித சமையலுக்கும் உகந்தது. சூடானதோ, குளிர்ந்ததோ, தித்திப்போ, காரமோ எவ்வித பண்டங்களுக்கும் உத்தமமானது. டால்டா கைபடாமல் தயாரித்தது. எப்பொழுதும் புதிதாகவும், துப்புரவாகவும், சீல் செய்த டின்களில் உங்களுக்கு கிடைக்கின்றது.
DALDA
HYDROGENATED GROUNDNUT AND TIL OIL
டால்டா
HVM. 147-172 TM

வேண்டாமா?' 'என்ற சிந்தனையில் மூழ்கியிருந்தாள்.

"எந்தக்கோட்டையைப் பிடிக்க இந்தச்சிந்தனை? அதைக் காப்பியைக்குடித்து விட்டுவந்து செய்யக் கூடாதா?" என்று கேட்டவாறு கையில் காபிப் பாத்திரத்துடன் மாடிக்கு வந்தாள் ராதை.

"இந்தக் கோட்டையைப் பிடிக்கத்தான்" என்று அவள் கையை எட்டிப்பிடிக்கப் போனான் பசுபதி.

அவள் விலகிக்கொண்டு, காபிப் பாத்திரத்தை ஈஸிச்சேரின் கைப்பிடியில் வைத்துவிட்டு, "இது தான் பிடிபட்ட கோட்டையாயிற்றே" என்றாள்.

பசுபதி காபியை எடுத்துக் குடித்துக்கொண்டே, "நான் இந்தக் கோட்டையை விட்டு வெளியேறப் போகிறேன், ராதை" என்றான்.

"எங்கே? ஆபீசுக்குத்தானே! அது நாளைக் காலையில் அல்லவா?" என்றாள் அவள் மோனம் ததும்பச் சிரித்துக்கொண்டே.

"ஆபீசுக்கு இல்லை; பட்டணத்துக்கு."

"என்ன? உங்களை அங்கே மாற்றி விட்டார்களா?" அவள் கேள்வியில் அதிர்ச்சியிருந்தது.

"மாற்றவில்லை; சும்மாதான் லீவு போட்டு விட்டு ஒரு சுற்றுச் சுற்றி வரப்போகிறேன்."

"பேஷாகச் சுற்றிவாருங்களேன்;ம்........... எழுந்திருங்கள்." என்றாள் அவள் சற்றுத் தள்ளி நின்றுகொண்டு.

"எங்கே ராதை?" என்றான் அவன் விஷயம் புரியாமல்.

"சுற்றிவர."

"எனக்குப் புரியவில்லையே?"

"புரியாதுதான்; உங்கள் பட்டணம் இங்கே தானே இருக்கிறது. இப்பொழுதே சுற்றி வந்து விடுங்களேன், என்கிறேன்."

அவன் இன்னும் விழித்தான்,

"இன்னுமா புரியவில்லை? நீங்கள் இன்று வரை சதா சர்வ காலமும் யாரைச் சுற்றிக் கொண்டிருக்கிறீர்களோ, அந்த என்னை லீவு போடாமலே இன்னொரு தடவை சுற்றிவந்து விடுங்களேன், என்றேன். இப்பொழுது புரிந்ததா?"

"விளையாட்டுக்குச் சொல்லவில்லை, ராதை; இதோ பார்; பாஸ் கூடவாங்கி வந்து விட்டேன்."

அவன் காட்டிய பாஸை அவள் வெடுக்கென்று பிடுங்கிப் பார்த்தாள். பார்த்துவிட்டு, "ஓ! இதென்ன? ஒருத்தருக்கு மாத்திரந்தானே இருக்கிறது? என்றாள்.

"ஆமாம்; நான் மாத்திரந்தானே போகப் போகிறேன்."

"அப்படியானால், நான்!"

"உன் அம்மா சம்மதிப்பாளா, ராதை? மேலும், நீ எனக்கு என்ன உறவு என்று பாஸ் வாங்குவது?"

"ஏன்? உண்டான உறவைச் சொல்லுகிறது."

"அந்த உண்டான உறவு' உண்டானபிறகல்லவா அப்படி எழுதி வாங்கலாம்?"

"ஆமாம்; நீங்கள் சுய நலக்காரர்! ஹூம்; நான் தரமாட்டேன் இந்தப் பாஸை. இதை வைத்துக்கொண்டு நான்தான் மிஸ்டர் பசுபதி என்று போய்வரப் போகிறேன்."

"நன்றாகப் போய்வா, அம்மா; இப்படியே போனால், பசுபதி என்கிற பெயர் பெண்களுக்குக் கிடையாதென்று அடித்து விரட்டி விடுவார்கள். இதோ, பெட்டியிலிருந்து ஒரு பைஜாமாவும் ஜிப்பாவும் எடுத்துப்போட்டுக் கொண்டு போ; ஆனால், அப்படியும்கூட அவர்கள் உன்னைப் பெண்ணென்று கண்டு கொள்வார்களே!" பசுபதியின் பார்வை அவள் முகத்திலிருந்து கீழிறங்கி ஓடிற்று.

"போக்கிரி!" என்று அவள் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள். "இது எதற்குத் திடீரென்று இப்படியெல்லாம் செய்தீர்கள்? பட்டணத்தில் என்னைவிட முக்கியமாக, அதிசயமாக,கவர்ச்சியாக என்ன இருக்கிறதென்று இந்தப்பயணம்?"

"சும்மா போட்டேன் ராதை, அதற்குள் லீவும் பாஸூம் தரமாட்டார்களென்று. ஆனால் எதிர் பார்த்ததற்கு மாறாகத் தந்தே விட்டார்கள். இப்பொழுது ஏன் லீவு போட்டோமென்றிருக்கிறது."

"எத்தனை நாள் லீவு போட்டிருக்கிறீர்கள்?"

"பத்து நாள்"

"ஆ! பத்துநாளா! ம்ஹூம்; அதெல்லாம் முடியவே முடியாது. பத்துநிமிஷம் இந்த முகத்தைக் காணவில்லையானால் பரதவித்துப் போகிறது. என் மனசு; பத்துநாளாமே, பத்து நாள்!"

"என்ன செய்கிறது ராதை? பைத்தியக்காரத்தனமாகப் போட்டு விட்டேன். பாஸூம் வந்துவிட்டது. போய்த்தான் வந்துவிடுகிறேன்".

"அப்படியானால் என்னையும் கூட்டிப்போங்கள்."

"நானு மாட்டேன் என்கிறேன்; ஆனல், உன் அம்மா விடமாட்டாளே."

அவளுக்கு ஆசை, அவனேடு தனியாகப் பிரயாணம் போகவேண்டு மென்று. அவனுக்குந் தான் அப்படி ஒரு வாய்ப்புக்கிடைக்காதா என்றிருந்தது. "அப்படியானல் கேட்டுப் பார்க்கட்டுமா, அம்மாவை?" என்ருன்.

"ம்........"

பசுபதி தட—தட வென்று கீழே இறங்கி, வீட்டின் பின்—கட்டுக்கு வந்தான். ராதையும் காபிப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அவனைத் தொடர்ந்தாள்.

பின் கட்டில் மாவு அரைத்துக்கொண்டிருந்தாள் வயதான விதவை ஸ்திரீ ஒருத்தி. அவனைக் கண்டதும் "ஏண்டாப்பா பசுபதி? என்ன உடம்பு உனக்கு? ஆபிசிலிருந்து வந்தவன் காபி கூடச் சாப்பிடாமல் மாடிக்குப் போய்ப் படுத்துக் கொண்டுவிட்டாயே" என்று கேட்டாள்.

"உடம்பு கொஞ்சம் சுற்றுப் பிரயாணம் கேட்கிறது, அலமேலு மாமி" என்று அவன் அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன அது?" என்று அவள் அரைப்பதை நிறுத்திவிட்டு இடது கையை அவன் நெற்றியில் வைத்துப் பார்த்தாள்.

"ஜுரம் ஒன்றுமில்லை மாமி; என் உடம்புக்குக் கொஞ்சம் பிரயாணம் தேவையாக இருக்கிறது."

"பிரயாணமா? அதுதான் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கோட்டைக்கும் ஜங்கிஷனுக்கும் பிரயாணம் செய்து கொண்டிருக்கிருயே."

"அது போதாது மாமி; கொஞ்சம் நெடும் பிரயாணம் வேண்டும்."

"ஏண்டா இப்படிக் கோணல்—மாணலாகப் பேசுகிருய், பசுபதி? சொல்வதை விளங்கச் சொல்லேன். ஊருக்கு அத்தையைப் பார்க்கப் போகிருயா?"

"அங்கே இல்லை மாமி; பட்டணத்துக்குப் போகிறேன்; நான் மாத்திரமில்லை.................."

"பின்னே?"

உங்கள் அநுமதியோடு ராதையையும் கூட்டிப் போய்க் காட்ட நினைக்கிறேன்."

"வேடிக்கைதான், போ; அவள் அங்கே வந்து தூபம் போட்டு அனுப்பினளோ, உன்னை?"

"அவளில்லை மாமி; எனக்கேதான்தோன்றிற்று. கூட்டிப் போகட்டுமா!"

"கூட்டிப் போகலாம், அப்பா; நீ செய்யாவிட்டால் வேறு யார் அவளுக்கு அதையெல்லாம் செய்யப் போகிருர்கள்? இருந்தாலும் பசுபதி, இன்னும் கொஞ்சகாலம், அவளை முறையாக உன் பெண்டாட்டி ஆக்கிக்கொண்ட பிறகு, இஷ்டப்படி எங்கே வேண்டுமானுலும் இழுத்துக்கொண்டு போ; அதற்கிடையில் இம்மாதிரி நெடும் பயணம் போக நாம் விரும்பினுலும், ஊரார் நாலு வார்த்தை சொல்லமாட்டார்களா?"

"ஆமாம்; ஊரார் என்ன சொல்லக்கிடக்கு? அவர் என்ன அந்நியமா?" என்று வருத்தத்தோடு குறுக்கிட்டாள், ராதை.

"அந்நியமில்லைதாண்டி அம்மா; உனக்கும் அவனுக்கும் நான் என்றைக்கோ முடிச்சுப் போட்டுவிட்டேன். இருந்தாலும், நாலுபேர் அறிய அந்த முடிச்சு விழுமட்டும் அந்நியராகத்தான் பழகவேண்டும்."

"ஆமாம்; நீ எப்பொழுதுமே இப்படித்தான் அம்மா; அன்று கல்லணைக்குக் கூட்டிப் போய்க் காட்டுகிறேன் என்ருர். பத்து மைல்களுக்குள்ளிருக்கும் அந்த இடத்துக்கே அனுப்பாதவள், இந்தப் பயணத்துக்கு இசைந்துவிடப் போகிருயா? எனக்கு வீட்டிலே அடைத்துக் கிடந்து அலுத்துவிட்டது. என்றைக்குத்தான் சுதந்திரமாக அவரோடு கை கோத்துக்கொண்டு எங்கும் போய் வரப் போகிறேனே?" என்று ராதை விசனித்தாள்.

பசுபதியின் நிலை இரண்டுங் கெட்டானுகப் போயிற்று. ராதை வருத்தப்படுவதைக் காண அவனுக்குச் சகிக்கவில்லை. அதோடு, அவள் அன்னை கூறுவதும் நியாயமாகவே பட்டது. "ஆம்; வருகிற சித்திரையில், எப்படியாவது அத்தையின் சம்மதம் பெற்று ராதைக்குத் தாலியைப் போட்டுவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான். அத்துடன், இப்படி முன் பின் யோசியாமல் ஓர் பிரயாணத்தை வைத்துக்கொண்டதும் தவறு என்று பட்டது. எனவே சொன்ஞன்: "வேண்டாம் மாமி; ராதை வருத்தப் படும்படி அப்படிப்பட்ட பிரயாணம் எனக்கென்ன வேண்டியிருக்கிறது? நான் பாஸையும் லீவையும் ரத்து செய்து விடுகிறேன்."

"நன்ருயிருக்கிறதே; எனக்காக நீங்கள் ஆசைப்பட்ட பிரயாணத்தை நிறுத்தவாவது." என்ருள் ராதை.

"ஆமாம்டாப்பா பசுபதி, அது நன்ருயிராது. எப்படியானுலும் ஆகட்டும்; நீ பட்டணம் போய்த் திரும்பிய பிறகு ஒரு நாள் அவளைக் கல்லணைக்கு அழைத்துப்போய்க் காட்டிச் சமாதானப் படுத்திவிடு" என்று மகளைத்தேற்றும் தோரணையில் பேசினுள் அலமேலு,

கடைசியில், மனமில்லாமல் பசுபதி மாத்திரம் பட்டணத்துக்குக் கிளம்பினுன். அவனை வழிய

னுப்ப வந்திருந்தபோதுதான் அவள் இரண்டாவது வகுப்புப் பிரயாணத்தைப்பற்றிப் பேசினுள்.

அன்று ரெயிலில் ஏககூட்டம். எப்படியோ முண்டியடித்து ஏறி ஜன்னலோரம் ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டான் பசுபதி. அவள் வெளியே ஜன்னலைப் பிடித்தவாறு நின்றுகொண்டு சொன்னுள்: "நான் வராதது நல்லதாயிற்று. வந்திருந்தால் எனக்கு இந்த இடத்தைத் தந்துவிட்டு நீங்கள் நிற்கும்படி ஆகியிருக்கும்."

"நின்றுல் என்ன ராதை; அந்தப்பிரயாணமே குஷியாகத்தான் இருக்கும்."

"இருந்தாலும் நான் ஏன் வரவில்லை தெரியுமா?"

"ஏன்?"

"மூன்றும் கிளாஸில் பிரயாணம் செய்ய எனக்கு இஷ்டமில்லை, அதனுல்தான்."

"ஆனுல் ரெயில்வே கிளார்க்குகளுக்கு மூன்றும் வகுப்புப் பாஸ்தானே கிடைக்கும்."

"கிளார்க்குகளுக்குத்தானே. அதற்குமேல் பதவி உயர்ந்தால்?"

"ஸ்டேஷன்மாஸ்டர் கிரேடு வந்தால்தான் இரண்டாம் வகுப்புப் பாஸ் உண்டு."

"நான் சொல்கிறேன் வேண்டுமானுல் பாருங்கள். இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களுக்குள், அந்த மகாராஜன் டிராபிக் மானேஜரின் தயவினுல் உங்களுக்கு ஸ்டேஷன்மாஸ்டர் கிரேடு வந்தே தீரும். அப்பொழுது ஸ்ரீமதி பசுபதி ஜம்மென்று ஸெகண்டு கிளாஸில் பட்டணத்துக்குப் போவாள்."

அவள் சொன்னது பலித்துவிட்டது, இரண்டு வருஷங்களுக்குள்ளாக அவனுக்கு ஸ்டேஷன் மாஸ்டர் பதவி கிடைத்து விட்டது. ஆனுல், அவள் இப்பொழுது ஸ்ரீமதி பசுபதியாக இல்லையே! வாடிபட்டிக் காட்டில் எந்தக் கிராமத்தானுக்கு வாழ்க்கைப்பட்டு எப்படி அலைந்துகொண்டிருக்கிருளோ?

ரெயில் திருச்சியை விட்டுக் கிளம்பு முன்பே, இப்படி ஓர் 'அவள் நினைவு' அவனை உலுக்கி எடுத்தது, இது மாத்திரந்தானு?

* * *

ஸ்ரீரங்கம் ஸ்டேஷன் வந்தது. வடநாட்டுக் குஜராத்திகள் சிலர் க்ஷேத்திராடனம் போய் விட்டோ, என்னவோ, திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் பசுபதி இருந்த வண்டியில் ஏறினுர்கள். அக் கூட்டத்தில் ஓர் யுவதி, பதினறு—பதினேழு வயதிருக்கும். பஞ்சாபிப் பாணியில் பைஜாமாவும், ஜிப்பாவும் அணிந்து கடைந்தெடுத்த பொம்மை மாதிரியிருந்தாள். அவளுடைய அந்த உடைகளை ஒரு தடவை பார்த்ததும், பசுபதியின் நினைவு மீண்டும் படமெடுத்துச் சீறிற்று. இப்பொழுது அவனும் அவளும் கல்லயாண சென்றுவந்த வைபவம் அதில் மிதந்தது.

* * *

பசுபதி பட்டணத்துக்குப் போனுன். அங்கே அவன் ஒன்றையும் சுவையோடு பார்க்கவில்லை. ஒவ்வொரு வேடிக்கை விநோதத்தைக் காணுந்தோறும், கூட இருந்து பார்த்து ரசிக்க ராதை யில்லாத குறைதான் அவனுக்குத் தோன்றிற்று. பத்து நாட்கள் லீவு போட்டிருந்தவன், ஏழு நாட்களை எப்படியோ தள்ளிவிட்டு, எட்டாவது நாளே திருச்சிக்குத் திரும்பிவிட்டான்.

"ஏன், அதற்குள் திரும்பி விட்டீர்கள்?" என்று கேட்டாள் ராதை.

"என் பட்டணம் திருச்சியில் தானிருக்கிறது என்பது இப்பொழுதுதான் தெரிந்தது; திரும்பி விட்டேன்" என்றான், அவன்.

"இன்னும் இரண்டு நாள் லீவை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"என் பட்டணத்தைப் பார்த்துக்கொண்டே போக்கப் போகிறேன்."

இந்தச்சமயத்தில் அலமேலு அங்கே வந்தாள். அவன் வேலைக்குப் போகப்போவதில்லை யென்று அறிந்ததும், அவள் சொன்னாள்: "அப்படியானால் உன் ராதையை நாளைக்கே கல்லணைக்கு அழைத்துப் போய்விடு, அப்பா; உன்னைப் பட்டணத்துக்கு அனுப்பிவிட்டு, இந்த எட்டு நாட்களாகப் பித்துப்பிடித்துப் போய்விட்டாள்."

"நீங்களும் வாருங்களேன்" என்றான் அவன் மெட்டுவிடாமல்.

"எனக்கு அதுதான் ஒன்று குறைச்சல்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள், அவள்.

* * *

மறு நாள் காலையில் அவர்கள் இருவரும் வண்டி பேசிக்கொண்டு கட்டுச்சோறுடன் கல்லணைக்குப் பயணமானார்கள். காவேரிக் கரையோடு சென்ற அந்தக்கரடு முரடான பாதையில் வண்டி ஆடி அசைந்து போய்க்கொண்டிருந்தது. ஆனால் பசுபதிக்கும் ராதைக்கும் அது என்னவோ இன்ப லோகத்துக்குப் பறந்து செல்லும் புஷ்பகவிமானமாகத்தென்பட்டது.

பகல் பத்து மணிக்கு வண்டி கல்லணையை அடைந்தது. ஊர்ப்பகுதியில் வண்டியை அவிழ்கச் செய்து. மூட்டை முடிச்சுகளுடன் இருவரும் கிளம்பினார்கள், அணையைச்சுற்றிப் பார்த்து ஆனந்தித்தார்கள். கரையோரமாக இருந்த ஓர் தோப்பில் தங்கி, கொண்டு வந்த உணவை முடித்துக்கொண்டு சிறிது நேரம் இளைப்பாறினார்கள். பிறகு நதிக்கரையோடு கொஞ்சதூரம் நடந்து வரலாமென்று புறப்பட்டார்கள். ஊடலும் காதலுமாக வார்த்தையாடிக் கொண்டே வெகு தூரம் வந்துவிட்டார்கன். இடம் நிர்மானுஷ்யமாக இருந்தது. அப்பொழுதைக்கப்பொழுது ஓவ்வோர் பறவையின் குரலும், தூரத்தில் அணையிலிருந்து ததும்பி விழுந்த நீரோசையையும் தவிர, அங்கே அமைதிதான் நிலவிற்று.

ஸ்படிகம் போன்று, தெள்ளத்தெளிய நீரோடிற்று, காவேரியில். அதன் கரு நீலவண்ணமும், அமைதியான ஓட்டமும் பசுபதிக்கு நீந்திக் "குளிக்கும் ஆவலை எழுப்பின. அதை அவன் ராதையிடம் கூறியபோது, குளியுங்களேன்" என்றாள் அவள்.

"நீ?"

"எனக்கு நீந்தத் தெரியாதே."

"நான் கற்றுத் தருகிறேன்."

உல்லாசத்தின் உச்சியில் தன்னை மறந்தவளாய், "சரி" என்றாள், அவள்.

இருவரும் குளிக்க இறங்கினார்கள். அவன் கைகளில் அவள் மிதந்தாள். அவனோ அவள் உடல் வண்ணத்தில் மிதந்தான். வரப்போகும் சம்சார சாகரத்தில் நீந்திக் கரையேற இப்பொழுது ஒத்திகை நடந்தது.

அரை மணி நேர நீச்சுப் பயிற்சிக்குப் பிறகு இருவரும் கரை யேறினார்கள். அப்பொழுது தான் அவளுக்கு நினைவு வந்தது, தனக்கு மாற்றிக் கொள்ளப் புடவைத் துணி இல்லையே என்பது. அவனைப் பற்றிய வரையிலும் கவலையில்லை; கையில் கொண்டுவந்திருந்த துண்டைக் கட்டிக் கொண்டு குளிக்க இறங்கியதால் அவனுக்கு ஆடைகளிருந்தன.

"உங்களோடு பேச ஆரம்பித்து விட்டால், என்னையே மறந்து விடுகிறேன்; இப்பொழுது பாருங்கள், ஈரப் புடவையுடன் தான் வீடு திரும்பியாக வேண்டும்."

"சரிதான் போ; உடம்புக்கு ஏதாவது வந்தால் நானல்லவா அம்மாவுக்கு 'ஜவாப்' சொல்ல வேண்டும். நல்ல வேளையாக மனித நடமாட்டம் இல்லாத இடத்தில்தான் இருக்கிறோம். வெயில் நன்றாகக் காய்கிறது. காற்று வேறு 'ஜம்' மென்று வீசுகிறது. பேசாமல் என் பைஜாமா, சட்டைகளைச் சிறிது நேரம் போட்டுக் கொண்டு, உன் துணி மணிகளை உலர்த்தி எடுத்துக்கொள்,"

"வவ்வவ்வே" என்று வலித்தாள், அவள்.

"வலித்து என்ன செய்வது ராதை? இடமோ, காலமோ, அல்லது முன் நிற்கும் ஆளோ, நீ வெட்கப்படும்படி இருக்கவில்லை. பின் ஏன் இந்த ஆலோசனை? ஏன் இந்த நாணம்?"

"ஆமாம்; நான் உங்கள் பைஜாமா சட்டைகளைப் போட்டுக்கொள்கிறேன்; நீங்கள் என் ஈரப்புடவையை எடுத்துக்கொள்ளுங்கள்."

"ஏனம்மா, எனக்கு ஸ்திரீபார்ட் போட்டுப் பார்க்க ஆசையாக இருக்கிறதா, உனக்கு?"

"அதுவும் உங்கள் அழகுக்குப் பொருத்தமாகத் தான் இருக்கும். மேலும் நான் ராஜபார்ட் போட்டுக் கொள்ளும் போது நீங்கள் ஸ்திரீ பார்ட்டு போட்டுக் கொண்டால் என்ன?"

"பைஜாமாவும் சட்டையும் வடநாட்டுப் பெண்கள் பலர் வழக்கமாகப் போட்டுக் கொள்ளுகிறார்கள், தெரியுமா? அது ஒன்றும் ஆண் வேஷமல்ல".

"வர வர நீங்கள் ரொம்ப குறும்புக்காரர் ஆகிவிட்டீர்கள்."

கடைசியில் அவள் அவனுடைய ஆடைகளை வாங்கிக்கொண்டு கரையிலிருந்த ஓர் மரத்தின் மறைவுக்குச் சென்றாள்.

திரும்பி வந்தபோது!

"அசல் பஞ்சாபிக்காரி மாதிரியிருக்கிறாய் ராதை. இந்த டிரஸ் உன் அழகை ஆயிரம் மடங்கு பெருக்குகிறது" அவன் ஆவல் ததும்பும் கண்களுடன் அவளை விழுங்கி விடுவது போன்று பார்த்தான்.

அவனைவிட அவள் உயரமில்லையென்றாலும், பருவம் செழித்து நின்ற உடலாதலால் ஆகிருதி இருந்தது. எனவே அவன் உடைகள் அவளுக்குச் சற்றுப் பிடித்தமாகவே இருந்தன. உடலோடு ஒட்டி நின்ற அந்த ஆடையழகைக் கண்டு அவன் மாத்திரமென்ன, முற்றும் துறந்த முனிவர்கள் கூட, அச்சமயம் இரங்கித்தான் போயிருப்பார்கள்.

புடவையின் நுனியை அவன் ஒரு பக்கம், அவளொரு பக்கமாகப் பிடித்து உலரவைத்துக் கொண்டிருந்த போது. அவன் அவளைச் சீண்டிய சீண்டல்தான் கொஞ்சமா? அவையனைத்தையும் ஆனந்தத்தோடு ஏற்று நெளிந்து கொடுத்ததில் அவள் கொண்ட களிப்புத்தான் சொல்லில் அடங்குமா!

இப்படிப்பட்ட உல்லாசவாழ்க்கை, சுயேச்சையான, தங்கு தடையற்ற, ஆனந்தத் தனி வாழ்க்கை, எப்பொழுது நிரந்தரமாகும் என்று இருவரும் அன்றுமுதலே ஏங்க ஆரம்பித்தனர். ஆனால் அது நிரந்தரமாயிற்றா?

*　　　*　　　*

பசுபதி மண்ணில் வந்த ஒரு வருஷத்துக்குள்ளாகவே பெற்றோரைப் பறிகொடுத்து அநாதையானவன். அவனுடைய அண்டை வீட்டில் பார்வதி என்றொரு விதவை ஸ்திரி வசித்து வந்தாள். அவளுக்கு ஆசைக்கு ஒரு மகன். ஆனால் அவன், பர்மாவில் உத்தியோக மேற்று அங்கேயே பல காலமாகக் குடும்பத்துடன் நிரந்தரமாகத் தங்கி விட்டான். எப்பொழுதாவது நாலைந்து வருடங்களுக்கு ஒரு தடவை மகனையும் அவன் மனைவி மக்களையும் சில நாட்களுக்குப் பார்க்கக் கிடைக்கும் பார்வதிக்கு, ஆகவே அவள்

உள்ளத்தில் சுரந்து நின்ற புத்திர பாசம் அநாதை யான பசுபதியின் மீது தாவி அவனைத் தன் மக னாகவளர்த்து வரச் செய்தது.

பார்வதிக்குக் கணவன் விட்டுப்போன சொத் துக்கள் ஏராளமாக இருந்தன. அதோடு பிள்ளை யும் அடிக்கடி நிறைய அனுப்பிக் கொண்டிருந் தான். எனவே பசுபதி செல்வச் சூழ் நிலையிலே வளர்க்கப்பட்டான். "பி. ஏ. வரையிலாவது படிக்க வைத்து நல்ல வேலை ஒன்றில் அமர்த்தி விட்டேனானால், அவனை ஆளாக்கி விட்ட பெரு மையை அடைந்து விடுவேன்" என்று பார்வதி அடிக்கடி சொல்லுவாள்.

ஆனால், பசுபதி மெட்ரிக்குலேஷனை முடிக்கு முன்பே, அவளுக்கு அவனே சகலமும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. பர்மாவுக்குப் பரவிய யுத்தத் தின் பயனாக ஊருக்கு ஓடிவந்த கூட்டத்தோடு பார்வதியின் மகனும் அவன் குடும்பமும் வர வில்லை. அதோடு யுத்தம் முடிந்து ஆறேழு மாதங்களான பிறகும் அவனிடமிருந்து தகவலே இல்லையென்றான போது, பார்வதி, தன் மகனை யும் அவன் மனைவி மக்களையும் யுத்தத்துக்குப் பலி கொடுத்து விட்டதாகத் தீர்மானித்து விட்டாள். "அப்பனே பசு, இனி வயசுக் காலத்தில் எனக்குத் தவித்த வாய்க்குத் தண்ணீர் ஊற்றத் தங்கியிருப் பவன் நீ தாண்டா கண்ணே. ஆகவே, உன்னை மேல் படிப்புக்காக எங்கும் அனுப்ப மாட்டேன். மெட்ரிக்குலேஷனை முடித்துவிட்டாய். இனி வீட்டுக் காரியங்களைப் பார்த்துக்கொண்டு இங்கே யே இருந்தால் போதும்" என்றாள் அவள்.

ஆயின் பசுபதிக்கு இனியும் அவளுக்குப் பார மாக இருக்க மனமில்லை. தனக்கு வாழ்வளித்த அந்த உத்தமியின் மகனும் அவன் குடும்பமும் பர்மாவில் க்ஷேமமாக இருந்து, யுத்த பீதி முற் றும் ஓய்ந்ததும் வீடு திரும்புவார்கள் என்றே அவன் நம்பினான். 'படித்ததுபோதும்! இந்த மட் டோடு ஓர் உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு நம் வயிற்றை நாமே கழுவிக்கொள்ள வேண்டும். என்று எண்ணினான். 'அப்படி ஒருகால் அத் தையின் குடும்பம் (பார்வதியை அவன் அத்தை யென்றே அழைத்து வந்தான்.) அழிந்திருந்தால் நான் எட்டப்போய் விடவில்லையே; வயதுக்காலத் தில் அவளைக் கவனிக்காமலா விட்டுவிடுவேன்?' என்றும் நினைத்துக்கொண்டான்.

ஆகவேதான், அவன் முயற்சிசெய்து, தென் னிந்திய ரெயில்வேயில் வேலைக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டு, தொழில் முயற்சி பெறத் திருச்சிக்கு வந்து சேர்ந்தான்.

திருச்சியில் தனது நயமான நடவடிக்கைகளால் அவன் கவர்ந்திருந்த இருவருள் ஒருவர். அவனுக்கு உத்தியோகம் அளித்த டிராபிக் மானேஜர். மற்ற வள் ராதை. அவன் படிப்படியாகப் பதவியில் உயர டிராபிக் மானேஜர் உதவி வந்தார். ராதையோ, அவன் உள்ளத்தில் காதல் விதையை ஊன்றி அது செழித்துக் குலுங்கி வளர நீர் வளர்த்து உதவினாள்.

திருச்சி வந்தபோது, எங்கே தங்குவதென்ற பிரச்னை எழுந்தது பசுபதிக்கு. அவன் எளிய வாழ்வை மேற்கொள்ள விரும்புபவன். எனவே அதற்கேற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தான். கோட்டை ஸ்டேஷனுக்குச் சமீபமாக ஏழை விதவை ஒருத்தி காலேஜில் படிக்கும் பையன் களுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருக் கிறாள்; அவள் வீட்டுமாடியில் ஓர் அறை காலி இருக்கிறது என்று தெரிந்தும் அவன் அங்கேயே குடியேறி விட்டான், அப்படி குடியேறிய பொழுது, தன் வாழவுக்கு மணமூட்டும் சுகந்த புஷ்பம் ஒன்று அங்கே இருக்கிறதென்று அவன் நினைக்கவில்லை.

ஆனால், அவ் வீட்டில் அடியெடுத்து வைத்த உடனே, அந்த அழகிய மலர் அவன் கண்களில் தட்டுப் பட்டது. அதன் மணம் அவனுடைய வாலிப உள்ளத்தைக் கவர்ந்திழுத்ததே போல், அவன் வனப்பு ராதையையும் தன் வசமாக்கிக் கொண்டது. இருப்பினும், பிழைக்க வந்த இடத் தில், தங்க இடமும் உண்ண உணவும் அளிக்கும் ஓர் வீட்டில் வாலை நீட்டலாகாதென்று மனத்தைக் கட்டிப் பிடித்திழுக்க முயன்று வந்தான். ஆயின் அது சாத்தியமாகவில்லை. ஏனென்றால் ராதை அவனிடம் அப்படிப் பழகினாள். அவள் மாத் திரமா? அலமேலு கூட, 'பிள்ளை அநாதையானா லும், நிறையச் சொத்தும் சொம்பும் உள்ள இடத் தின் ஆதரவில் வளர்ந்தவன்; அச் சொத்துக்கள் அவனையே சேர இருக்கின்றன' என்றறிந்ததும், 'இவனைவிடத் தகுதியான வரன் ராதைக்கு யார் கிடைப்பார்கள்?' என்று தீர்மானித்துவிட்டாள்.

ஆகவே, அவர்கள் காதல் துளிர்த்தது; நாளொரு இலை விட்டுச் செழித்து வளர்ந்தது. ஆழ வேர் பாய்ச்சி, அடர்ந்த விருட்சமாயிற்று. ஆனால், கனி தரவேண்டிய தருணத்தில் அதன் தலையில் விழுந்த பேரடி!

* * *

கல்லணைக்குச் சென்று திரும்பிய ஒரு வாரத்துக் கெல்லாம் பசுபதிக்கு அத்தையிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அதில், தான் உடல் நல மின்றிப் படுத்த படுக்கையாக இருப்பதாகவும், எனவே, நீண்ட ஓழிவு வாங்கிக் கொண்டு உடனே வந்துசேர வேண்டுமென்றும் எழுதியிருந்தாள். பசுபதி அவ்வாறே லீவு வாங்கிக்கொண்டு புறப் பட்டுச் சென்றான். "அத்தையின் உடல் சுகத் துக்கு அடிக்கடி கடிதம் எழுதுங்கள். இந்த நிலை யில் அவர்களிடம் நமது கலியாணத்துக்கு அநுமதி கோருவது நியாயமில்லை. என்றாலும், சமயம் கிடைத்தால் என்னைப் பற்றிப் பிரஸ்தாபித்து வையுங்கள். இந்த அம்மா சம்மதிக்க மாட்டாளே, இல்லாவிட்டால், நானும் உங்களுடன் வந்து,

உங்களை வளர்த்து ஆளாக்கிய அந்த என் மாமி யாருக்குச் சேவைசெய்து பெருமையடைவேன். எதற்கும் ஊர் சென்றதும், அவர் நிலைக்குப் பெண் உதவி அவசியமானால் எழுதுங்கள்; எப்படியும் கிளம்பி வந்துவிடுகிறேன்" என்று கூறி அனுப்பினாள் ராதை.

'ஆனால், பார்வதி, ராதையின் சேவைக்குக் காத்துக் கிடக்கவில்லை. அவளினும் உரித்தான, கருத்துள்ள பெண், அவளைக் கவனிக்கச் சரியான சமயத்தில் வந்து சேர்ந்திருந்தாள்' என்பதைப் பசுபதி ஊர் சென்றதுமே அறிந்து கொண்டான். ஆம்; பார்வதியின் பேத்தி விமலி—பர்மாவிலிருந்த பிள்ளையின் மூத்த பெண் அங்கே இருக்கக் கண்டான், அவன்.

அவளை அவன் பத்து வருடங்களுக்கு முன்பு பார்த்தது. அப்பொழுது அவள் கவுன் அணிந்த சிறுமியாக இருந்தாள். 'பசு அண்ணா; பசு அண்ணா' என்று அவனைச் சுற்றி வந்தாள். இன்று அவள் பருவம் கொப்புளித்து நின்ற யுவதி.

விமலியே அவனிடம் தான் தனியாக ஊர் வந்து சேர்ந்த கதையனைத்தையும் கூறினாள். சண்டை மும்முரத்தில் தன் பெற்றோரும் தம்பி தங்கையரும் குண்டு வீச்சுக்குப் பலியானதும், தான் அநாதையாகத் திரிந்து தமிழர் ஒருவர் ஆதரவில் வளர்ந்து அவர் ஊர் திரும்பியபோது திரும்பியதையும் சோகம் ததும்பக் கூறினாள்.

அவள் சொன்ன கதையை அளவற்ற வருத்தத்தோடு கேட்டுவந்த பசுபதி, தொடர்ந்து பார்வதி கொண்டுவந்த பிரேரணையைக் கேட்டபோது திடுக்கிட்டுப் போய் விட்டான்.

பார்வதி சொன்னாள்: "அப்பா பசு, திடகாத்திரமாயிருந்தேன். இப்போதைக்கு என்னைக் காலன் கவர வரமாட்டானென்ற இறுமாப்பில், காலா காலத்தில் உனக்கு ஒரு கலியாணம் செய்து வைக்காதிருந்து விட்டேன். இப்பொழுது நோயில் விழுந்தபோது, அண்டையிலிருந்து ஏனென்று கேட்க உன் மனைவி யில்லையே என்று வருந்தினேன். மறுநாளே விமலி வந்து விட்டாள். என் மனசில் நெடுங்காலமாக உறங்கிக் கிடந்த எண்ணம் உருப் பெறுங்காலமும் சமீபித்து விட்டது. இதோ அருகிலிருந்து எனக்குச் சேவை செய்பவள், என் பேத்தியல்ல; உன் மனைவி. நான் கண் மூடு முன்பே அவளுக்கு அந்த உரிமையை வாங்கித் தந்துவிட விரும்புகிறேன்."

எங்கேயோ அதல பாதாளத்தில் விழுந்து விட்ட உணர்ச்சியுடன் கல்லாய்ச் சமைந்து விட்டான், பசுபதி, தன்னை வளர்த்தவள்; ஆளாக்கியவள். தனது நலன் பொருட்டு' எத்தனையோ உயரிய இடத்தில் வாழத் தகுந்த பெண்ணைத் தர முன் வந்திருப்பவள். அவள் கோரிக்கையை மறுத்தால் அதைவிட நன்றி கெட்டதனம் வேறு உண்டா? அவன் உள்ளரங்கத்தில் பெரும் போராட்டம் நிகழ்ந்ததென்னவோ உண்மையே. ராதையும் அவள் தாயும் அடையப் போகும் ஏமாற்றத்தை எண்ணியபோது அவன் உள்ளம் உடையத்தான் உடைந்தது. ஆயினும் இரண்டாவது எண்ணத்துக்கு அவன் இடம் கொடுக்கவேயில்லை. தன் காதலைப்பற்றிக் கூட அத்தையிடம் கூறவில்லை. "உங்கள் பிள்ளை நான்; இது போன்ற விஷயங்களில் தாயின் முடிவுக்கு எதிர் சொல்லப் பிள்ளைக்கு என்ன உரிமையிருக்கிறது?" என்று மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு சம்மதம் தெரிவித்துவிட்டான்.

அதே கல்லான மனத்துடன், உடனே ராதைக்கும் விவரங்களைத் தெரிவித்துத் தன்னை மன்னித்து மறந்துவிடு மாறு ஓர் கடிதமும் எழுதி விட்டான்

ஆனால் விதி! பாழும், சதிகார, விதியிருக்கிறதே அது எப்படிக் கூத்திட்டு விட்டது!

* * *

பசுபதி—விமலியின் கலியாணத்துக்கு நாள் குறித்தாகிவிட்டது. சகல ஆயத்தங்களும் ஆகிவிட்டன. இன்னும் எட்டு நாட்களில் அவர்கள் தம்பதிகளாக இருப்பார்கள். இந்த நிலையில் ஒரு நாள், யாரும் எதிர்பாராத விதமாகப் பார்வதி தலையைப் போட்டுவிட்டாள்.

அவள் ஈமக் கடன்களைப் பசுபதியே நிறைவேற்றினான். அதுபோல, அவளுக்கு அளித்த வாக்குறுதியையும் நிறைவேற்றிவிட விரும்பினான். ஆனால், விமலி இடையே சமர்ப்பித்த கோரிக்கை! ஐயோ, அது மாத்திரம் அத்தை உயிருடனிருக்கும் போதே தெரிந்திருந்தால்.........?

விமலி சொன்னாள்: "பசு அண்ணா, உங்களுடன் அண்ணாவாகவே பழகி வந்திருக்கிறேன். திடீரென்று மனைவியாக வாழ வேண்டுமென்றால் மனசு உடன்பட மாட்டேன் என்கிறதே! பாட்டியின் இறுதி விருப்பத்துக்கு மாறு சொல்லக் கூடாதேயென்று அன்று பேசாதிருந்தேன். இன்றுதான் அவள் இல்லையே, என்னை வேறு யாருக்காவது மணமுடித்துக் கொடுத்துவிட்டு, நீங்களும் வேறு எவளையாவது கட்டிக் கொள்ளலாகாதா? இந்தச் சொத்துக்களை வேண்டுமானால் முழுவதையும் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்.

பாதாளத்தில் விழுந்த பசுபதியின் மனது மெல்ல உயிர்த்தெழுந்தது, ஆம்; விமலிக்கே மனமில்லாதபோது, ராதையின் மனத்தையும் புண்ணாக்கி, செத்துச் சாம்பராகி விட்ட அத்தை கோரிக்கையை நிறைவேற்றுவதில் யாருக்கு என்ன திருப்தி ஏற்படப்போகிறது? ஆகவே, சடுதியில் விமலிக்குத் தகுதியான இடத்தில் ஓர் சிறந்த வரனை நிச்சயம் செய்தான். உடனே ராதைக்கும் தங்கள் தூய காதல், தன்னை நசுக்க

முயன்ற எதிர்ப்பைக் கொன்று நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்பிவிட்ட அற்புத நிகழ்ச்சியை விவரித்து, விரைவில் அவளைக்கைப் பிடிக்க வந்து சேருவதாக எழுதிப்போட்டான். அவ்வாறே விமலியின் திருமணம் முடிந்ததும், அவளுக்கு உரித்தான சொத்துக்களில் ஒரு காசு கூட எடுத்துக்கொள்ளாது திருச்சிக்கு விரைந்து வந்தான்.

ஆனால்—அலமேலு மாமயின் வீட்டில் வேறு மனிதர்கள் குடியேறியிருந்தார்கள்.

"யாரோ பட்டணத்துப் பக்கம் வேலையாக இருக்கும் பிள்ளையாண்டானும். அவனுக்கும் ராதைக்கும் போனமாதம் கலியாணமாயிற்று. பெண் மாப்பிள்ளையுடன், இந்தவீட்டு மாமியும் அங்கே புறப்பட்டுப் போய்விட்டாள்."

இந்தச் செய்தியைக் கேட்டவுடன் மீண்டும் தலை குப்புறச் சாய்ந்த பசுபதியின் உள்ளம், பிறகு தேர்ந்தெழவே இல்லை. இந்த இரண்டு வருடங்களாக, வேலையில் உழன்று, வாழ்வின் ஏமாற்றத்தை மறக்க முயன்றான். அவன் ஆனால் எளிதில் மறக்கக் கூடிய ஏமாற்றமா, அது? அதிலும், எவளுடன் ஒன்று சேர எல்லா வசதிகளும் இருந்தும், நிமிஷ விளையாட்டில் விதி பிரித்து விட்டதோ, அவள் வாழும் ஊருக்குப் போகிறபோது அவள், நினைவை என்னதான் முயன்றாலும் அவனால் அகற்றிவிட முடியுமா?

(அடுத்த இதழில் முடியும்)



DON'T WORRY!!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) நாதம் & கோ.
மட்டஞ்சேரி
கொச்சின்

(2) இண்டோ மெடிகல்
சப்ளைஸ்
205, தங்கசாலைத்தெரு,
(மிண்ட் ஸ்டிரீட்)
மதராஸ்-1

(3) நியூ டவுன் ஏஜன்ஸிஸ்
804-B. "ஹரிநிவாஸ்"
வின்செண்ட் ரோடு
தாதர் - பம்பாய் - 14

(4) L. M. முகர்ஜீ & ஸன்ஸ்
லிமிடெட்
167, தாரம்தலா தெரு
கல்கத்தா

(5) ஆந்திரா எம்போரியம்
76-78, டூப்ளெக்ஸ்தெரு
புதுச்சேரி

(6) கல்கத்தா மெடிகல் ஹால்
140, கடற்கரைத்தெரு
கொழும்பு (இலங்கை)

(7) ஓவர்ஸீஸ் ஜெனரல்
ஏஜன்ஸி
72, அம்பாங் தெரு
கோலாலம்பூர் (மலேயா)

Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms

READ WHAT SATISFIED CUSTOMERS SAY!

K P., Bombay-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."
V. K. East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

K. L. R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."
Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends,'

Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.

தொடர் கதை

எது இன்பம்

வெ. ரங்கராஜன்

அத்: **42.** திக்குத் தெரியாத...

சரசுவுக்கு வந்தச் சங்கடமான நிலையிலிருந்து விடுதலை கிடைத்தது! சாமா திடுதிப்பென்று அங்கே வந்து, "அம்மா! அப்பா கூப்பிடுகிறார்!" என்று சொல்லிவிட்டு அவள் வரவையும் பதிலையும் கூட எதிர் பார்க்காமல் கட கட வென்று இரண்டு எட்டில் மாடிப் படிகளைக் கடந்து போய் விட்டான். அடுப்பிலே ஏதோ காரியம் இருந்தது அவனுக்கு.

சரசு மௌனமாக எழுந்தாள். போய் விட்டு இதோ வந்துவிடுகிறேன் லீலா என்று சொல்பவளைப்போல் லீலாவைப் பார்த்தாள்.

லீலா சரசுவிடம் எவ்வளவோ பேச வேண்டுமென்று நினைத்தாள். தன் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த குறைகளை எல்லாம் கொட்டிவிட வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் மிகுந்து எழுந்த ஆத்திரத்தில் அவளால் அதிகம் பேசமுடியவில்லை. "சரசு! இதை அம்மாவிடம் சொல்லாதே!" என்று மட்டும் சொன்னாள்.

தன்முகத்தில் கேள்விக் குறிதெறிக்க லீலாவைப் பார்த்தாள், சரசு.

"அம்மாவின் மனசு ரொம்ப உடைந்திருக்கிறது. உறங்கிக் கொண்டிருந்த மனச்சாட்சி எழுந்து பயங்கர உருவத்தில் உள்ளூர அரித்து உருக்குலைத்துக் கொண்டிருக்கிறது. இந்த அலங்கோலத்திற் கெல்லாம் தான்தான் மூலகாரணமென்று மனதில் எண்ணம் எழுந்தால் அவள் ஜீவிக்கும் நாட்களை விரல்விட்டு எண்ணி விடலாம்!........

அவளும் போய்விட்டால்?.........ஊ ஹூம்! ....என்றால் எதிர்காலத்தைக் கற்பனை செய்யவே முடியவில்லை!" "சரி, சரசு! நீ போ! அப்பா காத்துக் கொண்டிருப்பார்!"

"வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதே லீலா! நம்மால் தவிர்க்க முடியாதவைகளைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்!"

"ஆம்; சரசு! புத்தகங்களில் அப்படித்தான் எழுதியிருக்கிறது! நானும் உன்னைப் போல் இருந்தால் கிளிப் பிள்ளையைப்போல் அதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லுவேன். ஆனால் எனக்கு வாழ்வில் கொஞ்சம் அனுபவம் வந்துவிட்டதாகக் கர்வம் ஏற்பட்டுவிட்டது. பொருளற்ற வார்த்தை இலட்சியங்களுக்கும் சமாளிக்க முடியாத நேரிடை வாழ்க்கையனுபவங்களுக்கு மிடையே நான் தவிக்கிறேன்! சரி! சரி! நீ போ, சரசு! நம் பேச்சுக்கு முடிவே இருக்காது!.........அப்பாவை வீணாகக் காக்க வைக்காதே!"

"இதோ வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டு சரசு அறையைவிட்டு வெளியேறினாள்.

அத்: 43. உள்ளமும் உடலும்

திரும்பி வந்த சரசு லீலாவின் பக்கத்தில் மௌனமாக உட்கார்ந்து அவள் முகத்தையே பார்த்தாள்.

அசாதாரண தைரியத்தைக் கற்பனை செய்துகொண்டு தன் பெருந்துயரை மறைக்க முயன்ற லீலா, "ஏன் சரசு! அப்பா எதற்காகக் கூப்பிட்டார்?" என்று பேச்சைத் துவக்கினாள்.

"த்ச்சொ! வேதனை லீலா! வேதனை; நல்ல மரத்தில் புல்லுருவி பாய்வதைப் போல் நன்றாக இருக்கும் உடலுக்குத் திடீரென எங்கிருந்தோ வியாதி வந்து விடுகிறது. அப்பாவுக்கு வழக்கமாக வரும் பைல்ஸ் கம்ப்ளெயிண்ட் இன்று வந்துவிட்டது. ஆபீஸில் அதிக வேலை செய்து விட்டால், எங்காவது கேமப் போய் விட்டு வந்த மறு நாள், இப்படி அது வந்துவிடுகிறது. நாளாக ஆக அப்பாவால் அதைச் சகிக்க முடியவில்லை.

இரவுவேளையில் இப்படி வந்தால் பிராந்தியுடன் இரண்டு மூன்று அவுன்ஸ் நல்ல விளக்கெண்ணெய் கலந்து குடித்துவிட்டுப் படுத்துவிடுவது அவர் வழக்கம். அதைக் கலந்து கொடுத்துவிட்டு வந்தேன். அடிக்கடி தூரத்தில் உள்ள கக்கூஸுக்குப் போய் விட்டு வருவது கஷ்டமாக இருக்குமென்று அவருடைய அறையுள் ஒரு ஸ்டூல் தயாரித்து வைத்திருக்கிறோம்.! அதைத் துடைத்து எடுத்து வைத்து ஒரு செப்புத் தவலையில் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வந்தேன்!" என்றாள், சரசு.

சபேசன் அத்தகைய வியாதிக்கு உள்ளாகி இருப்பது லீலாவுக்கு அது வரையில் தெரியாது. இப்போதுதான் தெரிந்து கொண்டாள். மடிப்புக் குலையாத அவர் உடையையும் மினு மினுப்புடன் இருக்கும் அவர் மேனியையும் கண்டு அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தாள், அவள்! 'ஓ! இது என்ன வாழ்வு? யாருக்குமே துன்பக் கலப்பற்ற இன்பம் இல்லையா?' என்று எண்ணியது லீலாவின் மனம். சபேசன்மீது அவள் பரிதாபம் கொண்டாள். "ஏன், சரசு! அவருக்கு இரவு ஆகாரம் என்ன? மூல உபத்திரவம் உள்ளவர்கள் தங்கள் உணவில் மிகவும் கட்டுத்திட்டமாக இருக்க வேண்டுமாமே?" என்று அக்கரையுடன் சரசுவிடம் சொன்னாள்.

"ஆமாம். அதுவும் இன்று இரவு அவருக்குச் சாப்பிடவே மனம் ஒடாது. ஐந்தாறு முட்டைகளை உடைத்துப் பிராந்தியில் கலந்து குடித்துவிட்டுப் படுத்துக் கொள்வார். மறு நாள் காலையில் சற்றே குணமாகிவிடும்! அதற்காகத்தான் சாமாவைக் கடைக்கு அனுப்பியிருக்கிறேன்!" என்று சொன்னாள, சரசு.

லீலா ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள்.

அத்: 44. இளவேனிலில் நடந்தது.

சுக்கிலபக்ஷ சதுர்த்தசி. சிதறிக் கிடந்த மேகக் கூட்டங்கள் அவ்வப்போது பிறைச் சந்திரனை மறைத்து விலகிச் சென்று கொண்டிருந்தன. பூச்செடிக் கூட்டம் மலிந்த காவிலே எழில் மிக்க வதனமுடைய இளம் பெண்ணொருத்தி எதையோ போட்டுவிட்டுத் தேடுவதைப் போல், மிளிர்ந்த மீனினங்களிடையே சஞ்சரித்துக் கொண்டிருந்தது நிலவு.

இவ் வேளையில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வழக்கம் போல் திருமயிலாடியில் நின்றது. இரவு எட்டு மணிக்கு மேல் இருக்கும். ஸ்டேஷன் பிளாட்பாரத்திலே வளர்ந்திருந்த மரங்கள் இளவேனிலின் நிலவை மறைத்துக்

கொண்டிருந்தன. ஸ்டேஷன் கட்டிடத்திற்கு அருகில் கண்ணுறங்கிய பெட்ரோமாக்ஸ் லைட் ஸ்டேஷன் மாஸ்டர் மீது குற்றப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தது. 'எனக்கென்று ரயில்வேயில் கொடுக்கும் மண்ணெண்ணெயை அவர் தம் வீட்டு உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டு என் மானத்தை வாங்குகிறாரே! இப்படி எங்கள் குலத்தின் மானத்தை வாங்கிக் கொண்டதின் விளைவாக வல்லவா ஸ்டேஷன்களிலெல்லாம் மின்சார விளக்குகள் வந்துகொண்டிருக்கின்றன! ஒளி வீசுவதில் நாங்கள் குறைந்தவர்களா என்ன? போதிய கெரோஸின் ஊற்றினால்தானே!' என்று தன்குறையை வாய்விட்டுச் சொல்லி, முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு இருளை மிகைப் படுத்திற்றுப் போலும்!

"திருமயிலாடி!" ...... "திருமயிலாடி!" ... .என்று பிளாட்பாரம் முழுவதும் கத்திக் கொண்டே சென்றான் போர்ட்டர். திருமயிலாடி ஸ்டேஷனுக்கும் அவனுக்குமுள்ள அசைக்கமுடியாத உறவு அவன் குரலில் தொனித்தது.

கம் கணபதி ரயிலிருந்து இறங்கி ஒரு மரத்தடியில் நின்றான். மற்ற ஜனங்கள்போகட்டும் பின்பு போகலாம்என்று ஆனால் அங்கு இரண்டு மூன்று பேர்தான் இறங்கிப்போய்க்கொண்டிருந்தனர்.

'இதற்காகத்தானா நான் இந்தச் சின்ன ஸ்டேஷனில் நின்றேன்!' என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டு எக்ஸ்பிரஸ் வண்டி நகர்ந்து மறைந்துவிட்டது.

நின்றுகொண்டிருந்த கணபதியிடம் வந்து, "ஏனய்யா! வடக்கே போறீங்களா? அல்லது இந்த வண்டியிலே வந்தீங்களா?" என்றுகேட்டான் போர்ட்டர். "வடக்கே போறேன்?" என்றான் கணபதி.

போர்ட்டர் தன் கையிலிருந்த மூன்று டிக்கட்டுக்களை எடுத்துக் கொண்டு தூரத்தில் கீழே விழுந்துகிடந்த ரயில் சாவியை எடுக்கப் போய்விட்டான். சாவியை எடுத்துக்கொண்டு திரும்பி வந்தவன், கணபதியைப் பார்த்து, "ஐயா, யார் வீடுங்க?" என்று ஒரு கேள்வி போட்டான். 'டிக்கட்டில்லாப் பிரயாணமோ!' என்று, அவன் மனதில் சந்தேகம் தோன்றித்தான் இருந்தது. இருந்தாலும் கணபதியின் கம்பீரமான முகத்தைப் பார்த்ததும் அவனால் அப்பட்டமாக அப்படிக் கேட்க முடியவில்லை.

"தேவாரத்தார் வீட்டுக்கு வந்திருந்தேன்! இன்றைக்கு மெயில் லேட்டா என்ன?" என்று மிடுக்காகக் கேட்டான், கணபதி.

போர்ட்டரின் சந்தேகம் சற்றே தெளிந்தது. "ஆமாமுங்க! அது இருக்கட்டுமுங்க! அவரு மாரடைச்சி செத்துப் போனாருங்களாமே! அதானா? இல்லாட்டி யாராவது செய்வினை செஞ்சி சாவடிச்சுட்டாங்களா?"

போர்ட்டரின் கேள்விகளுக்குக் கணபதியால் பதில் சொல்ல முடியவில்லை. ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு, "அதெல்லாமில்லை! மாரடைப்புத்தான்!" என்று சொல்லி மழுப்பினான். 'என்ன! சங்கரன் உண்மையாகவே மாரடைப்பால் இறந்துவிட்டானா? அல்

லது போர்ட்டர் ஆள் மாறாட்டமாகக் கூறுகிறான்?'

"ஊர் பேச்சுக்கு தலையேது காலேதுங்க! தங்கச்சிகிட்டே பத்தாயிரம் ரூபாய் பணம் வாங்கியிருந்தாராம்! அந்த அம்மா கேட்டப்ப பணமே வாங்கலென்னு சாதிச்சுப்பிட்டாராம்! அந்த அம்மா மனம் தாங்காமே கோவிலிலே சீட்டெழுதிக் கட்டி விட்டாங்களாம். என்ன என்னமோ சொல்லிக்கிறாங்க! எனக்கு என்னங்க தெரியும்? இங்கே வரவங்க போறவங்க சொல்றதுதானே! உண்மை என்ன என்றுதான் உங்களைக் கேட்டேன்!'' என்றான். போர்ட்டர்.

'சந்தேகமில்லை. சமாச்சாரம் சங்கரனைப் பற்றியதுதான். இதென்னடா தர்ம சங்கடம்! இவனுக்கு என்ன சொல்வது?' என்று நினைத்து மென்று விழுங்கிக் கொண்டே, "அவர் கருமித் தனம் ஊராருக்குப் பிடிக்காது. அதனாலே, செத்தவன் சேதி பெருஞ் சேதின்னு, கதை கட்டி விட்டிருப்பாங்க!'' என்று சொல்லி, சமாளித்துக் கொண்டான்.

"உம்! அப்படிச் சொல்லுங்க! அப்பா! மனுஷன் மகா கருமி! நாள் கிழமையிலே ஒண்ணு கிள்ளித் தெறிக்கமாட்டாரு!'' என்று சொல்லிக்கொண்டே ஸ்டேஷனை நோக்கிச் சென்றான், போர்ட்டர்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் மேலும் கீழுமாய் நடைப் போடுவதாய்ப் பாவனை செய்து, கிழக் கோடியின் வழியே நடந்து சென்று, கம்பிவேலியைத் தாண்டி வண்டிப் பாதையில் நடந்து சென்றான், கணபதி.

போர்ட்டரிடம் மிக நிதானமாகப் பேச முடிந்தது அவனுக்கு திருப்தியை யளித்தது. பைத்தியமாக நடித்த நடிப்பு, பழக்கமாகவே போய்விடாமல் தன் நிதானத்தைப் பெற்றுப் பேச முடிந்ததில் சந்தோஷம்! ஜெயில் வாழ்க்கையில் வெறுப்புற்று, பைத்தியமாக நடித்து தப்பியோடி வந்துவிட்டதை நினைக்கும் போது, கணபதி தனக்குத்தானே தன் பாராட்டுதலைச் சொல்லிக் கொண்டான்.

மனிதனுக்குக் கோபம் இயற்கை. கோபத்தில் தகாத காரியத்தைச் செய்து விடுகிறான். கோப வெறி தணிந்து மன அமைதி ஏற்பட்ட பிறகு அவன் மனச்சாட்சியே சித்திர வதை செய்கிறது. இது போதாதா? அறிவும் உணர்ச்சியுமுள்ள மனிதனுக்கு மனச்சாட்சி விதிக்கும் தண்டனையைவிட வேறு தண்டனை அவசியமா?

கணபதி அவசியமில்லை என்றே கருதினான். ஆகவே அவன் வறட்டுச் சட்ட திட்டங்களுக்கு உட்பட விரும்பவில்லை. 'சினம் கொண்ட மனத்திற்குச் சிறைவாசமா தண்டனை? சினம் கொண்ட மனம் தெளிந்த பின்பு வேதாந்தத்தை யல்லவா நாடுகிறது! மேலும் கீழ் நிலைக்குத்தள்ளி, சினம் வளர்க்கும் சூழ்நிலையைத்தான் கொடுப்பது சட்டம் என்றால், அதை உடைத்துத் தகர்த்தாலென்ன? சிறைச் சட்டதிட்டங்களை மனோதத்துவ நிபுணர்கள் செய்யவேண்டும்!' — இப்படியெல்லாம் எண்ணினான் கணபதி!

தான் சிறையிலிருந்து தப்பி வந்துவிட்டது சரியென்றும், தனக்கு அந்த உரிமை உண்டென்றும் அவன் எண்ணினான். அவன் படித்த மனோதத்துவ புத்தகங்கள் அதைத் தான் அவனுக்குச் சொல்லின. தன் அனுபவத்தில் கண்டவைகளைக் கொண்டு "குற்றமும் தண்டனையும்"— (crime and punishment) என்ற பெயரில் ஒரு புத்தகமே எழுதும் படியான எண்ணங்கள் அவன் மனதில் குமுறிக் கொண்டிருந்தன.

இந்நிலையில் போர்ட்டர் அவன் சிந்தனையை வேறு பக்கத்தில் திருப்பி விட்டுவிட்டான். 'சங்கரன் இறந்துவிட்டது உண்மையாகத்தான் இருக்கவேண்டும்? மாரடைப்பு என்றால் அது உண்டாவதற்கான காரண காரியங்கள் என்னவாயிருக்கும்? அம்மாவிடமிருந்து வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டானா இல்லையா? அது என்னவாயிற்று? போர்ட்டர் பத்தாயிரம் ரூபாய் என்று சொன்னானே? அது மிகையாக இருக்குமோ! அல்லது ஒருகால் அம்மா உண்மையாகவே அவனிடம் அவ்வளவு பணம் கொடுத்திருந்தாளா?' இப்படி மனதில் எழ மேலே நடந்து கொண்டிருந்தான், கணபதி.

அத்: 45. சரசுவின் உள்ளம்.

ஏறக்குறைய அதே சமயத்தில் சென்னையில் நம் 'ஆனந்தநிவாஸில்', இரவு உணவிற்குப் பிறகு மாடி கைப்பிடிச்சுவரில் சாய்ந்தவண்ணம் சூழ்ந்திருந்த வீடுகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள், லீலா.

எண்ணற்ற வீடுகள்! எத்தனை குடும்பங்கள்! ஒவ்வொன்றும் ஒரு உலகம். ஒவ்வொரு ஆண் பெண்ணின் உள்ளத்திலும் தனியான ஆசாபாசங்கள்!—இப்படி உலகத்தில் எத்தனை கோடி ஜனங்கள்!

இந்த எண்ணம் வந்தவுடன் தன்னையே பற்றியும் அண்ணாவைப் பற்றியுமே நினைத்துக் கொண்டிருப்பது லீலாவுக்கு வெட்கமாக இருந்தது. தன்னைப்போல் உலகில் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்வை மட்டுமே எண்ண ஆரம்பித்துவிட்டால், மனதைக் குழப்பிக்கொண்டு வேதனைப்பட ஆரம்பித்துவிட்டால்! — இல்லை. அதற்கு அவசியம் இருக்கவில்லை. சரசுவைப் போன்றவர் வேதனைப்பட என்ன இருக்கிறது?

எப்போதுமே வறுமையில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கும் அது சகஜமாகி விடுகிறது! எருமை தான் கம்பீரமாகப் படுத்திருக்கும் சகதியைச் சகதியாக நினைப்பதில்லை!

'நானும் சர்வ சாதாரணமான ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தால் இப்படி எண்ணி எண்ணி மனம் நையவேண்டியதில்லை சாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் கூட்டத்துடனே கூட்டமாக கவலையின்றிச் செல்லலாம்! ஆனால் வாழ்வு என்பதைக் கண்டுகொண்ட பிறகு சாவுக் கூட்டத்தில் சேர மனம் இடம் தர மாட்டேன் என்கிறதே! '—என்று இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, "ஐயோ!...அப்பா..." என்ற முனகல் லீலாவின் செவியில் விழுந்தது. வெந்துள்ள இதயத்தின் உணர்ச்சி நாடிகளைத் தொட்ட அந்தக் குரல் எங்கிருந்து வந்தது?

ஆம்! சபேசனின் குரல். தம் மூல வியாதி உபத்திரவம் தாங்காமல் அவர் அப்படி ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தார். அவருடைய நிலையை எண்ணுகையில் லீலாவுக்குப் பரிதாபகரமாக இருந்தது செல்வம் கொழிக்கும் வாழ்விலும் ஒரு பெரும் மனக்குறை.

தனி மனிதன்—மனித குலம்—சுகித்து வாழ இன்றியமையாதுவேண்டியவை என்ன? பணமா? ஆரோக்கியமா? அறிவா? தன்னை வென்று மறக்கும் யோக சித்தியா? சரசு மாடிப் படிகளில் ஏறி வரும் காலடிச் சப்தத்தைக் கேட்டு லீலாவின் கவனம் திரும்பியது.

சரசு நேரே தன் அறைக்குள் சென்றாள். அங்கு லீலா இல்லாததைக் கண்டு மாடி வராந்தாவின் பக்கம் திரும்பினாள்.

"சரசு! அப்பாவுக்கு எப்படி இருக்கிறது? எப்போதையும்விட இப்போது உபாதை அதிகமோ?" என்று கேட்டாள், லீலா.

"இல்லை. இப்போது எவ்வளவோ குறைவு என்று சொல்லவேண்டும். ஒவ்வொரு நாட்களில் அவர் படுக்கையில் கடகடவென்று புரண்டு அதிக சத்தம் போடுவார்!"

"பாவம்! இவருக்கு இந்தமாதிரி வியாதி எல்லாம் வரக்கூடாது."

"இது என்ன பெரிய வியாதி? ஆபரேஷன் செய்து கொண்டால் குணமாகிவிடும் என்கிறார் டாக்டர். அதற்கு அப்பாவுக்கு லீவு கிடைக்கவில்லை. சேர்ந்தாற்போல் இரண்டு மாதங்கள் லீவு எடுப்பதானால் பெரிதாக இருக்கிறது. உத்தியோக வட்டாரத்தில் அதற்குள் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விடுமாம்! அவரை முந்திக் கொண்டு சிலர் உத்தியோக உயர்வு பெற்று விடக் கூடுமாம்."

"அதற்காக எவ்வளவு நாள் இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது? மனச்சாந்தி யல்லவா முக்கியம்!

"ஆமாம் அப்பாவும் அதைச்சொல்வார். ஆனால் குடும்பத்தின் நன்மையை உத்தேசித்து அவர் தம் சந்தோஷத்தைத் தியாகம் செய்கிறாராம்!"

"பாவம்!......."

"ஆமாம். என்ன செய்வது'— அது கிடக்கட்டும், நீ ஏதோ உன்னைப்பற்றிச் சொல்லப் போவதாகச் சொன்னாயே! சொல், கேட்போம்!" என்று பேச்சைத் திருப்பினாள், சரசு.

"முதலில் நான் கிராமத்திலிருந்து இங்கு வந்த காரணம் உனக்குத் தெரியுமா?" என்று தொடங்கினாள், லீலா.

"என்னைப் பார்க்க வந்திருக்கிறாய் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் நான் திருமயிலாடிக்கு வந்து பார்த்துவிடுவது என்றே ஒரு முறை கிளம்பி விட்டேன். அம்மா தான் தடுத்து விட்டாள். இல்லாவிட்டால் புறப்பட்டு வந்தே இருப்பேன், நீ நிஜம் என்று நினைத்தாலும் சரி; பொய்யென்று தள்ளினாலும் சரி! உன் முகம் என் கண்முன்னாலேயே இருந்தது, லீலா. உன்னைப்போல் மனதைக் கல்லாகச் செய்துகொள்ள மாட்டேன். விலாசம் தெரிந்திருந்தால் உன்னைப்போல் என்னால் கடிதம் போடாமல் சும்மா இருந்திருக்கவே முடியாது. உனக்குத் துக்கம் இருக்கிறது. மன அமைதியின்றி அதையே எண்ணி வருத்தப்படக் காரணம் உண்டு. இருந்தாலும் மனதின் ஒரு மூலையில் சிநேகிதியின் ஞாபகம் வராமல் போனது எனக்கு எவ்வளவோ வருத்தத்தைக் கொடுத்தது. போனது போகட்டும்; இனிமேல் திருமயிலாடிக்குப் போகும் பேச்சை எடுக்காதே! உன்னைச் சரியான நிலைக்குக் கொண்டு வரும் வரை, உன் சௌகர்ய அசௌகர்யங்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்க்கும் ஒரு ஆசாமி பொறுப்பை ஏற்றுக்கொண்டு என் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு போகும் வரை, உன்னை விட்டுப் பிரிவதாக எனக்கு எண்ணம் இல்லை. இந்த வீட்டில் என் விருப்பத்திற்குத் தடை சொல்பவர்கள் இப்போது யாரும் இல்லை, அநேகமாக இன்னும் கொஞ்ச நாட்களில் அந்த ஸ்தானத்தை உனக்குக் கொடுத்துவிட வேண்டுமென்பதுதான்........."

"ஓ! "என்று சொல்லிக் கொண்டே சரசுவின் வாயைப் பொத்தினாள், லீலா.

சரசு தன்னையும் மறந்து களுக்கென்று சிரித்து விட்டாள். பிறகு லீலாவின் கைகளைத் தன் கைகளால் பிடித்துக்கொண்டு, "என் லீலா! என் அண்ணாவை உனக்குப் பிடிக்கவில்லையா என்ன? நீ முன்பு கிண்டல் செய்த அசட்டு அண்ணா என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா? சென்ற ஐந்து வருஷங்களுள் அவன் எவ்வளவு சமர்த்தாகப் போய்விட்டான் தெரியுமா? காசி சர்வகலா சாலை என்றால் இலேசா என்ன? சென்னைக் கலா சாலையில் இடம் கிடைக்காதது சௌகர்யமாய்ப் போயிற்று. சென்னையில் படித்திருந்தால் அண்ணாவுக்கு இவ்வளவு விசாலமான அறிவும் உலகியல் ஞானமும் வந்திருக்காது. நீயே அவனை நேரில் பார்த்தபிறகு சொல்லேன்! அண்ணாவைப் பற்றித் தங்கை வானளாவப் புகழ்கிறேன் என்பாய்!........."

"சரி! சரி! என்னை ஏதோ சொல்லச் சொல்லி விட்டு நீ கதைக்க ஆரம்பித்துவிட்டாயே! உன் அண்ணா பிரகஸ்பதிதான். இல்லை என்று நான் சொல்ல வரவில்லையே!—கேள் சரசு! நான் மறுபடியும் திருமயிலாடிக்கே போகிறேன். நான் இங்கு வந்த வேலை முடிந்து விட்டது."

"என்ன! எதற்காக வந்தாய்? இன்று ஒரு நாளைக்குள் முடிந்த வேலை, அது என்ன வேலையாம்?"

"அப்பா இன்ஷ்யூர் செய்திருந்தார். அந்தப் பணத்தின் பாதிப் பாகத்தை என் பெயருக்கு எண்டௌமெண்ட் செய்திருந்தார். அதை வாங்குவதற்காக வந்தேன்!......"

"சரி. வாங்கிக் கொண்டாயல்லவா? உடனே திரும்பிவிட வேண்டுமா? அங்கு என்ன அப்படித் தலைபோகும் காரியம்?"

"பணம் கைக்கு வரவில்லை. அதில் இன்னும் தகராறு இருக்கிறதாம்!"

"உம்!......பிறகு?"

"நாளைக்குப் போகட்டுமா? நாளை மறு நாள் போகட்டுமா!"

"தங்கள் விருப்பம்!"

"பார்த்தாயா! கோபித்துக் கொண்டாயே, சரசு! இன்னும் இதே சிறுபிள்ளையாகத்தானே இருக்கிறாய்? காலேஜில் படித்த பெண் இப்படியெல்லாமா கோபித்துக் கொள்கிறது?—வாழ்வு விளையாட்டா என்ன?"

"அட? வாழ்வைக் கண்டுவிட்டாயா, நீ! பலே! எத்தனைப் பேரன்களைப் பெற்று, தலை நரைத்து விட்டதம்மா உனக்கு? நீயும் ஒரு புஸ்தகம் எழுதேன்! என்னைப்போல் பொழுது போகாத பெண்கள் வாழ்ந்து நரைத்த பிறகு தெரிந்து கொள்வதைவிட வாழ்வின் முதற்படியிலேயே எல்லாவற்றையும் அறிந்துகொண்டு கஷாயம் உடுத்திக் கிளம்பி விடுவோமே!"

"நீ நையாண்டி செய்கிறாய், சரசு! ஆனால் என் உண்மை நிலைமை உனக்குத் தெரியாது?"—இதைச் சொல்லும் பொழுது லீலாவின் மனம் நெகிழ்ந்தது. சரசுவைப் போல கவலையற்ற நிலையில் இருக்க வேண்டியவள்தானே அவளும்!

திடீரென்று பட பட டப டபார் என்று கோடையிடி ஒன்று தோன்றி, பயங்கர மின்னல் வீச்சிட்டு, தெருவில் விளையாடிக் கொண்டிருந்த பத்து வயதுச் சிறுவனின் கண்ணொளியைப் பறித்துக் கொண்டு போய் விட்டதைப்போல், அகாலத்தில் தன் தந்தையைக் காலன் கவர்ந்து சென்று



விட்டானே! என்று எண்ணியதோ அவள் உள்ளம்!

"லீலா! சொல்! மனதில் இருப்பதை வெளிப் படையாக நான் பேசுவதைப் போல் பேசு! மனம் விட்டு என்னிடம் கூடப் பேசா விட்டால் வேறு யாரிடம்தான் பேசப் போகிறாய்?"

"சரசு, உன் உள்ளம் தெளிந்த நீரைப் போன் றது. அதனால்தான் உன்னை நான் அதிகம் விரும்புகிறேன். நமது காலேஜ் சிநேகிதிகள் பலர் இருக்க உன்னை நாடி நான் வந்ததிலிருந்தே இது உனக்குத் தெரிந்திருக்கும். நீ என்ன என் னவோ மனக் கோட்டையெல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறாய் போல இருக்கிறது! என் நிலையைச் சொன்னால், 'சீ! இவ்வளவுதானா! இவளையா என் அண்ணியாகக் கொள்வது?' என்று வெறுத்து ஒதுக்கிவிடுவாய்!—இப்படிச் சொல் வதால் நான் உன் அண்ணாவை மணக்கச் சம்ம தித்து விட்டேன் என்று நினைத்துக் கொண்டு விடாதே! அது வேறு விஷயம்! உதாரணத்திற் காகச் சொன்னேன்! நான் இந்தச் சமயத்தில் பரம ஏழை. அப்பா ஒன்றும் மீதி வைத்து விட்டுப் போகவில்லை என்பது உனக்குத் தெரியும். அதோடல்ல. அன்று உன் அம்மா சொன்னது உண்மைதான். அப்பாவுக்குப் 'பத்து' ரூபாய்க்கு மேல் கடன் இருக்கிறது. அதில் ஒன்றையும் இன்னும் கொடுக்கவில்லை. எங்கள் நிலையைக் கடன்காரர்கள் ஊரம்பலப் படுத்திவிடுவார்கள் போல் இருந்தது. இதை அறிந்த அண்ணா மிகவும் சங்கடப்பட்டான். அப்பாவுக்குக் கடன் இருந்தது என்றே யாரும் தெரிந்துகொள்ளக் கூடாது என்பது அவன் எண்ணம். ஆகவே கடன் காரர்களுக்கெல்லாம் ஜாயிண்ட் கையெழுத்துப் போட்டான்! பிறகு அவன் சிறைக்குச் சென்ற விவரந்தான் உனக்குத் தெரியும்!

நாங்கள் திருமயிலாடிக்குப் போனபொழுது கடைசியாக என் கைகளிலிருந்த வளையலைவிற்று கைச்செலவுக்கு எடுத்துக்கொண்டு போனோம்! என்றால் நீ நம்பமாட்டாய். அண்ணாவின் பேரில் கட்டியிருந்த ஜாமீன் தொகையை வாங்கி, சில அவசரக் கடன்களைத் தீர்த்துவிட்டோம்.

இராமேசுவரம் போனாலும் சனீசுவரன் தொ டர்ந்து வந்தது. அங்கும் எனக்கு மன நிம்மதி இல்லை. திருமயிலாடி மாமா என்னை இரண்டாந் தாரமாக மணம் செய்து கொள்ள விரும் பினார்!........"

"யார்? சங்கரன் மாமாவா? வெண்சாமரம் கெட் டகேட்டுக்குப் பட்டுக்குஞ்சம் வேண்டியதுதான்!" லீலாவின் முகத்தில் சோகரேகைகள் படர்ந்திருப் பதைக் காணாமல் இருந்திருந்தால் சரசு கலீ ரென்று சிரித்திருப்பாள்.

"அதன் பிறகு அம்மாவுக்கும் அவருக்கும் சண் டை வந்தது. இதன் விளைவாக அம்மா அவரிடம் கொடுத்து வைத்திருந்த பத்தாயிரம் ரூபாயும் பறி போயிற்று!"

"அது நிஜந்தானா லீலா? அடடா! 'வதந்தி' என்று சொல்கிறோம்! அதில் சில சமயங்களில் உண்மை இருக்கத்தான் இருக்கிறது. அம்மா முன்பே இதைச் சொன்னாள். அப்போது நான் நம்பவேயில்லை!"

"நிஜம் தான். அதன் பிறகு மாமாவின் வீட் டில் களவு நடந்தது சொத்து என்று எண்ணிய அவர் பணம் முழுவதும் திருட்டுப் போய்விட்டது. மாமா அன்ன ஆகாரமில்லாது அழுது புலம் பினார். என்ன மாயமோ தெரியவில்லை, பின்பு பணம் வீட்டின் இரண்டாம் கட்டிலேயே இருந் தது!"

"உம்!"—சரசுவுக்கு இதெல்லாம் ஆச்சர்யமாக இருந்தது.

"எங்கிருந்தோ வந்த மந்திரக்காரன் ஒருவன் அம்மாவின் மீது பழி சுமத்தினான். ஊரார் அதை அப்படியே உத்தாரணம் செய்தனர். பணம் கிடைத்த சந்தோஷத்தில் மாமாவின் மார்பு அடைத்துக் கொண்டது! செத்துவிட்டார்."

"அட!"

"அண்ணாவை மீட்கலாம் என்று நினைத்து இங்கு வந்தேன். பைத்தியம் பிடித்துத் தன்னை விடுவித்துக்கொண்டு ஓடிவிட்டான் அவன்......... சரசு! மனவேதனைக்கு இன்னும் என்ன வேண்டும், இதைவிட அதிகமாக என்ன இருக்கிறது. சொல்? என் மனம் கல்லாகி வாழ்வைச் சபிக்கிறேன் என் றால் அது தவறு என்கிறாயா?

"இவ்வளவும் ஆயிற்று. திருமயிலாடி போய்ச் சேருவதற்குப் போதுமான பணம் என்னிடம் இருக்கிறது. அது என் கையைவிட்டுப் போய் விடுமுன் அங்கே போய் விடலாமென்று எண்ணுகி றேன். அகண்டா காரமான வானவெளியிலே நிலைத்துப் பறக்கும் காற்றாடி ஒரு சிறுபிள்ளையின் கைக்கயிறு இழுபடும் திசையிலே திரும்பி இயங் குவதைப்போலே, அல்லாடிக் கொண்டிருக்கிறோம் நாங்கள் இருவரும்!— பார்ப்போம்! இதுதானா? இன்னும் உண்டா?"

சரசு மௌனமாக இருந்தாள். என்ன சொல் வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. தன் கண் களில் துளித்த நீரை மறுபக்கம் திரும்பி மறைக்க முயன்றாள். அதற்குள்ளாக ஒரு பெரிய கண்ணீர்த் துளி அவள் புறங்கைமேல் விழுந்து தெறித்தது; அக்கண்ணீர் விழுந்த இடத்தில் கதகதவென்று எழுந்த உணர்ச்சி சரசுவின் இதயத்திலே சென்று, ஓர் உணர்ச்சி நரம்பைத் தழுவித் துடிக்க வைத் தது.

லீலாவின் கைகளைப் பிடித்துக்கொண்டபடி, "லீலா! நீ இதைவிட்டுப் போகவேகூடாது.

கொஞ்சநாள் இங்கு இருந்தபிறகு பார்த்துக்கொள் வோம்!'' என்று தன் உள்ளத்தில் எழுந்த வார்த்தைகளை மெல்லிய குரலில் சொன்னாள் சரசு.

மௌனமாக ஒரு ஆழ்ந்த பெருமூச்சுவிட்டாள், லீலா.

அத்: 46. நீறு பூத்த நெருப்பு

ஆழ்கடலின் உள்ளே ஓடும் நீரோட்டங்கள் பெரும் கொந்தளிப்புக்குக் காரணமாகின்றன. அமைதியான சாகரம் அப்போதுதான் தன் சக்தியைக் காட்டுகிறது. குன்றெத்த பெரும் இருப்புக் கலங்களும் தத்தளிக்க வேண்டியிருக்கிறது.

ஆழம் கண்டு விவரிக்க முடியாதது மனம். அதனுள் எழும் ஒவ்வொரு சிந்தனையும் செயலுக்குக் காரணமாக மனிதனுள் மறைந்து கிடக்கிறது. 'இதை ஏன் செய்தோம்?' என்று நாமே நம்மைக் கேட்டுக் கொள்கிறோம். இது எப்போதோ நினைத்த சிந்தனையின் எதிரொலி என்பதை நாம் உணர்வதில்லை.

திருமயிலாடி பார்வதி அதே நிலையில்தான் தவித்துக் கொண்டிருந்தாள். ஏதோ அந்தரத்தில் பறப்பதைப் போன்று அவள் உடல் புல்லரித்தது. எதையோ தேடித்தேடி அலைவதைப்போல் அவள் மனம் அலமலந்தது. தனக்கு உரிமையான எதையோ அடைய விரும்புபவளைப்போல் ஆதங்கம் அடைந்தாள். இவைகளின் விளைவாக அவளுள்ளே மங்கிக் கிடந்த பெண்மை புத்துயிர் பெற்று மேலோங்கி வளர்ந்தது. அவளால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பதினெட்டாவது வயதில் சங்கரன் அவளை மணந்து கொண்டான். அவளை மணக்கும் போது சங்கரனுக்கு முப்பது வயது இருக்கும். மணமான பிறகும் எப்போதும் போலச் சங்கரன் தன் நில புலன்களை வளர்ப்பதில் ஈடுபட்டு விட்டான். 'இவர் என்னை எதற்காக மணந்து கொண்டார்? அம்மா இறந்து விட்டாளே! சமையல் செய்து போட ஆள் வேண்டுமே! என்றுதான் மணந்து கொண்டிருக்கிறார்!' என்று எண்ணினாள், பார்வதி.

முதல் இரவில் சங்கரனின் ஆண்மையை அளந்துவிட்ட அவளுக்கு அவன்மீது ஒரு அலக்ஷிய மனோபாவந்தான் உண்டாகியது. தன் பெண்மையை மறந்து, சங்கரனையும் தன் மனதிலிருந்து விலக்கிக்கொண்டு, தானுண்டு தன் குடும்ப காரியமுண்டு என்று ஈடுபட்டிருந்தாள், பார்வதி. இதனால் அவள் தன் மாமனாரின் நன்மதிப்புக்கு ஆளாக முடிந்தது. அவள் பம்பரம் போன்று சுழன்று வேலை செய்வதை வீட்டோடு இருந்த அவர்தான் கண்டார். நாள் முழுவதும் வயல் வெளிகளிலும் வெளியூர்களிலும் நாட்களைப் போக்கிய சங்கரனுக்குப் பார்வதியைப் பற்றி நினைக்கவே நேரமில்லை. ஏதோ வீட்டிற்கு வருவதும், சாப்பிடுவதும், இரவு நெடு நேரம் வரை சீட்டுக் கச்சேரியில் உட்கார்ந்து விடுவதுமாக அவன் பொழுது கழிந்தது.

இப்படி இருந்தபொழுது சங்கரனின் தந்தை காலமானார். அதனால் ஒரு மாதம் வரையில் வீடு அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. சங்கரனுக்கு எங்கிருந்தோ புதிய உற்சாகமும் பொறுப்பும் உண்டாகிவிட்டது. என்ன என்ன

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

திரிசமன்களோ செய்தான். எப்படி எப்படியெல்லாமோ பொருள் சேர்க்க விரும்பினான். உள்ள நிலங்களில் எவ்வளவு மாசூல் மடக்க முடியுமோ அவ்வளவும் குவிக்க முயன்றான், பட்டணவாசப் பால்காரனைப் போல! பணம் சேர்ப்பதில் அசுர கதியில் பாடுபட்ட அவனுக்கு, பார்வதியின் நினைவே அதிகம் வருவதில்லை.

எல்லாப் பெண்களுக்கும் உண்டாகும் ஆசை பார்வதிக்கும் உண்டாகத்தான் உண்டாயிற்று. தன் மடியிலே சின்னஞ் சிறு குழந்தையொன்று தவழாதா? அதை எடுத்து மார்போடணைத்துப் பாலூட்டிச் சீராட்டி முத்தமிட்டு மகிழமாட்டோமா? என்றெல்லாம் விரும்பினாள். அதைத் தொடர்ந்து, 'எனக்கு எங்கே குழந்தை பிறக்கப் போகிறது?' என்ற ஏக்கமும் எழுந்தது. சங்கரனின் ஆண்மையில் உண்டான அவ நம்பிக்கை அவள் மனக் கசப்பை வளர்த்தது. நாளாக ஆக அந்த நினைவே அவள் மனதில் வேரூன்றிவிட்டது.

"என்னடியம்மா பார்வதி, இப்படி சும்மா இருக்கிறீர்களே! காலா காலத்தில் குழந்தையைப் பெற்று எடுத்துக்கொள்ள வேண்டாமா?" என்று யாராவது வயது வந்த அம்மாள் கேட்கும் போது அவளுக்கு லஜ்ஜையாக இருந்தது. "அது நம் கையிலா இருக்கிறது? திருமயிலீசர் கொடுத்தால் தான் உண்டு!" என்று சொல்வாள்.

அவள் மனதில் இருந்ததை மறைமுகமாகச் சொன்னாள், பார்வதி. கணவன் மீது இருந்த அவநம்பிக்கை அதில் தொனித்தது.

இப்படியே நாட்கள் சென்றன; வருஷங்கள் மடிந்தன. சங்கரனுக்கு நாற்பத்தெட்டும் பார்வதிக்கு முப்பத்தாறும் நிரம்பிவிட்டன. இருபத்தைந்தான மங்கையைப் போல்தான் இருந்தாள் பார்வதி. மாநிறமுடைய அவள் பிரமாத மான அழகில்லாவிட்டாலும் களை சொட்டும் முகமுடையவளாக இருந்தாள். கிராமத்தின் அமைதியான வாழ்வு அவள் மேனியில் மாந்தளிரின் பளபளப்பையும் மினுமினுப்பையும் உண்டாக்கியிருந்தது.

சங்கரன் இறந்து கர்ம காரியங்கள் நடக்கும் வரை பார்வதி தன்னையே மறந்திருந்தாள். தன் செயலால் உண்டான எதிர் பாராத மரணம் அவள் மனதிலே ஒரு பிரமையை உண்டுபண்ணியிருந்தது. அது நீங்கப் பல நாட்கள் வேண்டியிருந்தன, சாவின்பொழுது அவள் அழுதாள். தன் கணவனைக் குறித்தும் அவன் சாவைக் குறித்தும் அழுதாளா? அது அவளுக்கே தெரியாது. தன்னை நினைத்துக்கொண்டு, தன் வாழ்வை நினைத்துக்கொண்டு, அவள் அழுதிருக்கவேண்டும்! அதனால்தானோ என்னவோ அவளுள் பம்மிக் கிடந்தபெண்மை திரண்டு பூரித்து அவளை வேதனை ஆரம்பித்தது.

அதைத் தொடர்ந்து அவளுக்கு உண்டான தனி வாழ்வு அவள் பெண்மைத் தீயைகொழுந்துவிட்டு எரியச்செய்தது. பங்கஜம்மாளும் லீலாவும் சென்னைக்குச் சென்றுவிட்டபிறகு வீட்டுக் கதவுகளை மூடிவிட்டுத் தனியே படுத்துக்கொண்டு ஏதேதோ சிந்தனையில் மூழ்கிக் கிடந்தாள். பெட்டியுள்



எமது முதல்தரமான

சொந்தத் தயாரிப்புகள்!!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

இருந்த நாணயக் காகித நோட்டுக்கள் அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லை; தேனீயைப்போல் பாடுபட்டுத்தான் துய்க்காமல் பார்வதிக்குக் கொடுத்துவிட்டுப்போன காணி நிலங்கள் அவள் மனத்துயரைப் போக்கவில்லை. தனிமையை அவளால் சகிக்கவேமுடியவில்லை, 'தன்னுடன் இருக்க, தனக்கே தனக்கென்று ஒரு குழந்தை இருந்திருந்தால்!'—இந்த நினைவு அவளைச் சித்திரவதை செய்யத் தொடங்கியது.

அவள் இந்த நிலையில் இருக்கும்பொழுது எங்கிருந்தோ வந்தார் ஜோஸியர். மலையாளத்துக் கொல்லத்திலிருந்து வருவதாக அவர் சொன்னார். சங்கரனின் தந்தையைத் தேடிக்கொண்டு வந்தார் அவர். தஞ்சாவூர் மிராசுதார் ஒருவர் வீட்டுக்கு ஜாதகம் கணிக்க அவர் வந்தாராம். அத்துடன் தனக்கு முன்னமே அறிமுகமான சங்கரனின் தந்தையையும் பார்த்துவிட்டுப் போக வந்தாராம்.

மனம் நிலைகுலைந்தபோது ஜாதகம் பார்க்க ஆவல் உண்டாவது இயல்புதானே! அவரிடம் தன் ஜாதகத்தைக் காண்பித்தாள், பார்வதி. இந்த உலகத்தில் தனிமரமாக நின்று இன்னும் எத்தனை வயதுவரை வறண்ட வாழ்க்கையை நடத்த வேண்டும்? என்று அறிந்துகொள்ள அவள் விரும்பினாளோ?

ஜாதகத்தைப் பார்த்ததும், அந்த ஜோதிஷர். "ஏனம்மா உன் குழந்தை நன்றாக இருக்கிறானா? தன் தாத்தாவைப் போலவே இருக்கிறானா?" என்று கேட்டார்!

பார்வதியின் உடல் முழுவதும் ஒருவித நாணம் வந்து கவ்வியது. "இல்லை; எனக்குக் குழந்தையே பிறக்கவில்லை;" என்றாள், பெரும் குறையுடன்.

'என்னம்மா அது! ஜாதகத்தில் சிசுபலன் பேசுகிறதே!— பிறந்து இறந்துவிட்டதா என்ன? அப்படி அல்பாயுசு சிசு மூலமுமல்லவே!" என்று தம் கண்களில் இருந்த தடித்த கண்ணாடியை ஊடுருவிப் பார்த்தார், ஜோஸியர்.

"அதுவும் இல்லை?" என்றாள், பார்வதி வருத்தத்துடன்.

"....................."—இன்னும் ஜோதிஷர் ஏதேதோ சொல்லிவிட்டு, பார்வதியின் சமையலை மூன்றுவேளையும் சாப்பிட்டுவிட்டு, ஊரில் இருந்த இரண்டு மூன்று பெரிய பண்ணைகளின் மூளையையும் குழப்பிவிட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்!

கொழுந்துவிட்டெரிந்த விரக்தித் தீயிலே ஒரு ஆகுதி நெய்விடுவதைப் போல் சிசு பலனைச் சொல்லிவிட்டுப் போய்ச்சேர்ந்தார், ஜோதிஷர்! அது பார்வதியின் மனதிலே விதவிதமான சிந்தனைகளை எழுப்பிக்கொண்டிருந்து. "அலி; பேடி!" என்று தன்கணவனை மனதாரப்பழிக்கத் தூண்டியது. 'குழந்தை வேண்டும். நான் மலடியல்ல; அதை நிரூபிக்க வேண்டும்!' என்ற எண்ணம் எழுந்தது. இதன் பொருட்டு அவள் எதையும் செய்யத் தயாராய்விட்டாள். கற்பு என்ற செல்வத்தை வாரியிறைத்து மண்ணாக்கவும் அவள் தயங்கவில்லை பரமனையே நாடியலையும் பக்தனின் உள்ளத்தைப் போல் அவள்பெண்ணுள்ளம் குழந்தை என்ற அந்த இன்ப ஊற்றை நாடி அலைந்தது. அதை அடைவதற்குரிய பல மார்க்கங்களைச் சதா சிந்தித்துக்கொண்டே இருந்தது.

அன்று இரவும் அதே நினைவோடுபடுத்துக்கொண்டாள், பார்வதி. தூக்கமும் விழிப்பும் அற்ற மயக்க மனோ நிலையில் அவள் பலவிதமான விசித்திரக் கனவுகளைக் கண்டாள்.

அப்போது யாரோ வாசல் கதவைத் தட்டும் சப்தமும், "லீலா! லீலா!" என்று அழைக்கும் குரலும் கேட்டன. அதுவும் கனவுதானா! அல்லது சங்கரனின் ஆவிதான் அப்படி அலைகிறதோ! பார்வதி கண்களைத் திறந்து பார்த்தாள். இல்லை; சப்தம் தெளிவாக வாசல் கதவிலிருந்து வந்துகொண்டிருந்தது. பார்வதி எழுந்து சென்று கதவைத்திறந்தாள். (தொடரும்)

"லக்ஸ்
டாய்லட்
சோப்
என் சருமத்தை மிகவும்
அழகாக வைத்துக்
கொள்கிறது"
என்று சொல்கிருர்
லலிதா
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 290-X30 TM

பாரதியின் ஞானகுரு

-CHEENU-

வி. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன்

1. குருக்கள் ஸ்துதி (குள்ளச்சாமி புகழ்)

பாரதியாரின் ஞானகுரு சிதம்பர தேசிகனார். நாட்டவர் இவரைக் குள்ளச்சாமி என்று கூறினர். மாங்கொட்டைச்சாமி என்ற மாறு பெயரும் உண்டு இவருக்கு. இவரிடம் பலசிறப்புக்கள் இருந்ததாலே சிவாம்சம் எனவும், குஹாம்சம் எனவும், விநாயகாம்சம் எனவும் மக்கள் கருதினர். அஷ்டாங்க யோகசித்தி கைவரப் பெற்றவர் என்று சிலர் கருதியதுண்டு. இந்தக் குள்ளச்சாமியார்தான் பாரதியாருக்குத் தேனனைய பராசக்தியின் திறத்தைக் காட்டி, சித்தின் இயல் காட்டி, மனத்தெளிவு தந்தவர். இவ்வுலகில் இருந்தவாறே வானகத்தை எட்டுகின்ற வகையுணர்த்திக் காத்தபிரான் அவர், பாரதியாருக்கு. ஞானகுருவின் புகழ் மிகப் பெரிது. வாயினால் சொல்லிடவும் அடங்காது! வரிசையுடன் எழுதிவைக்கின்ற வகையுமில்லை! முப்பாழும் கடந்த பெருவெளியைக் கண்டவர். முக்தி என்ற வானத்திலே கதிரவனைப் போன்றவர். தெளிந்த ஞானி. பாசத்தை அறுத்தவர். பயத்தைச் சுட்டவர். பாவனையால் பரவெளிக்கு மேலே தொட்டவர். அவரது வாழ்நாளைக் கணக்கிட்டு அவரது வயது இவ்வளவு என்று சொல்வதற்கு யாருமே கிடையாது? ஏன்? அவர் காயகற்பம் செய்துகொண்டு விட்டார்? அவர் தம் புகழ்தான் எத்தகையது! சுருங்கக் கூறின்,

"ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ?
ஞானகுரு புகழினைநாம் வகுக்க லாமோ?"

ஆம், இயலாது!

2. குரு தர்சனம்

செந்தமிழ்த் தென் புதுவை என்னும் திருநகரில் பாரதியார் அஞ்ஞாத வாசம் புரிந்த ஆண்டுகளுள் என்றோ ஓர் நாள். ஈசுவரன் தர்மராஜா தெருவிலே ஒரு வீடு. ராஜாராமய்யர் என்ற பெயருடைய பிராமணர் வசித்து வந்தார். அவர் நாகபட்டினத்திலிருந்து வந்து புதுவைப் பட்டினத்தில் குடியேறியவர். அவருடைய தந்தையார் பன்னிரு உபநிடத நூல்களுள் சிலவற்றைத் தமிழிலே மொழிபெயர்த்து வைத்திருந்தார். அவற்றைச் சரிபார்த்துச் சீர்செய்து செப்பனிடும் வண்ணம் பாரதியாரிடம் வேண்டிக்கொண்டிருந்தார் ராஜாராமய்யர். அந்தப் பணி செய்யவே அன்று சென்றார் அங்கே பாரதியார். சென்றிருந்த நேரம் நன்னேரம் குள்ளச்சாமியும் எதேச்சையாக அங்கு வந்து சேர்ந்தார். என்ன வாய்ப்பு! எப்படிப்பட்ட பொன்னான சந்தர்ப்பம்! கை நழுவவிடுவாரா கவிஞர்? கவிஞரும் ஞானதேசிகனைக் காண வேண்டும், ஞான தீக்ஷை பெறவேண்டும் எனப் பல்நாள் ஏங்கித் துடித்தவர்தானே! நேரிலே கண்டு விட்டபின் லகுவிலே விட்டுவிடுவாரா, என்ன? பாரதியார் எழுந்து நின்றார். குள்ளச்சாமியின் திருக்கரத்தை அன்புடனே, ஆனால் சற்று அழுத்தமாகவே, பற்றிக்கொண்டார்! வெகு நாளாக ஆவலுடன் எதிர் பார்த்திருந்தவரது வரவு. பாரதியாரின் கண்களிலே அந்த விடாய் தெரிந்திருக்க வேண்டும்! உள்ளம் உவகையால் பொங்கியது. உணர்ச்சி பெருக்கெடுத்தது. சொல்லுருவம் பெற்றன, உள்ளத்துவகையும் உணர்வும். கரம்பிடித்த பரிவுடனே கனிவு கொண்டு பேசலுற்றார் கவிஞர்!

"ஐயனே! தேசிகனே! அவனியிலே சிலர் உன்னை ஞானி என்று செப்புகின்றனர். சிலர் பித்தன் என்கின்றனர். சிலரோ அஷ்டாங்க யோக சித்தி பெற்றுத் துலங்கும் மஹா யோகி என்று புகழவும் கேட்டிருக்கிறேன். ஒப்பனைகள் காட்டாமல், உள்ளதை ஒளிக்காமல் சொல்லவேண்டுகின்றேன். உத்தமனே, யாவன் நீ? என்பதை உண்மையாக உணர்த்திடவேண்டும்!"

பதிலில்லை! மாங்கொட்டைச்சாமி மோனத்தோடிருந்தார். திருதிருவென்று 'ஆடு திருடிய கள்வனைப்போல' விழித்தார்! பரக்கப் பரக்கப் பார்த்தார்! கையும் மெய்யுமாகப் பிடிபட்டு விட்டோமோ, மெய்யுணராமல் பிடித்தவன் கைவிடமாட்டானோ' என நினைத்தாரோ என்னவோ? பாரதியார் விடவில்லை.

"ஐயனே! நீ யார்? உனது ஆற்றல் எவ்வளவு? யாதுணர்வாய்? எதற்காக இவ்வாறு கந்தைத் துணிகளைச் சுற்றிக்கொண்டு சுற்றித் திரியவேண்டும்? ஆகா! தேவனைப்போலக் காந்த விழி காட்டுவதென்னே! சிறு குழந்தைகளோடும், தெருச் சுற்றும் நாய்களோடும் நேயம் பாராட்டி நெருங்கிப் பழகுவதன் பொருள் என்ன? பித்தனைப்போல அலைவதும் ஏனோ? ஆனால், ஆகா! பரமசிவன் போலல்லவா உருவம் படைத்திருக்கிறாய் உண்மையில்! பற்றற்று நின்ற பண்பு தான் எப்படி? ஆரியனே! நீ அறிந்துகொண்டதெல்லாம் எனக்கும் உணர்த்தியருள வேண்டும்" என இரங்கினார் பாரதியார்.

கையும் மெய்யுமாகப் பிடித்தவன் இத்துணைக் குறுக்குக்கேள்விகள் போடுகிறானே! ஏன் வரர்த்தைமேல் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டு போகிறான்? என்ன நினைத்தாரோ என்னவோ, குள்ளச் சாமியார் கையைத் திருகினார். கையை விடுவித்துக் கொண்டு ஓடவிரும்பினார். பாரதியார் கை விடவில்லை! சுற்றுமுற்றும் பார்த்தார் சாமியார்; பிறகு பாரதியார் முகம் பார்த்துப் புன்னகை பூத்தார். குருநாதனின் தூய திருக்கமலப் பதத்துணையைப் பார்த்தார் பாரதியார். இப்போது நீதான்கதி என்பதுபோல, பிடி தளர்ந்தது; கைநழுவியது. திமிறிக்கொண்டு கிளம்பினார் குள்ளச்சாமி. குதித்தோடி அந்த வீட்டுக்கொல்லைப்புறம் சேர்ந்தார். பாரதியார் தம்மை மறந்தார். ராஜாராமையரையும் அவரது வீடு என்பதையும் மறந்துபோனார். உபநிடதம் பற்றிய பேச்சே இல்லையே! உபநிஷதஸாரமே தம் முன்பு உயிர்த்துக் குதிக்கும் போது மொழி பெயர்ப்பாவது, மண்ணாவது! சாமியின் பின்னாலேயே மிக விரைந்தோடினார்! கடலில் குளித்தொரு முத்தெடுத்தபின் அதைக் கைநழுவவிடுவதா? கொல்லைப்புறம் சேர்ந்தார். தேவாம்சனை— வானவனை— மறித்துக்கொண்டு விட்டார். பாரதியார்! சிதம்பரனார் செல்வதெங்கே? செல்வதெப்படி?

3. உபதேசம்.

கவிஞனுக்கு ஞானதீக்ஷை யருள்கிறான் ஞானகுரு. மொழியளப்புகள் கிடையா. உள்ளம் உறவாடுகிறது. கண்கள் தெருள் தருகின்றன. மோனமே பேச்சு. வானம் அளக்கின்றது. வையத்தைப் பிணைக்கின்றது. சிறு சிறு, சில சிலகுறிப்புகளைச் சுட்டிக் காட்டலே உபதேசம்!

பக்கத்து வீடு. இடிந்து கிடந்தது. சுவர்கள் வீழ்ந்திருந்தன. வீடா அது? இல்லை பாழ் மனைதான் இருந்தது அங்கே. கூரை, தாழ்வாரம், விட்டம், சட்டம் ஒன்றும் கிடையாது. பாழ்க்குவியல்; வெறும் பாழ்.

பரமயோகியான குள்ளச்சாமி அருள்விழி காட்டினார். பாரதியாரை உற்றுப் பார்த்தார். சுடரும் விழி அருள் சொரிந்தது! பக்கத்திருந்த குட்டிச்சுவரைச்சுட்டிக்காட்டினார்! பின்னர் சூரியனைக் காண்பித்தார்! கிணற்றுள் விளங்கிய சூரியபிம்பத்தையும் காட்டினார். மனிதன், மண்சுவர், பரிதி, விம்பம்! மண்ணவன், மண் சுவர், விண்ணவன், விம்பம்! என்ன புதிர்?

"தெரிந்து கொண்டாயா?" எனக்கேட்டார் குருபரன்!

"தெரிந்து கொண்டேன்;" என்றார் கவி சிஷ்யர் உள்ளக் களிப்போடு.

மிக்க மகிழ்வோடு அவரும் சென்று விட்டார்; மெய் விண்டார்; விடுதலை பெற்றார்; விரைந்தார் போலும்! தேசிகன் விண்டசேதியை, தான் கண்ட சேதியை

"யானும்
வேதாந்த மரத்திலொரு வேரைக் கண்டேன்.
தேசிகன் கைகாட்டியெனக் குரைத்த செய்தி
செந்தமிழி லுலகத்தார்க் குணர்த்துகின்றேன்"

என விளக்க முன் வருகிறார் பாரதியார்! தத்துவம் என்ன? உபதேசத்தின் உட்கருத்து என்ன? உட்பொருள் கண்டு, உண்மை தெரிந்து உள்ளம் தெளிந்த உத்தமக் கவிஞன் உரைப்பது கேட்போம்.

"வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி,
மண்போலே சுவர்போல வாழ்தல் வேண்டும்;
தேசுடைய பரிதியுருக் கிணற்றினுள்ளே
தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்;
பேசுவதில் பயனில்லை, அனுபவத்தால்
பேரின்பம் எய்துவதே ஞானம்" என்றான்
வானைக் காட்டி,
மையிலகு விழியாளின் காதல் ஒன்றே
வையகத்தில் வாழுநெறி என்று காட்டி
ஐயனெனக் குணர்த்தியன பலவாம் ஞானம்
அதற்கவன் காட்டிய குறிப்போ அனந்தமாகும்,

உபதேச ஸாரம் இதுதான்: சுவாசத்தைக் கட்ட வேண்டும். நெட்டைச் சுவராயினும்,

குட்டிச் சுவரோ—அதிலுள்ள மண்ணை நிகர்த்து நிரந்தரமாக வாழ வேண்டும். வானத்திலே எத்துணையோ கோடி மைல்களுக்கு அப்பாலே இருந்தாலும் பரிதியினது பிம்பம் கிணற்று நீருள் வீழ்ந்து அடங்கி விடுகிறதல்லவா? அதேபோல விண்ணகச் சிவனை மனக்கிணற்றுள்ளே கண்டு கொள்ளலாம்! பேசிப் பயனென்ன? அனுபவத்தின் காரணமாகப் பேரின்பம்பெறுவதே உண்மையான ஞானமாகும். பராசத்தியிடம் பக்தி செலுத்துவதே வாழுகின்ற மெய்வழியாகும்.

* * *

மற்றோர் நாள். மாங்கொட்டைச் சாமியார் பழைய கந்தைத் துணியாலாகிய அழுக்கு மூட்டை ஒன்றை முதுகிலே சுமந்து சென்றார். இந்தத் திருக் கோலத்திலே தம் எதிரே வந்த கருணைமுனியைக் கண்டார் பாரதியார். இளநகை புரிந்துகொண்டே தமது குருவைப் பார்த்துக் கேட்டார், "எம்பிரானே! இதென்ன கோலம்? பைத்தியக்காரருடைய செய்கையல்லவா இது? எதற்காக இந்தப் பழைய அழுக்கு மூட்டையைச் சுமக்கவேண்டும்?" என்று!

குருநாதனும் சிஷ்யனுக்குத் தோன்றிய ஐயப்பாட்டினை விளக்கலானார். "யான் வெளியே ஒரு சுமை சுமக்கிறேன். நன்றாகச் சிந்தித்துப் பார்; அகத்தினுள்ளே இன்னதொரு பழங்குப்பையைச் சுமக்கின்றாய் நீ" என்று சொல்லிவிட்டு உடனே விரைந்து சென்றுவிட்டார். குருநாதன் சொன்ன சொற்களின் ஆழ்ந்த பொருளை அழகுறத் தெரிந்து கொண்டார் பாரதியார். நமக்கும் தெளிவாக, எளிமையோடு, அழகாக விளக்கித் தருகிறார் தமது தனிப் பாணித் தமிழ்ச் செய்யுளிலே!

"மனத்தினுள்ளே பழம்பொய்கள் வளர்ப்ப தாலே
இன்னலுற்று மாந்தரெல்லாம் மடிவார் வீணே,
இதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்.
சென்றதினி மீளாது; மூடரே, நீர்

எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா
இன்றுபுதி தாப்பிறந்தோ மென்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின் புற்றிருந்து வாழ்வீர்
அஃதின்றிச் சென்றதையே மீட்டும் மீட்டும்
மேன்மேலும் நினைந்தழுதல் வேண்டா, அந்தோ!
மேதையில்லா மானுடரே, மேலும் மேலும்
மேன்மேலும் புதியகாற் றெம்முள் வந்து
மேன்மேலும் புதியவுயிர் விளைத்தல் கண்டீர்'
ஆன்மாவென் றேகருமத் தொடர்பை எண்ணி
அறிவுமயக் கங்கொண்டு கெடுகின்றீரே!
மான்மானும் விழியுடையாள் சக்தி தேவி
வசப்பட்டுத் தனைமறந்து வாழ்த்தல் வேண்டும்.

ஆம், பாரதியார் மேலும் குறிப்பது போல—

"சென்றவினைப் பயன்கள் எனைத் தீண்ட மாட்டா;
நன்றிந்தக் கணம்புதிதாப் பிறந்து விட்டேன்.
நான்புதியன், நான்கடவுள், நலிவிலா தோன்
என்றிந்த உலகின்மிசை வானோர் போலே"

சென்றது மறந்து புதிய சங்கல்பம் செய்து கொண்டு வாழவேண்டும் ஒவ்வொரு மனிதனும்!

மேலே சொன்ன உண்மைகள் எல்லாம் 'கேட்டற்ற மதியுடையான் குள்ளச்சாமி,' ஒவ்வோர் நாளில் பல எடுத்துக்காட்டுக்களாலும், பல்வேறு குறிப்புகளினாலும், 'நலமுடைய மொழியாலும் விளக்கித்' தந்தார் பாரதியாருக்கு! அந்த உண்மைகளையெல்லாம் நமக்கு அருளியுள்ளார் பாரதியார்.

"மலர்த்தாளான் மாங்கொட்டைச்சாமி வாழ்க!"



ஆசை

கே.வி.கே

அவள் கட்டழகிதான். இளமையின் பூரிப்பு அவளிடம் பொங்கிக்கொண்டிருந்தது. ஓடைக்குச் சென்று நீர் திரட்டி வந்துகொண்டிருந்தவளின் தலையில் பதியவைத்தாற்போல் நின்ற குடம் காலைக் கதிரவனின் கிரணத்தில் பளபளத்தது கூடச் அவளழகைப் பன்மடங்கு பரிமளிக்கச்செய்தது.

காட்டைக் கடந்து கிராமத்தினுள் புகும் சமயம்தான் அவள் அப் பிக்ஷுவைக் காண நேர்ந்தது. பல கிளைகள் தாங்கி வானளாவ நின்ற அம்மரத்தினடியில் கண்மூடிய வண்ணம் பத்மாஸனமிட்டு அமர்ந்திருந்தார் அவர். வற்றி உலர்ந்திருந்த மஞ்சள் நிறமேனி; ஒட்டி

ஒடுங்கிவிட்ட வதனம்; சாந்தியும் அமைதியும் நிறைந்த சொரூபம்; உலகையே மறந்துவிட்ட தன்மை.

தளர்ந்த நடையுடன் சென்றவள் மெல்ல நின்று அவரை உற்று நோக்கினாள். இராஜ தேஜஸ் வழிந்த அச்சரீரம் இந்நிலைக்கு மாறிவிடுவதென்றால் எத்தனை துன்பங்களைக் கடந்திருக்கவேண்டும்; தாமரை மொக்குபோல் மூடி இருந்த அக்கண்ணிமைகளையே வெறித்துப் பார்த்தாள். அவளங்கம் புல்லரித்தது. மார்புக்குக்கீழே இடைவெளிபோல் தோன்றிய அங்கத்தை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அது வயிறுதானா? அதன் இருப்பிடத்தையே காணோமே! முதுகுடன் சேர்ந்து ஒட்டிக்கொண்டா விட்டது! ஐயோ! எத்தனை வருஷப் பட்டினியோ.........!

அதற்குமேல் அவள் அங்கு நிற்கவில்லை. விரைந்து சென்று வீட்டை அடைந்தாள். அடுத்த அரை நாழிகை பம்பரம்போல் சுழன்றாள். அடுப்பைப் பற்றவைத்து உலையில் நீருக்குப்பதில் பாலைவைத்தாள். பாத்திரத்தின் கழுத்தளவு தூய அரிசியைச் சேர்த்து அப்பாலில் அதைப் பொங்கினாள். தலைவாழையிலை ஒன்றைக் கொய்து கொண்டு, பாகு சேர்ந்த பாலன்னத்துடன் விரைந்து மறுபடியும் காட்டிற்கு ஓடினாள்.

குண்டலினி யோக போதையில் மயங்கி லயித்து விட்டிருந்த பிக்ஷு ஏனோ சிந்தை கலைந்தார். படிப்படியாக அவர் உணர்வு திரும்பி வந்தது. புற உலகத்தொடர்பு ஏற்படுவதை விரும்பாதவர் போல் அவர்முகம் சற்றே சுருங்கி விரிந்தது. உண்மையைத் தேடித்தேடி ஓய்ந்திருந்த ஆத்ம துடிப்பும், ஏக்கமும் மனதை வாட்டின. கசிந்து அழுத இதயம் எண்ணச் சுழல்களில் அகப்பட்டுத் தவித்தது. ஐயோ! ஆறுவருட யோகமும், பசியும், பட்டினியும், உடல்வதையும் பயனற்றவைதானா! சரீரத்தை வாட்டி, தண்டனைக்குள்ளாக்குவதில் ஆத்ம பலம் உயர்வடையும் என்பது எவ்வளவு அர்த்தமற்றது. பார்க்கப்போனால் உடல் வலிமையினால் தானே ஆத்மசோதனையும், சித்தியும் கிட்டும். போல் தெரிகிறது. ஜீவனின் கோவிலாகிய சரீரத்தைப் பாதுகாப்பது, ஜீவன் முக்திக்கு அத்தியாவசியம் இல்லையா.........!

இவ்விதச் சிந்தனைகளினால் நொந்தவராய்த் தம் கமலக் கண்களைத்திறந்தார். போரிட்ட எண்ணங்களுக்கு விடைபோல் அவர் கண்களில் தென்பட்டன. எதிரே போட்டிருந்த தலைவாழையிலையும் அதன்மேல் பரிமாறப் பட்டிருந்த பாலன்னமும். சற்றே அகல விரித்த கண்களுடன் பக்கத்தில் திரும்பினார். அடக்கத்துடன் நின்று கொண்டிருந்த அப் பெண்மணியின் பாதங்களையும், அவைகளில் மின்னிய சிலம்புகளையும் தாம் முதலில் கண்டார். அதற்குமேல் அவர் சிரசை உயர்த்தவில்லை. மறுபடியும் இலையைப் பார்த்தார். அடுத்த கணம், தம் ஆறு வருடப் பட்டினியை அன்றுடன் சமாதி செய்து விடுபவர் போல் அவ்விலைச் சோற்றையும் புசித்தார்.

பரவசமடைந்துவிட்ட அம்மாது அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தாள். அருட்கண்களுடன் அவளைக் கடாக்ஷித்த அவரை, வேண்டி நின்றவண்ணம் நாக்குழறப் பகர்வாள்:

“ஐயனே! அதோ தெரிகிறது என் இல்லம். மாலை போஜனத்தையும் அங்கேயே ஏற்றுக்கொள்ளவேண்டும். தங்கள் பொற்பாதம் பட்டு அவ்வில்லம் புனிதமடைய வேண்டும்.........!”

சாந்தி தேங்கிய அவர் வதனம் எந்த மாறுதலும் அடையவில்லை. இதழ்கள் மட்டும் மெல்ல விரிந்தன. ஆனால் வார்த்தைகளாக ஒன்றும் வெளிப்படவில்லை. சிரம் சற்று மெல்ல அசைந்தது.

அவள் புறப்பட்டு விட்டாள். தன் கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டு விட்டதில் உண்டான பெருமிதம் அவள் நடையில் தோன்றத்தான் செய்தது.

இருள் சூழும் சமயத்தில் விளக்கேற்றியபின் அவள், சந்தணப் பலகை ஆஸனமிட்டு, அதன் முன் வெள்ளித் தட்டில் பாலன்னத்தையும் வைத்தவாறு, பிக்ஷுவின் வரவுக்காக வாயிற்புறம் வந்தாள். தூரத்துக் கோவில் மணியின் ரீங்காரம் காற்றில் மிதந்துகொண்டிருந்த அதே சமயத்தில் பிக்ஷுவும் வந்தார்.

தக்க உபசாரத்துடன் அவரை வரவேற்று அமரச் செய்தாள். பாலும் சோறும் அளித்து உண்ணச் செய்தாள். அவள் பக்தியும், உபசரிப்பும் பிக்ஷுவின் கண்களில் இரு துளி நீரைப் பளபளக்கச் செய்தன.

ஜோதி வடிவாக அமர்ந்திருந்த அவரையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள் அவள். வாடி இளைத்து விட்டிருந்த அவர் சரீரம் அவள் கண்களுக்குத் தங்க மேனியாய்ப் பிரகாசித்தது. வற்றி உணர்ச்சியற்றிருந்த அவர் முகம் அவளுக்குச் சந்திர வதனமாய்த் தோன்றியது, குழிந்

குணத்தில் உயர்ந்தவை! தரத்தில் சிறந்தவை!!

ஆனந்தா பன்னீர் தொழிற்சாலையில்

தயாரிக்கப்படும்

- உயரிய ஆனந்தா பன்னீர் நெ. 249
- " " அரைக்கீரைவிதைத் தைலம்
- " " சந்தனாதித் தைலம்
- " " வாசனைச் சுண்ணாம்பு
- " " ஓமம் வாட்டர்
- " " சோம்பு அரக்கு
- " " டிஸ்டில்டு வாட்டர்
- " " ஜெயின் பல்பொடி
- " " பாபுலர் பல்பொடி (பாக்கெட்)

இவைகளையே

எப்பொழுதும் வாங்கி உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் கிடைக்கும்.
விபரங்களுக்கு எழுதுக:—

ஆனந்தா பன்னீர் தொழிற்சாலை

ராயப்பேட்டை, - மதராஸ்-14.

Coffee

Ours for Quality



GANESH & Co.

(MADRAS), LTD.

Retail Branches 285, China Bazaar. 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylpaore. No. 2 Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
ஸன்லைட்
சோப்பினுல்
தான்
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

திருந்த அக் கண்களை அவள் நக்ஷத்திரமாய்த்தான் நினைக்க முடிந்தது போலும்!

சற்று நேரத்திலேயே அவர் எழுந்து புறப்பட்டார். ஆனால் அவள் ஏனோ அதை விரும்பவில்லை. தயங்கியபடியே நின்று அவரைத் தாமதப் படுத்தினாள்.

"சுவாமி! இதற்குள்ளாகவா போகிறீர்கள்...!"

சற்று நின்ற அவர் "ஏன்?" என்று மட்டும் கேட்டுவிட்டு மறுபடியும் நகர ஆரம்பித்தார்.

"தங்கள் அருளைப் பெருமலேயே தங்களை நான் வழியனுப்ப வேண்டுமா......?"

"பகவான் அருள் உனக்குப் பூரணமாய் இருக்கிறது, தாயே! பக்தியிலும், உபசாரத்திலும் நீ தலை சிறந்து விளங்குகிருய்......! உனக்கு என்ன குறை......?"

தடுமாற்றத்துடன் அவள் பதில் கூறினாள்.

"குறை இருக்கிறது, ஐயனே! எனக்குப் பிள்ளைப் பேறு இல்லை......!"

"தக்க காலத்தில் எல்லாம் கிட்டும்............!" என்றபடியே அவர் மெல்ல வெளியே புறப்பட்டார். ஆனால் அவள் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள், அவர் செல்வதை அனுமதிக்க மனமற்றவளைப்போல்,

"இதைவிட வேறெப்போது தக்க காலம் கிட்டப் போகிறது, சுவாமி.........! உங்கள்...... அருளைத்தான் வேண்டுகிறேன்......!"

சட்டெனப் பிக்ஷு தலை நிமிர்ந்து நோக்கினர். அவள் அங்கமும், முகமும், கண்களும் அவருக்குப் பதிலளித்து விட்டன. நிஷ்காம்யமாக அவள் உபசரித்தாள் என்று எண்ணியது கடைசியில் தவறுதானு......!

அதற்குள் அவள் அவர் பாதத்தில் மண்டியிட்டு கால்களைக் கட்டிக்கொண்டுவிட்டாள். ஏக்கமும் தாபமும் பொங்கும் கண்களுடன் அவரை ஆட்கொள்ள நினைத்தாள் போலும்.

சாந்தி ததும்பிய அவர் முகம் குளிர்ந்து அவளைப் பார்த்தபோது இரத்தமாய்ச் சிவந்திருந்தது. கண்கள் அனலைக் கக்கின. உதறி அவளைத் தள்ளிவிட்டுத் தம் கால்களை விடுவித்துக் கொண்டார். ஏனோ வார்த்தைகள் மட்டும் வெளிவரவில்லை.

கீழே சாய்ந்தவள் மறுபடியும் அவர் பாதத்தை நாடினாள். "சுவாமி" என்ற குரல் எப்படியோ ஒலித்தது.

ஆனால் அவர் அங்கு நின்ருல்தானே தன்னைப் பற்ற வந்தவளை மறுபடியும் உதறி, "சீ" என்று மட்டும் கூறிவிட்டுப் வெளியே போய்விட்டார்.

இருளில் ஒலித்த அவர் பாதக்குறடு மட்டும் அவர் நடையின் வேகத்தைக் காண்பித்தது.

உள்ளம் நொறுங்கி, கீழே சாய்ந்திருந்த அவள் எழுந்திருக்கவேயில்லை. எவ்வளவு நேரம் அப்படி இருந்தாள் என்பது அவளுக்கே தெரியாது. விசும்பலும் நெட்டுயிர்ப்பும் மார்பைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டன.

வெளியே சென்றிருந்த அவள் கணவன் இரண்டு நாழிகைக்குப்பின் வந்தான். உள்ளே நுழைந்தவன் தன் மனைவியின் நிலைமையைக் கண்டு பதறி அவளிடம் நெருங்கி அவளை அணைத்தவாறு ஆசுவாசப் படுத்தினான். குளிர் நீரைப் பருகச் செய்து கவலை தோய்ந்த முகத்துடன் விஷயத்தை வினவினான்—ஆத்திரம் தொனிக்க,

அவள் ஏனோ அவன் முகத்தைப் பார்க்கவும் கூசினாள். வார்த்தைகள் வாயினின்றும் வெளிவர மறுத்தன. முகத்தை இருகரங்களாலும் மூடியவளாய் விசித்து அழ ஆரம்பித்தாள்.

விவரம் புரியாத அவன் மேலும் பதைத்தவனாய் அங்கலாய்ந்து மன்ருடிக் கேட்டான். கணவனின் அன்புப் பிணைப்பிலிருந்த அவள் ஒரு கணம் அப் பிக்ஷுவைப் பற்றி நினைத்தாள். அடக்க முடியாத ஆத்திரம் மேலோங்கியது. மறுகணம் கணவனைப்பார்த்தாள்.

"ஓர் பிக்ஷுவுக்கு அன்னமிட்டேன். அவன் அதை உண்டு விட்டு பலாத்காரமாய் என்னை அலங்கோலப் படுத்திவிட்டான்......!" என்ருள் கூசாமல்.

துள்ளி எழுந்த அவள் கணவனின் முகம் ரௌத்ராகாரமாய் மாறியது. பற்களை நற நற வென்று கடித்தவாறே வார்த்தைகளைக் கக்கினான்.

"ஆ! எங்கே அந்த அற்பன்! இதே கணத்தில் அவனைக் கொன்றுவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்...!" என்று சீறியவனாய், அப் பிக்ஷுவைத் தேடிக் கொண்டு வெளியே ஓடினான். வெற்றி கொண்டவளைப்போல் அவள் நிமிர்ந்து அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இடியும் மின்னலும் தாண்டவமாடிய அவ்விரவு எவ்விதமோ கழிந்தது. மறுநாட்காலை நேரம் கழித்துத்தான் அக் கணவன் திரும்பினான். துவண்ட நடையும் வாடிய முகமும் அவன் தோல்வியையே தோற்றுவித்தன. இரவு முழுதும் தேடி யலைந்தும் அப் பிக்ஷு அவன் கண்களில் அகப்படவில்லை,

அவனை உபசரித்து, போஜனம் உண்ண அழைக்க அவளுக்கு வழக்கமான துணிவு ஏற்படவில்லை. அவனுக்கும் ஏனோ அவள் மீதிருந்த உரிமை குன்றி விட்டதைப் போல்தான் தோன்றிற்று.

அவளையே உற்று நோக்கினன். அப் பிக்ஷுவைத் தன் கற்பனைக் கண்களால் சிருஷ்டி செய்து பார்த்தான். அவர்கள் இருவரும் ஆலிங்கனத்தில் இருப்பதுபோல் அவன் கண்கள் தோற்றுவித்தன. ஏனோ பிக்ஷுவின் மீதிருந்த ஆத்திரம் இவள்மேல் திரும்பியது. என்ன இருந்தாலும் இவள் மாசடைந்தவள்தானே இனி!

அவன் பேச ஆரம்பித்தபோது குரல் கடுமையாகத்தான் ஒலித்தது.

"இதோ பார், பெண்ணே! எப்போது நீ வேறொருவனுல் பாழடைந்தாயோ இனி நீ எனக்குத் தகுதியில்லை!" என்றான்.

இடியோசை கேட்ட நாகம்போல் அவள் நடுங்கி அவனை வெறித்துப் பார்த்தாள். ஐயோ! தன் பொய்யே தனக்கு எமனாகவா வருகிறது...!"

அவன் மேலும் கூறினன்:

"நீ என்னை விட்டுப் போய்விடு! உன்னோடு நான் இனி வாழ்ந்தால் உலகம் இடம் தராது...!"

பொங்கி வந்த சோகத்துடன் அவள் புலம்பினாள்:

"ஐயோ! நான் ஒரு பாபமும் அறியேன்! என்னைக் கைவிடாதீர்கள்"......! நான் மாசற்றவள்......! அப் பிக்ஷு என்னைத் தீண்டவேயில்லை......!"

பயங்கரமான சிரிப்பொலி அவனிடமிருந்து வெளிப் போந்தது.

"பலே, பெண்ணே! நேரில் உன் நிலையை நேற்றுப் பார்த்தவனிடமே பசப்புகிறாயே......! அந்தப் பிக்ஷுவுக்காகப் பரிந்து பேசுகிறாயா...!"

'ஆ' வென்று அவள் பின்னடைந்தாள். பொறியில் அகப்பட்ட விலங்கைப் போலல்லவா அவள் நிலைமை ஆய்விட்டது! முன்னிரவின் தன் நிலைமைக்குத் தான் தான் காரணம் என்று அவள் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும் அவனிடம்!

அழுது அரற்றியவாறே அவனை நெருங்கி அவன் பாதங்களைப் பற்றப் போனாள். சட்டென எழுந்த அவன் அவளை உதறியபடியே வெளியே தள்ளினன். 'சீ' என்ற சொல் மட்டும் பல உணர்ச்சியுடன் பொங்கி வெடித்தது. ஈட்டி பாய்ந்தது போன்ற அச்சொல் இரண்டாம் முறையாக அவளைத் தாக்கியது. முன்னிரவுதானே அதே வார்த்தையுடன் பிக்ஷு தன்னை உதறிவிட்டுச் சென்றார்.

குனிந்த தலையோடு தள்ளாடிய நடையுடன் அவள் நடக்க ஆரம்பித்தாள். வைராக்கியமும் சோகமும் நிறைந்த கண்களுடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்ற அக்கணவன் தலையைத் திருப்பி எதிர்ப்புறமாக நடந்தான்.

* * *

வருடங்கள் பல உருண்டன. ராஜ்புதனத்தை அடுத்த கிராமமொன்று. ஏக குதூகலத்துடன் அன்று களிப்பெய்திக் கொண்டிருந்தது. புத்தபகவான் தம்அருள் வடிவுடன் அங்கு விஜயம் செய்திருந்தார். பல்லாயிரக் கணக்கான மக்கள் அவர் திருமேனியைத்தரிசித்துப் பொன்மொழிகளைப் பெற்றுச்சென்றனர். அவர்தம் கரத்தினாலேயே ஆயிரம் ஏழைகளுக்கு அன்னமளித்துவிட்டு, சற்றே சிரமபரிகாரமாய் அமர்ந்திருந்தார் மடத்தினுள். வலப்புறம் பரமானந்த சீடன் ஆனந்தனும், இடப்புறம் சந்திரனும் கைகட்டி இருந்தனர். முக்கியமான சிஷ்யர்களில் பலர் எதிரே அமர்ந்து அவர் அருள்வாக்குக்காகக் காத்திருந்தனர்.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த பகவான் கடைசியில் மெல்ல, கேள்வியொன்றைக் கேட்டார்:

"ஆனந்தா! ஞான மார்க்கத்தின் தலைவாயில் எனக்கு எப்போது புலப்பட்டது என்று நினைக்கிறாய்......?"

வினயமாகவே சீடன் பதிலளித்தான்.

"பகவானே! உருவேலா என்ற காட்டில் பல இன்னல்களை அனுபவித்த பின்பு, போதிமர நிழலில் தங்கியபோது அருள் கிட்டியதாகக் கூறியிருக்கிறீர்கள் ....

புன்னகையில் பொலிந்த அம்முகம் இன்னும் பிரகாசித்தது. இருபுறத்திலுள்ள சீடர்களையும் மாறி மாறிப் பார்த்தபடியே கூறினார்.

"ஆம்! போதிமர நிழலிலேயேதான் அருள் கிட்டியது. ஆனால் அம்மரம் மட்டும் காரணம் இல்லை. இப்போது இங்கு ஆயிரம் ஜீவன்களுக்கு அன்னமிட்டது போல், அன்று எனக்கு—என் ஜீவனுக்கு—ஒருத்தி அன்னமிட்டாள். நிஷ்காம்யமாக என்னை உபசரித்து பக்தியுடன்தான் படைத்தாள் என்று ஒரு கணம் எண்ணிவிட்டேன். தன் குறைகளைக்கூறி முறையிட்டாள். குறைவற்றவள் குறைப்படுகிறாளே என்றுகூட வியந்தேன், ஆனால் கடைசியில் அவள் இருதயம் பிளந்து உண்மை தெரிந்துவிட்டது. இச்சைக்கு அடிமைப்பட்டிருந்த அவள், படுகுழியில் சாய்ந்து கொண்டிருந்தாள். அவ்வளவு பக்தியும் தருமமும் தலைஓங்காமல் போவானேன் என்று மனம் சிந்தித்தவாறே போதிமரத்தை அடைந்தபோது, மௌனத் தோற்றத்தோடு நின்ற அவ்விருக்ஷம் என்காதுகளில் உண்மையை ஒலித்தது. உலக துன்பங்களுக்குக் காரணம் ஆசை!! ஆசை!!"

பகவான் சற்று நிறுத்தினர். தம் கருணை விழிகளைச் சற்றே திருப்பி இடதுபுறம் நோக்கினர். அவரையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த

சிடன் சந்திரனின் கண்கள் நீரை ஆறாகப் பெருக்கிக் கொண்டிருந்தன. உணர்ச்சியுடன் அவன் உதடு துடித்தது. அவனங்கம் நிலை கொள்ளாமல் தவித்தது.

மறுகணம் அவன் சாஷ்டாங்கமாய்க் கீழே விழுந்து புலம்பினான்.

"பிரபோ! அன்று வந்தது தாங்கள்தானா! அப்பாதகியின் சொல்லை நம்பி, தங்களைக் கொல்லவல்லவோ தேடிவந்தேன்! ஆனால் தெய்வம்தான் என்னைக் காத்தருளியது. அன்றோடு அவளைத் துறந்துவிட்டேன். பலகாலத்திற்குப் பின்பு தங்களை அடையும் பாக்கியம் எனக்குக்கிட்டியது, பகவானே.........!"

சாந்தமூர்த்தி புத்தர் அவனைத்தடவிய வண்ணம் எழுந்திருக்கச் செய்தார். அவர் பாதங்களை வருடியவாறே அவன் கேட்டான்.

'பகவான்! அத் துர்ப்பாக்கிய சாலியான பாபிக்கு மீட்சியே கிடையாதா......?"

அவன் இதழ்கள் மெல்ல விரிந்தன.

"அப்பா! அவள் மீட்சி அடைந்து விட்டாள். உன்னை விட்டுச் சென்ற அவள் அக் காட்டை அடைந்து அதே போதி மரத்தடியிலே பல நாட்கள் பட்டினியாய்த் தவம் கிடந்தாள். அவள் மனத்திலிருந்த இச்சைகளெல்லாம் ஒவ்வொன்றாய் மறைந்து கடைசியில் நிர்விகல்பம் அடைந்த போது அவள் நிர்வாணம் எய்திவிட்டாள்......!"

சற்றுநேரம் மௌனம் நிலவியது அவ்விடத்தில். சந்திரனின் முகம் சோகத்துடன் மாறுதலடைந்தது. பொங்கிவந்த உணர்ச்சியை அடக்க மாட்டாதவனாய், பகவானின் இருப்பிடத்தைவிட்டு எழுந்து அப்பால் சென்றான்.

முறுவலுடன் மறுபக்கம் திரும்பிய பகவான் ஆனந்தனைப் பார்த்தார். வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்த அவன், கரங்குவித்துக் கேட்டான்:

"பிரபோ! இதென்ன! சந்திரன் ஏன் இப்படித் துன்புறுகிறான்? வைராக்கிய சொரூபியாயிற்றே அவன்......!"

புத்தர் வாய்விட்டுச் சிரிக்கும் சந்தர்ப்பங்களில் அதுவும் ஒன்றாக இருந்தது.

"அப்பனே! யாவரும் மானிடர்கள்தானே! ஆசைக்குள் அடங்கிவிட்டவர்களல்லவா! ஆசையை ஒழிப்பது அவ்வளவு சுலபமானதல்ல. வைராக்கிய சொரூபியானாலும் சந்திரன் ஆசையின் எல்லையைக் கடந்தவனல்லவே. துரோகம் செய்தவளானாலும் மனைவியின் மறைவைக்கேட்ட போது, அவ்வனையும் மீறி ஆசையும் அதைத் தொடர்ந்த துன்பமும் அவனை ஆட்கொண்டு விட்டன. அத் துன்பத்திலிருந்து மீள வேண்டுமானால் அந்த ஆசையை விட்டு விட வேண்டும். ஆயினும் எப்படியும் 'காலம்' இதற்கெல்லாம் ஈடு செய்து விடுகிறது.........!" ●





சோதனை

—ஜி.எஸ்.மணி—

டாக்டர் கிருஷ்ணன் அன்று மிகுந்த ஆயாஸத்துடனே வீடு வந்து சேர்ந்தார். உத்யோக உடுப்புக்களைக் கழற்றினதும், கழற்றாததுமான நிலையிலே அருகில் கிடந்த சாய்வு நாற்காலியில் அப்படியே சாய்ந்துவிட்டார்; அளவற்ற அலுப்புடன் கண்களை மூடிக்கொண்டு பெருமூச்சு விட்டார்.

உள்ளேயிருந்தபடியே அவர் மனைவி பாமையும் கணவனின் களை பொருந்திய முகம் சோர்வுற்றிருப்பதைக் கவனித்தாள்.

சூடான காப்பியைக் கையிலேந்திக் கொண்டு இளநகையுடன் அவள் எதிர்ப் பட்டாள்:

பாமையின் நடையோசையைக் கேட்டும் கிருஷ்ணன் கண்களைத் திறக்கவில்லை.

"ஒரு நாளுமில்லாமல் இன்றுமட்டும் இவ்வளவு அயர்ந்துபோய் வந்திருக்கிறீர்களே? வேலை ரொம்பக் கடுமையோ?" என்று அவளே வினவிய பின்னர்தான் மூடிக்கிடந்த அவர் கண்ணிமைகள் திறந்துகொண்டன.

"ஆமாம்; இன்று நான் கடைசியாகக் கவனித்த கேஸ் உடலுக்கு மட்டும் அயர்வைக் கொடுக்கவில்லை; என் உள்ளத்தையும் கலக்கிவிட்டது."

"டாக்டர்களின் மனம் எதற்கும் கலங்காத திண்மை வாய்ந்திருப்பது மிகவும் அவசியமாயிற்றே?" என்றாள் பாமை சிரித்துக் கொண்டே.

"உண்மைதான்; ஆனால் கேஸின் தன்மையையோ அல்லது என் வேலையின் கடுமையையோ குறித்து நான் கலங்கவில்லை; நான் கவனிக்க நேர்ந்த அந்த ஆளின் வெளியுருவத் தோற்றமே என் மனதை ஊடுருவித் தாக்கிவிட்டது" என்றார் டாக்டர் கிருஷ்ணன்.

"எனக்குப் புரியும்படி அதைப்பற்றிச் சொல்லலாமோ?" என்று வினயத்துடன் வினவினாள் பாமை.

"இன்று—வீட்டிற்குப் புறப்படுவதற்குச் சற்று முன்னர்—இளம் பெண்ணின் பிரேதம் ஒன்று 'போஸ்டு மார்ட்ட'த்திற்கு வந்து

சேர்ந்தது. 'போஸ்டு மார்ட்டம்' என்றால் தெரியுமல்லவா? இயற்கை மரணமாக இருக்காது என்ற சந்தேகத்தின் மீது பிரேத பரிசோதனை செய்வதை அந்தச் சொல் குறிக்கும். அந்தப் பெண்ணின் பிரேதத்தைப் பார்த்ததுமே—பல வருஷங்களுக்கு முன் என்னுடன் மிகவும் நெருங்கிப் பழக நேர்ந்த ஒருத்தியின் நினைவே என் உள்ளத்தில் பளிச்சிட்டது; அதே மாதிரி அசல் தோற்றம்! கடுகளவுகூட வித்யாஸமே யில்லை யென்றால் பாரேன்!''

"ஒருவேளை அதே பெண்தானோ என்னவோ?" என்று அதிசயித்தாள் பாமை.

"எடுத்த எடுப்பிலே நானேகூட அப்படித் தான் சந்தேகப்பட்டேன்; ஆனால் அப்புறம் 'அவளாக இருக்கமுடியாது' என்ற தீர்மானத்திற்கும் வந்துவிட்டேன்; ஏனென்றால் இன்று பிரேத பரிசோதனைக்கென்று வந்து சேர்ந்த அந்தப் பெண்ணின் பிரேதத்திற்கு இருபது வயதுதானிருக்கும்; ஆனால் அன்று பழகநேர்ந்த அந்தப் பெண்ணுக்கு இன்று முப்பது வயதிற்கு மேலாகியிருக்க வேண்டும்." என்றார் கிருஷ்ணன்.

"அந்தப் பெண் யார்!" என்று கேட்டாள் பாமை.

"இன்று வந்த பெண் பிரேதத்தைத் தானே கேட்கிறாய்?"

"இல்லை யில்லை; என்றோ உங்களுடன் நெருங்கிப் பழக நேர்ந்ததாகக் குறிப்பிட்டீர்களே? அந்தப் பெண்ணைப் பற்றித்தான் கேட்டேன்" என்றாள் பாமை குறும்புச் சிரிப்புடனே.

கிருஷ்ணனும் சிரித்தார்: "அதுவா? பத்து வருஷங்களுக்கு முந்திய நினைவு அது! சிறுவயது முதலே ஒன்றாகப் பழகி வந்தோம்; வயது வளர வளர எங்களுக்குள் ளாகவே நாங்கள் கண்டு வந்த கனவும் முற்றிக் கொண்டே வந்தது——"

"காதல்தானே அந்தக் கனவு?" என்று குறுக்கிட்டாள் பாமை குரலில் மிதந்த சிரிப்புடனே.

"கை கூடாத கனவு என்று சொல்லும் போதெல்லாம் அநேகமாகக் காதலே முன் நிற்பது வழக்கம்; எனக்கும், அவளுக்கும் இடையில் தோன்றிய நட்பைப்பற்றி உனக்குப் புரிந்த விதத்தில் ஏற்றுக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை யேதுமில்லை; கடைசியில் அவள் வேறு யாரையோதான் கல்யாணம் செய்துகொண்டாள். அதுமுதல் எங்கள் பாதையும் பிரிந்துவிட்டது. பத்து வருஷங்களுக்கு முன்னர் அவளை நான் கண்ட அதே உருவத்தில் இன்று மீண்டும் சந்திக்க நேர்ந்ததுதான் வியப்பே தவிர—அதைத் தொடர்ந்து அவளைப் பற்றிய நினைவு என் உள்ளத்தில் படர்ந்ததில் வியப்பென்ன பாமா?"

"அவள் பெயரென்னவோ? அதுவும் நினைவிருக்குமா?"

"நன்றாக நினைவிருக்கிறது; அவள் பெயர் ராதா—அவளே நினைவில் இருக்கும்போது பெயர்மட்டும் மறப்பானேன்?"

"'அவள் பெயரே நினைவிலிருந்து நீங்காமல் நிற்கும்போது அவளை மறக்க முடியுமா'" என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்குமல்லவா? என்று குறுநகையுடன் சொன்னாள் பாமை

டாக்டர் கிருஷ்ணன் சிரித்துவிட்டுப் பேசாமலிருந்தார்.

"இன்றைய பிரேத பரிசோதனையில் என்னவென்று கண்டுபிடித்தீர்கள்? கொலையா? தற்கொலையா?"

"அதுவா? தற்கொலை யென்றுதான் தோன்றுகிறது. என்ன கஷ்டமோ—பாவம் பேதைப் பெண்! ஆனால்—என் மனம் விட்டுப் பேச ஆசைப் படுகிறேன் பாமா; நீ எப்படி நினைத்துக்கொண்டாலும் சரி—அந்தப் பெண்ணின் பிரேதத்தை இரு கூறாக அறுத்துப் பரிசோதிக்க முனையும்போது என் ஹிருதயத்தையே இரு கூறாக அறுத்து சோதித்துக் கொண்டிருப்பதுபோலவே ஒரு உணர்ச்சி என்னுள் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது; அந்தக் கலக்கத்தின் ஒரு பகுதியைத்தான் நீயும் இப்போது கண்டாய்" என்று கூறிய டாக்டர் கிருஷ்ணன் மீண்டும் நெடு மூச்செறிந்தார்.

பாமை முகத்தைத் திரும்பிக்கொண்டாள்.

* * *

அந்தச் சம்பவத்திலிருந்து டாக்டர் கிருஷ்ணன் தம் உள்ளம் தம் வசத்தில் இல்லை யென்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டார்.

ராதையின் ஞாபகம் அடிக்கடி அவர் நெஞ்சிலே அலைமோதியது. களை பொருந்திய அவள் முகம்

அவர் மனக் கண்ணெதிரே அடுத்தடுத்து வந்து நின்றது; அதைத் தொடர்ந்து அந்த நாட்களிலே அவளுடன் பழகியது; பேசிய தோரணை, கண்ட கனவு; அவை யெல்லாம்முடிவானவிதம்—எல்லாம் அலையலையாகப் பொங்கிப் பாய்ந்தன. அவற்றுடன் அன்று பிரேத பரிசோதனைக்கென்று பார்த்த பெண்ணின் தோற்றமும் கலந்து கலந்தே வந்து நின்றது.

அசல் ராதையையே உரித்து வைத்தது போன்ற தோற்றம் கொண்ட அந்தப்பெண், வாழ்வு மலரும் அந்தப்பருவத்தில் ஏன் தற்கொலை செய்து கொண்டு மரிக்கவேண்டும்? விஷத்தை உட்கொண்டு மாயவேண்டிய நிலைக்கு வர அந்தப் பெண் தன்வாழ்விலே அப்படியென்ன கசப்பைக் கண்டுவிட்டாள். அவளுடைய உடலை அறுத்துச் சோதிக்கும் போது ராதையையே அறுத்துச் சோதனை செய்வதாக அவருக்கு ஏனப்படி ஒரு பிரமை உண்டாகவேண்டும்? அது எதனுடைய சூசகம்? அதைத்தொடர்ந்து என்னதான் வரவிருக்கிறது?

ஏனோ தெரியவில்லை; டாக்டர் கிருஷ்ணனுக்கு ராதை எவ்விதத்திலாவது மறுபடியும் அவரெதிர்ப் படுவாளோ என்ற எண்ணம் உள்ளத்தின் ஆழத்திலே அடிக்கடி எழுந்து நின்றது; ஏன்? அவள் மீண்டும் எதிர்ப்பட வேண்டுமென்பதே அவருடைய ஆசையாக இருந்தது; ராதையைக் கூடிய சீக்கிரம் தம் எதிரில் உயிரோடு நிற்கப் பார்க்க மாட்டோமா' என்ற ஏக்கம் அவரைப்பிடித்தாட்டியது. செத்துப்போன அவளுடைய தோற்றத்தைக் கண்டமாதிரியே உயிருடன் இன்னும் ஒரே யொரு முறையாவது அவளைச் சந்திக்கவேண்டும்' என்று அவர் மனப்பூர்வமாக விரும்பினர்.

வேலையில் ஈடுபட்டிருக்கும் போதும் சரி— வீட்டில் ஓய்வு எடுத்துக்கொள்ளும் போதும் சரி— தூக்கத்திலும் சரி— விழிப்பிலும் சரி— ராதையைப் பார்க்கவேண்டுமென்று' கிருஷ்ணனுக்குத் தளராத ஆசை.

பாமை வந்தாள்: "என்ன? இப்போதுதான் வீட்டிற்கு வந்ததும்— வராததுமாய் இருக்கிறீர்கள்; அதற்குள் யாருக்கோ அவசரம்; உங்களைப்பார்க்க வேண்டுமென்று இங்கேயே வந்துவாசலில் நிற்கிறார்கள்; இங்கு வரச்சொல்லட்டுமா அல்லது நாளைக்கு 'நர்ஸிங்ஹோமிலே'யே வந்து பார்க்கும் படி சொல்லியனுப்பி விடட்டுமா?" என்று சலிப்புடன் விஷயத்தைத் தெரிவித்தாள்.

தேடி வந்தவர்களைத் தற்சமயத்துக்குத் திருப்பி அனுப்பிவிடவே அவள் விரும்பினளென்பது குரலில் தெளிவாகத் தொனித்தது.

"வந்திருப்பவர்கள் யாரென்பதைத் தெரிந்து கொண்டாயா?" என்று கேட்டார் டாக்டர் கிருஷ்ணன்.

"யாரோ தெரியவில்லை; நான் இதற்குமுன் பார்க்காத புது முகங்களாகத் தெரிகிறது; பார்வைக்குப் புருஷன் — மனைவியைப்போல் படுகிறது; அந்த ஆண்பிள்ளையைவிட அந்தப் பெண்தான் உங்களைப் பார்த்தேயாகவேண்டு மென்று துடித்துக்கொண்டு நிற்கிருள்; ஒரே அடியாக வெளுத்துப்போய் — சோகை பிடித்த வளைப்போலே காண்கிருள்" என்றாள் பாமை.

"என்ன அவசரமோ—பாவம்! வரச்சொல்லேன்? பார்த்தேவிடுவோம்" என்றார் கிருஷ்ணன்.

"வெளியில்தான் திரவில்லை யென்றால் வீட்டிற்கு வந்தபிறகு கூடவா இந்தத் தொல்லை? நல்ல டாக்டர் தொழில்!" என்று வாய்விட்டு முணுமுணுத்துக்கொண்டே பாமை போனாள்.

அடுத்த நிமிஷமே அவர்களிருவரும் டாக்டர் கிருஷ்ணனின் எதிரே வந்து நின்றார்கள். அந்த அறைக்குள் நுழையும்போதே அவள் முன்னேயும், அவன் அவள் பின்னேயுமாகத்தான் வந்தார்கள்.

வினயத்துடனே அந்தப்பெண் கைகூப்பினாள்.

முதல் பார்வையிலேயே டாக்டர் கிருஷ்ணனுக்குப் பொறிதட்டிப் போய்விட்டது.

"நீ—நீங்கள்—நீ—?" என்று எதையோ சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவர் தவித்தார்.

அந்தப் பெண் உடனே புரிந்துகொண்டுவிட்டாள்; வெளிறிய முகத்திலே லேசாகத் தவழ்ந்த புன்னகையுடன் அவள், "ஆமாம்; நான் ராதை தான் டாக்டர், பரவாயில்லை—நீங்களும் என்னைப் பற்றி இன்னமும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே?" என்றாள்.

"மறந்துவிட முடியுமா என்ன? ஆனால் நீ என்னை எப்படிக் கண்டுபிடித்தாய் என்பதுதான் எனக்கு ஆச்சர்யம்" என்று டாக்டர் கிருஷ்ணன் அதிசயித்தார்.

"உங்களையா — உங்கள் விலாஸத்தையா?" என்று வேடிக்கையாகக் கேட்பதுபோல் கேட்டு அவள் சிரித்தாள்; "சமீபத்தில்தான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தோம்; வெகு வருஷங்களாகவே எனக்கு ஹிருதயத்திலே பொறுக்க முடியாத வலி; வரவர அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதற்குமுன் பல டாக்டர்கள் பார்த்துவிட்டார்கள்; ஒன்றிலும் பலனில்லை; 'விசுவாசம் காரணம்—வியாதி நிவாரணம்' என்று சொல்வார்களல்லவா? அதை யொட்டி நீங்கள் பார்த்த பிறகாவது வியாதி போகாதா என்பது என் எண்ணம்; உங்கள் பெயர்தான் பூராவும் பரவிக்கிடக்கிறதே! நேற்றுப் பிறந்த குழந்தைக்குக்கூட உங்கள் பெயரும், நர்ஸிங்ஹோமும் நன்றாகத் தெரிகின்றனவே? உங்களைக் கண்டுபிடிப்பதில் எனக்கென்ன கஷ்டம்?" என்று சிரித்துக் கொண்டே அவள் பேசினாள்.

விஷத்தைத் தின்று அன்று செத்துக்கிடந்தவளே மீண்டும் எழுந்துவந்து அப்போது பேசுவதுபோலே அவருக்குத் தோன்றியது. வெகு வருஷங்களுக்கு முன்னர் கண்டிருந்த உருவம் ஒரு சிறிதும் மாறவேயில்லை; ஆனால் மங்கிக்கிடந்தது. அதிகமாக வயது முதிர்ந்துகூடக் காணப்படவில்லை; ஆனால் வெம்பி, வதங்கிக்கிடந்தது. மற்றப்படி அதே பேச்சு; அதே பார்வை; அதே விஷமம்—அவயவங்களிலும் அதே நொடிப்பு. குரல் மட்டும் பழையமாதிரியில்லை; அதே ஒலியின் நிழல் தெரிந்தபோதிலும் பழைய நெகிழ்ச்சியில்லை; இனிமையில்லை; தந்தி அறுந்த வீணையைப்போல் தொனித்தது.

"ஒரு சில வார்த்தைகளுக்குள்ளே தன் உள்ளக்கிடக்கை அனைத்தையும் சாதுர்யமாக அடக்கித் தெரிவித்துவிட்டாளே' என்று டாக்டர் கிருஷ்ணன் தாமே வெகுவாக வியந்துகொண்டார்.

"இதில் இன்னொரு ஆச்சர்யமென்னவென்றால் சிலநாட்களுக்கு முன்னர்தான் உன்னையே உரித்துவைத்ததுபோல் தோன்றிய இன்னொரு பெண்ணைப் பரிசோதிக்க நேரிட்டது; நீயேதானோ என்றுகூடச் சந்தேகப்பட்டுவிட்டேன்" என்றார் கிருஷ்ணன்; அன்று நேர்ந்த அந்தச் சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசாமலிருக்க அவரால் ஏனோ முடியவேயில்லை; ஆனால் நடந்ததை அப்படியே தெரிவித்துவிடவில்லை; விரும்பத்தகாத பகுதியை மறைத்துவைத்தே பேசினார்.

"அந்தப் பெண்ணின் கேஸும் என்னுடையதைப் போன்றதுதானே?" என்று கேட்டு ராதை கண்களைச் சிமிட்டினாள்.

"உருவ ஒற்றுமைக்காக மட்டுமே குறிப்பிட்டேன்" என்றார் கிருஷ்ணன்,

"வேறு எந்தவிதத்திலும் ஒற்றுமையிருந்தாலும் சரிதான்; நீங்கள் எதையாவது சொல்லிச் சமாளித்துக்கொள்ளலாம்; ஏனென்றால் நீங்கள் டாக்டர்; அதுசரி—வெறும் உடற்கூறு சம்பந்தப் பட்டமட்டில்தான் நீங்கள் டாக்டரா? அல்லது மனோவைத்தியமும் தெரியுமோ?" என்று அவள் வினவினாள்,

"ஏனிந்தச் சந்தேகம் உனக்கு?"

"இல்லை- என் நெஞ்சுவலிக்குப் பரிகாரம் காண முடியுமோ என்பதற்காகத்தான் கேட்டேன்."

"நாளையதினம் காலையில் நர்ஸிங்ஹோமிற்கு வந்தால், 'எக்ஸ்-ரே' எடுத்துப்பார்த்துச் சொல்லி விடுகிறேன்."

"நீங்கள் எதைப்பார்த்து என்ன சொல்லுவீர்களோ—தெரியாது; ஆனால் அந்த நாளிலே 'டாக்டருக்குத்தான் படிப்பேன்' என்று சொல்லிப் பிடிவாதமாகப் படித்து முன்னுக்கு வந்ததைமட்டும் அறிவேன். இவ்வளவு காலத்திய உங்கள் அனுபவத்தைக் கொண்டு என்னையும் சோதித்து வலியை நீக்க முடியுமென்றால் உங்கள் படிப்பின் வெற்றி உங்களுக்குக்கிடைக்கும்; அது இல்லையென்றால் உங்கள் அனுபவத்தின் துணையைக் கொண்டு என்னிடத்தில் எப்படியாவது மேற்றிக் கொன்று விடுங்கள். பொறுக்க முடியாத இந்த நெஞ்சுவலியுடனும், சொல்லத்தரமற்ற வேதனையுடனும் மேலும் உயிர்வாழவே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. என்ன? கொஞ்சம் தயவு செய்யுங்கள்; நான் வரட்டுமா? நாளையதினம் அவசியம் நர்ஸிங்ஹோமிற்கு வருகிறேன்." என்று சொல்லி ராதை விடைபெற்றுக் கொண்டாள்.

திரும்பிப் போகும் போது அவள் புருஷன் முன்னேயும், அவள் அவன் பின்னேயுமாகப் போனார்கள். அங்கிருந்தவரையில் அவன் வாய் திறந்து ஒருவார்த்தைகூடப் பேசவேயில்லை; குனிந்ததலை நிமிராமலே உட்கார்ந்திருந்தான். பரமசாதுவாகத் தோற்றமளித்தான்; திரும்பிப் போகும் போதுமட்டும் விடைபெற்றுக் கொள்வதாகத் தலையசைத்தான், அவ்வளவுதான்.

அவர்கள் தலைமறைந்ததும் பாமை மீண்டும் வந்தாள்.

"பாமா வந்தது யார் தெரியுமோ? அவள்தான் ராதை; அவன் அவள் புருஷனும்" என்றார் கிருஷ்ணன்.

பாமை ஒருகணம் திகைத்து நின்றது போல் தோன்றினாள்; அப்புறம்- 'என்னவாம் அவளுக்கு?" என்று கேட்டாள்,

"நெஞ்சு வலியாம்; நாளைக்கு 'எக்ஸ்-ரே' எடுத்துக் கொள்ள வரப்போகிறாள்."

சிரிப்பை வரவழைத்துக் கொண்டு பாமை, "பழைய வலி மறுபடியும் பற்றிக்கொண்டு விடப்போகிறது! கொஞ்சம் உஷாராகவே இருங்கள்!" என்று தமாஷாகப் பேசுவதுபோலே எச்சரித்தாள்.

"டாக்டருக்குப் படித்தது நான் செய்த தவறா?" என்று கிருஷ்ணனும் சிரித்தார்-- "வீண் கவலைப் படாதே!"

"நீங்கள் படித்தது சரியோ—தவறோ— எனக்குத்தெரியாது; ஆனால் நான் டாக்டருக்கு வாழ்க்கைப்பட்டு விட்டேனே! கவலைப்படாமலிருக்கத் தான் கற்றுக் கொண்டிருக்கிறேன்!" என்றாள் பாமை.

*　　*　　*

சொன்ன படியே மறுநாள் எக்ஸ்-ரே எடுத்துக் கொள்ள ராதை வந்து சேர்ந்தாள்.

அவள் மட்டும் தனியே வந்திருப்பதைக் கண்ணுற்று, கிருஷ்ணன் "உன் புருஷன் வர வில்லையா?" என்று கேட்டார்.

''அதையேன் கேட்கிறீர்கள்? அவர் போக்கே அலாதி; நேற்றுத்தான் அவரைக் கவனித்தீர்களே? அவரைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்னவோ?''

"பரமசாது; மகாசங்கோஜி— என்றுதான் அபிப்பிராயப் பட்டேன்."

அதைக்கேட்டதும் ராதை சிரித்தாள்: "அப்படியிருந்தால்தான் எனக்கும் எவ்வளவோ ஆறுதலாக இருந்திருக்குமே? ஆனால் அதுதான் இல்லை; மஹாசந்தேகப் பிராணி; எப்போதும் தவறுகள் கண்டுபிடித்து என்னைக் குற்றம் சாட்டிக் கொண்டேயிருப்பதில் நிபுணர்; ஒரு காரியமும் உருப்படியில்லை; அவரோடு கூடியவாழ்வு 'போதும்' போதும்' என்று கசந்துவிட்டது எனக்கு. ஒவ்வொரு கணமும் என் சாவையே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். தற்கொலைக்கு என் மனம் இன்னும் துணியவில்லை—"

"வீணாக உன்னை அலட்டிக் கொள்ளாதே ராதே; ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் வாழ்க்கை கசப்புள்ளதாகத்தான் தோன்றும்."

"உங்களுக்குக்கூடவா?" என்றாள், அவள் சிரித்துக்கொண்டே.

"ஏனிருக்கக்கூடாது?—உம்; 'எக்ஸ்-ரே' எடுக்கத் தயாராகிறாயா?"

"அதற்குத்தானே வந்திருக்கிறேன்; என் ஹிருதயத்தில் இருப்பதைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்—பார்க்கிறேன்! நேற்று நான் உங்கள் வீட்டில் பார்த்தது உங்கள் மனைவிதானே? அவள் பெயரென்னவோ?"

"பாமை—சத்யபாமை!"

"உம்!" என்ற ராதா கொஞ்சம் இருமினாள்; "பார்த்தீர்களா! இப்படி இருமும்போதெல்லாம் நெஞ்சுவலி தாளவில்லை; உயிர்போகாமல் போய்த் திரும்புகிறது?—அவள் பெயர் 'பாமை' யென்று சொன்னீர்கள்? உம்; சரிதான்; அந்த நாட்களிலே உங்களை ராதாகிருஷ்ணனாகவே மதித்துவந்தேன். ஆனால் இப்போது பாமா உங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டாள். அவள் ஹிருதயம் எப்படிப் பட்டதோ?-ஏன் டாக்டர் ஸார்! இதற்கு முன்னரும் எத்தனையோ இளம் பெண்களின் ஹிருதயத்தைப் பரிசோதித்துப் பார்த்திருப்பீர்களே! ஏதாவது ஒன்றைத் தொடர்ந்து உங்கள் ஹிருதயத்திலும் வலிதோன்றி யிருக்கிறதோ? ஒளிக்காமல் சொல்லுங்கள்!"

"சற்றுநேரம் பேசாமலிரு ராதா; எக்ஸ்—ரே எடுக்கும்போது ஓயாமல் பேசக் கூடாது: தெரியுமா?"

ராதையின் வெளிறிய முகத்திலே இளமுறுவல் தவழ்ந்தது; "ஏ அம்மாடி! 'டாக்டர்' என்று பெயர் படைத்துவிட்டாலே நெஞ்சும் கல்லாகி விடும்போலிருக்கிறது! அந்தக் காலத்தில் என்னிடம் இந்தமாதிரியா பேசினீர்கள்?"

"அலட்டிக் கொள்ளாதே ராதா; பேசாமலிரு."

எக்ஸ்—ரே எடுத்து முடிந்து விட்டது; அதைக் கவனித்ததில் ஹிருதயத்தின் ஒரு பகுதியைச் சூழ்ந்து வெண்மையாக ஏதோ படர்ந்துகிடந்தது தெரிந்தது; லேசான புகைப் படலத்தைப் போல அது காட்சியளித்தது; தவிர அது பரவிக்கிடந்த பகுதியிலே அங்கங்கே லேசாக அரிக்கப்பட்டிருந்ததுபோலவும் தோன்றியது.

"அடாடா! ஹிருதயத்தையே தின்னத் தொடங்கிவிட்டதே!" என்று சொல்லி டாக்டரே திடுக்கிட்டுவிட்டார்.

ராதை பரிகாசமாகச் சிரித்தாள்; "என்றோ எனக்குத் தெரிந்த உண்மையை இன்றுதான் நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள்! என் உயிரையே குடிக்கத்தொடங்கி விட்டதே!"

"தாமதமின்றி உடனே ஆப்ரேஷன் செய்தாக வேண்டும்."

"இனியும் நான் உயிர் வாழ்வதில் பலன்தான் என்ன டாக்டர்?"

"நீ பேசாமலிரு ராதா, உனக்கு ஒன்றும் தெரியாது"

* * *

தொடர்ந்து ஆபரேஷனும் நடந்தேறிவிட்டது. அந்த ஆபரேஷன் அவருக்கு வெற்றியளிக்குமா அல்லது தோல்வியைத்தான் தருமா என்பதுபற்றி டாக்டர் கிருஷ்ணனுக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் அந்த ஆபரேஷனைத் தொடர்ந்து ராதையின் உடலில் காணப்பட்ட ஒரு அதிசயம் அவருக்கே புரியாத புதிராகத்தான் விளங்கியது.

அவளுடைய ஹிருதயத்தைச் சோதித்தபின்னர் பழையபடி அதை இருந்தஇடத்தில் வைத்து மூடி மேலே இறுகப்பிடித்துத் தையல் போட்டதுமே டாக்டர் கிருஷ்ணன் அந்த இடத்தைக் கவனித்தார். அவளுடைய இரு மார்புகளுக்கும் இடையே—நெஞ்சு இருப்பதாகச் சாதாரணமாகத் தொட்டுக் காண்பிக்கப்படும் இடத்திலே—சிறு அளவில் குழியொன்று விழுந்தது கண்டு அவரே திகைத்துவிட்டார். ஒரு அங்குல அகலத்திற்கும், அரை அங்குல ஆழத்திற்குமாக அந்தப் பள்ளம் தென்பட்டது. விரலைக்கொண்டு அமுத்தும்போது—அமுத்தும் ஆழத்திற்கு அது அமுங்கியது. ஒருகால் தையல்தான் சரியாக விழவில்லையோ என்றும் அவர் சந்தேகித்தார்; மீண்டும் சோதித்ததில் அப்படியும் தெரியவில்லை; ஹிருதயத்தில் சூன்யமாகிக் கிடந்த பகுதி அந்த இடத்தில் புரண்டு விழுந்திருக்குமோ என்று யோசித்தார். அவ்வளவு பெரிய அளவுக்குத் தவறுசெய்துவிட டாக்டர்

கிருஷ்ணன் போதிய அனுபவமற்றவரா என்ன? அப்படியுமில்லை.

ஒன்றுமேயில்லை யென்ருல்—அந்தப் பள்ளம்—அந்த இடத்தில் எப்படி விழுந்தது? ரப்பர் பந்தைப்போலே அது அழுந்தி எழும்பக் காரணமென்ன?

தையலைப் பிரித்த பின்னர் அந்தப் பள்ளம் ஒருகால் மேவி விடுமோ என்று டாக்டர் கிருஷ்ணன் எதிர்பார்த்தார். அப்போதும் அது சரியாகவில்லை.

விரலால் அந்தக் குழியிலே அழுத்தும்போது ராதை வலியை உணர்ந்தாள்; வலி பொறுக்கக் கூடியதாகவே இருப்பதாக அவள் தெரிவித்த போதிலும் அங்கு மீண்டும் எதற்காக வலியுண்டாகவேண்டுமென்பது எவ்வளவு யோசித்தும் கிருஷ்ணனுக்குப் புரியவேயில்லை.

ஒருகால் ‘உள்புண்’ இன்னும் ஆறவில்லையோ?

வாழ்க்கையின் மேடு பள்ளங்களைப் பொறுக்க முடியாத அளவுக்கு உணர்ந்துவிட்டதால்தானே அவள் நெஞ்சிலும் அத்தகைய பள்ளம்விழுந்துவிட்டகாரணம்? அல்லது அவள் வாழ்க்கையிலேயே பூர்த்தி செய்யமுடியாத அளவுக்கு ஆழ்ந்துவிட்ட குழியின் அறிகுறியோ அது?

அல்லது டாக்டர் கிருஷ்ணனின் வாழ்விலே எதிர்பாராமல் ஏற்பட்ட பள்ளத்தின் அடையாளமோ?

எவ்விதத்திலாவது அந்தப் பள்ளம் மேவ வழியில்லையா? அந்தக் குழியைத் தூர்க்க மார்க்கமில்லையா?

ஒருவேளை டாக்டர் கிருஷ்ணனின் ஹிருதயத்தை அப்படியே எடுத்து அந்த இடத்தில் வைத்து மூடிவிட்டால் அந்தப் பள்ளம் மேவிக் கொண்டுவிடுமா? ராதையின் செல்லரித்துப் போன ஹிருதயத்தை அடியோடு எடுத்தெறிந்து விட்டு அந்த இடத்தில் டாக்டர் கிருஷ்ணனின் நெஞ்சைவைத்து மூடிவிட்டால்?

ராதையையே வைத்தகண் வாங்காமல் உற்றுப் பார்த்துக்கொண்டு டாக்டர் கிருஷ்ணன் நின்று கொண்டிருந்தார் தம் கைகளைப் பின்புறம் சேர்த்துக் கட்டியபடி,

"டாக்டர்! இந்த இடத்தில் ரணம் ஆறவில்லை டாக்டர்! நான் இதற்குத்தான் அப்போதே சொன்னேன் ஆபரேஷன் வேண்டாமென்று. வெளி வலியைப்பற்றிக் கவலை அவசியமில்லை டாக்டர்; ஆனால் உள் புண்தான் ஆழ்ந்துகிடக்கிறது— இதோ: உங்கள் கையை இந்த இடத்தில்வைத்து, தொட்டுத்தான் பாருங்களேன்? ஏதாவது உணர்கிறீர்களா என்று?" மெலிந்த குரலில் நலிந்து போய், சொன்னபடியே தன் மார்பைத் திறந்து காண்பித்துக் குழிவிழுந்த இடத்தைச் சுட்டினாள் ராதை.

அந்த இடத்தைத் தொடுவதற்கென்று அவசரமாகக் கையை நீட்டிய டாக்டர் கிருஷ்ணன் முன் வந்த வேகத்திலேயே பின்னடைந்து விட்டார்.

ராதை காண்பித்த இடத்தை மீண்டும் தொட்டுப் பார்க்க அவருக்குத் தைரியமில்லை; துணிவில்லை.

அந்த இடத்தில் இருந்த அந்தப்பள்ளம் அவள் வாழ்வின் பள்ளம் மட்டுமல்ல; அவர் வாழ்வின் பள்ளமும் ஆகும். அதைச் சோதிக்க அந்த டாக்டருக்குத் துணிவில்லை.

அன்று மாலை டாக்டர் கிருஷ்ணன் தாங்கமுடியாத அயர்வுடன் வீடு திரும்பியபொது வழக்கம் போல் பாமை எதிர்ப்பட்டாள்.

அவரிடம் காணப்பட்ட களைப்பையும் கவனித்து— "என்ன? உங்கள் ராதைக்கு உடம்பு எப்படி இருக்கிறது? பிழைத்துக்கொண்டு விடுவாளல்லவா?" என்று விசாரித்தாள்.

"அவள் பிழைத்திருப்பதைவிட சாவதையே மனப்பூர்வமாக விரும்புகிறேன்" என்று டாக்டர் கிருஷ்ணன் அமைதியாகவே பதிலளித்தார்.

பாமா வியப்புடன் அவரைக் கவனித்தாள். மேலும் விளக்கம் கோர அவள் முன்வரவில்லை. மௌனமாகவே ரேடியோவின் புறம் திரும்பி அதை முடுக்கி விட்டாள்.

யாரோ வைணிகன் ராகமாலிகையாக, தானத்தை அற்புதமாக அடுக்கிக் கொண்டிருந்தான்; ஆரபி— கானடா— பந்து வராளி— மோஹனம் என்றபடி ஒன்றின் மேல் ஒன்றாகச் சமைத்து அழகொழுகச் சிங்காரித்துக் கொண்டிருந்தான், அந்த விறு விறுப்பை வர்ணிக்க வார்த்தைகளே தெரியவில்லை.

டாக்டர் கிருஷ்ணனும் கேட்டுக்கொண்டுதானிருந்தார்— "வீணையின் தந்திக்கும்— மனிதனின் ஹிருதய நாடிக்கும் இடையேயுள்ள துடிப்பின் ஒற்றுமையை இப்போதுதான் தெளிவாக உணர்கிறேன்" என்று அவர் தம்மையறியாமலேயே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தார். ●

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி", கும்பகோணம்.

தற்காலத்திய தமிழ்க் கட்டுரைகளும், வியாசங்களும், சிறுகதைகளும் கடமுட கடமுடவென்று பழைய முறுக்கையும் சீடையையும்போல இருக்கின்றன. இலக்கண இலக்கியப் பொருத்தமும் பாஷைச் சுத்தமும்பொருந்தியிருக்கலாம்; ஆனால், பிராசம், ஹாஸ்யம், பரிபாஷை, பரிகாசம் இவைகள் அதிகமாகக் காணவில்லையே! மாதப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், தினப் பத்திரிகைகள், கதைப் புஸ்தகங்கள், சிறுகதைகள், தொடர் கதைகள், எல்லாவற்றையும் படித்துப் பார்க்கிறேன். எதைப் படித்தாலும், குத்து, கொலை, சண்டை, சச்சரவு, புரட்சி, தடை, போலீஸ், கோர்ட்டு, ஜெயில், இவைகளைப் பற்றித்தான் விஷயம் குடிகொண்டிருக்கிறது! இல்லையா, காதல்! அடேயப்பா, என்ன காதல், என்னகாதல்! ஓடிப்போய்க் கொண்டேகாதல், ஒளிந்துகொண்டு காதல், மணம்பூண்டவர்கள் மணக்கோலமே வேண்டாம்என்கிறவர்களைப் பின்தொடர்ந்து காதல்! ஓடுகிறவனைத் துரத்திக்கொண்டே காதல்! சாகக்கிடக்கும்போது காதல்! செத்தவனையும் காதல்! இப்படிப் பலவிதமாகக் காதலைப்பற்றியே சதாசர்வகாலம் படிக்க வேண்டியிருக்கிறது! இவ்வளவுதானா பிரபஞ்சத்திலே? வேறு நிகழ்ச்சிகளே கிடையாதா? பேச்சும், விளையாட்டும், சிரிப்பும், தமாஷும், இடையவே கிடையாதா? அவைகளைப் பாராட்டி எழுத முடியாதா? தமிழ்ப் பாஷையில் புத்தகங்களைப் படிக்கவிரும்பினால், அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவேதானா இருக்க வேண்டும் என்று தோன்றிப்போய் விட்டது.

தற்காலத்திய எழுத்தாளர்கள் கிளம்பியிருக்கும் நவீனப்புரட்சியினால், தமிழன் சிரிப்பானா, ஹாஸ்யத்தை அனுபவிப்பானா, வார்த்தைகளையும் வாக்குகளையும் வாணங்கள்போல வீசி வேடிக்கை பார்த்துத் துள்ளி விளையாடுவானா, என்றே சந்தேகிக்கும்படி ஆய்விட்டது!

பரிபாஷையும், பரிகாசமும் பத்திரிகை ஆசிரியர்கள் அநந்தமாகக் கையாளவேண்டிய பாஷையனுஷ்டானங்கள். ஆனால் தற்காலத்திய ஆசிரியர்கள் அவைகளை நன்றாக உபயோகிப்பதில்லை. ஆதலால்தான் பத்திரிகைகளைப்படிக்கும்போதும், படித்த பின்பும் நமக்குத் திருப்தியிருப்பதில்லை. அழுத்தந்திருத்தமாகவும், தீவிரத்துடனும் எடுத்துக்கூறவேண்டிய விஷயங்களை அவர்களில் பெரும்பாலர், ஒன்று, சம்மட்டியடிபோல் அடிக்கிறார்கள், அல்லது நுனிப்புல் கடிப்பதுபோல் பட்டும் படாமலும் எழுதுகிறார்கள். இரண்டு வகையிலும், படிக்கிறவர்களுக்கு அதிருப்திதான். வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது மாதிரி பரிபாஷையும் பரிகாசமும் பொருந்தின கட்டுரைகளையெழுதினால் எவ்வளவோ பொருத்தமாயிருக்கும். அதற்கு ஆட்களைக்காணோம்!

பரிபாஷையில் பலவகையுண்டு; வகுப்புச் சம்பந்தமானவையுண்டு, தொழில் சம்பந்தமானவையுண்டு, உத்தியோக சம்பந்தமானவை, வியாபார சம்பந்தமானவை, விவகார சம்பந்தமானவை, ஜில்லாவுக்குப் பிரத்தியேகமானவை, அநேகம் நாடோடி ஜனங்களிடம்

பிரசாரமானவை, இப்படிப் பலவகையுண்டு. எந்தவிதமான சந்தர்ப்பங்களிலே அவைகளை உபயோகப்படுத்தினாலும் பரிபாஷை வாக்குகளுக்கு ஒரு அலாதியான ஹாஸ்ய சுபாவம் உண்டென்றே சொல்லவேண்டும். ஆதலால்தான் ஜனநாயக சமூகத்தில், வகுப்புகளும், கட்சிகளும், வாக்காளர்களுடைய ஆதரவை வேண்டிப் போராடும்போதும் தலைவர்கள் ஒருவரையொருவர் நிந்தித்தும் தூஷித்தும் பேசும்போதும்,—இந்த வைபவம் இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகுமே!—பரிபாஷையைத் தீவிரமாக உபயோகித்து வந்தால், "அடித்த இடம் புண்ணாகாது, அறைந்த சப்தம் செவிக்கெட்டாது" என்பது போலிருக்கும். — பாஷைப் பிரயோகத்தில் சாதுரியம் இல்லாமலிருக்கும் பக்ஷத்தில் ஜனநாயகம் ரசாபாசமாய்விடும்.

இப்பொழுது பரிஸ்திதி யென்ன? நமது தலைவர்கள் ஒருவரை யொருவர் தினந்தோறும் தூஷித்துக்கொண்டே யிருக்கிறார்கள். திட்டாத நாள் கிடையாது! எப்படிப் பட்ட திட்டு வசனங்கள்? அசடு, அகம்பாவி, அதிகப்பிரசங்கி, ஆஷாடபூதி, என்றெல்லாம் சொல்லுகிறார்கள்—இது எதற்காக? நேருத்தரம் ஜன்மப்பகை யல்லவா? பரிபாஷையிலே சொல்லலாமே! உதாரணமாகக் கவனியுங்கள்—சமீபத்தில் ஒரு பிரமுகர், நமது தலைவர் ஒருவரை, "சுத்த அவிவேகி; மூளையில்லாதவர்" என்று அழைத்துவிட்டார். எழுதினவர் பெயர் ஸ்ரீமான் குஞ்சாலாடுதான் என்று வைத்துக்கொள்ளுவோம்; தலைவர் பெயரோ ஸ்ரீமான் பூச்சாண்டிதாஸ் என்று வைத்துக்கொள்ளுவோமே! அவிவேகி, மடையன் என்று சொன்னபின் பூச்சாண்டி சும்மாவிருந்தாலும் அவருடைய சிஷ்யர்கள் சும்மாவிருப்பார்களா; ஆஹா, என்று கர்ஜித்தார்கள்; கூட்டம் கூட்டினார்கள், பல்லைக் கடித்தார்கள், தோள்களைத் தட்டினார்கள். நானே குஞ்சாலாடுவாயிருந்தால், அழகாகப் பரிபாஷையில், ஸ்ரீமான் பூச்சாண்டியின் நிஜப்பெயர், அண்ணாமுத்துவா, ஆதிசுப்பனா என்று கேட்டுவிட்டுச் சும்மாவிருப்பேன். ரசிகர்கள் புரிந்துகொள்வார்கள்; அண்ணாமுத்து, ஆதிசுப்பன் என்றால் வடிகட்டின மடையன் என்பது! போதாதோ?

மனைவியினுடைய ஆளுகைக்கு உட்பட்ட ஆட்கள் பலபேருண்டு, அல்லவா? காதில் கடுக்கன், நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டு, கட்டுக்குடுமி, கன்னுக்குடுமி, மயில்கண் வேஷ்டி தரித்த ஆட்களாயிருக்கலாம்; இல்லாவிடில், நடுவகிடு, நெற்றியில் குங்குமப் பொட்டு, விரலுக்குவிரல் மோதிரம், இடுப்பை யசக்கியநடை, வாயைக் குழைத்துப் பேச்சு இவை பொருந்தின ஆட்களாயிருக்கலாம். அவர்களுக்கு எப்பொழுதும், எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் கூட்டத்திலும் மனைவி ஸ்தோத்திரம்தான் பிரதானம். இந்த ரகத்தைச் சேர்ந்தவனுக்குப் பரிபாஷையில் "பொம்மாயன்" என்பதுண்டு; பொம்மாயன் என்றால் பெண்பிள்ளைவாயன் என்று அர்த்தம்!

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் அழகான பரிபாஷைகள் பழக்க வழக்கத்தில் பிரசாரமாயிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். ஒரு பெரியவரைப் பார்த்து "ஓய். உமக்கு எத்தனை வயசாயிற்று?" என்று கேட்பது அனுசிதம்; ஆகையால் பரிபாஷையில் "ஸ்வாமிக்கு எத்தனை திருநக்ஷத்திரம் ஆயிற்று" என்பது பரிபாஷை. "வாருங்கள்", அல்லது "வரவேண்டும்" என்பதற்கு, "ஏளா", அல்லது "ஏளணும்" என்பதுண்டு. நவஸ்காரம் செய்யும்போது "சேவிக்கிறேன்" என்பதும், உணவு இடும்போது "சாதிக்கலாமா" என்பதும் சம்பிரதாயம். தமிழ்நாட்டு ஆசாரத்தில் பெறுஞ்சோறு, சிறுசோறு என்று இரண்டுவகையுண்டு; பெறுஞ்சோறு என்றால் சாங்கோபாங்கமாக இலையைப் போட்டு, போஜனம் அளிப்பது; சிறுசோறு என்றால் தொன்னையில் கட்டுசாதம், சித்ரான்னம், பலகாரம் வகையரா கொடுப்பது. வெள்ளைக்காரர் டின்னர், லஞ்ச் என்றும், சப்பர், buffet என்றும் சொல்றுகிறார்களே அதுபோல — வைஷ்ணவ பரிபாஷையில் இத்தகைய விஷயத்தைப்பற்றி விசாரிக்கும்போது "என்ன ஸ்வாமி! உமக்கு மேலண்டைவீட்டிலே நேற்று விருந்துபோலேயிருக்கே. அலங்காரமா சாதித்தார்களோ, பிரஸாதமா சாதித்தார்களோ" என்பார்கள்! கலியாண சம்பவங்களிலே அனுஷ்டானக்காரர்களுக்குப் பூரிதக்ஷிணை கொடுக்கும் சமயத்தில் "அநந்தமா ஸ்வீகரித்துக்கொள்ளுங்கள் திருவுள்ளம்பத்தா, திருவுள்ளம்பத்தா, அநந்தமா ஸ்வீகரிக்கணும்" என்ற சப்தம் வந்துகொண்டிருக்கும். — இது ஒரு பரிபாஷை எச்சரிக்கை. அநந்தமா, அதாவது, திருப்தியாக, கொடுத்த தக்ஷிணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்—முணுமுணுக்கக்கூடாது. குறைவுன்னு சொல்லப்படாது திருவுள்ளம் பற்றவேண்டும், அதாவது நான் சொல்வதை கவனித்துக் கேட்கவேண்டும். இது கலியாணக் கூட்டம். உபசாரங்கள் ஏறத்தாழ இருக்கலாம்; தவறுதல்கள் ஏற

படலாம்—ஆனால் சகுனத்தடையாய் ஒரு வரும் ஒன்றும் சொல்லலாகாது. செய்யலாகாது. அநந்தமா ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும்! என்பது தாத்பரியம்—பரிபாஷையிலே சுருக்கமாகவும் அழகாகவும் எவ்வளவு விஷயங்களைச் சொல்லலாம்!

வயதிலோ அந்தஸ்திலோ சிறியவர்கள், பெரியோர்களிடத்தில் மன்னிப்புக் கேட்கும் போது, "திருவடியிலே அபசாரம் பண்ணி விட்டேன்" என்று போடுவது வைஷ்ணவ சம்பிரதாயம். அதுபோலவே, ஆசாரியாள், பண்டிதர்கள், தங்களை ஆச்ரயிக்கும் தாதாக்களைச் சிறிது கண்டித்துப் பேசவேண்டிய சந்தர்ப்பத்தில், பரிபாஷையில் "நன்றாகப் பார்க்கவேண்டும். அவசரப்படக்கூடாது" என்பதுண்டு. அதற்குத் தாத்பரியம் "நிதானமாக யோசித்துச் செய்யுங்காணும், ஓய், மடையரே, சுத்த அவசரக்குடுக்கையாக இருக்காதேயுங்காணும்" என்பதாம்! குளிப்பதற்கு, தீர்த்தமாடுவது என்றும், ரசத்துக்கு, "சாத்தமுது" என்றும் பரிபாஷை—சோற்றுக்கு அமுதாம்! திருக்கண்ணமுது என்றால் பாயஸம் சிறிய திருவடி யென்றால் ஆஞ்சனேயர்; பெரிய திருவடி என்றால் கருடன்; பெரிய உடையார் என்றால் ஜடாயு! இறந்துபோனவர்களைப்பற்றி கூறும் போது, "ஆசாரியன் திருவடி நிழலையடைந்தார்" என்று சொல்வதுண்டு. பரமபதம் அடைந்தார், அல்லது சிவலோகபிராப்தியடைந்தார் என்று சொல்லுவதில்லையா, அதுபோல்தான்.

கைத்தொழிலாளிகள் மத்தியில் பிரசாரமாயிருக்கப்பட்ட பரிபாஷைகளைத் தெரிந்து கொள்ளாமற்போனால், அவர்களோடு பழகுவதும் கஷ்டம், அவர்களிடத்தில் வேலை வாங்குவதும் கஷ்டம். தச்சர்களும், கொத்தனார்களும் கண்டிராக்டர்களுடனும் ஆர்கிடெக்ட்களுடனும் பழகுவதால், தற்காலத்தில் இங்கிலீஷில் சொன்னாலும் தெரிந்து கொள்ளுகிறார்கள் Expanded metal என்று இங்கிலீஷில் சொன்னால் தச்சமேஸ்திரி புரிந்துக்கொள்ளுவான். ஆனால் அதே பதத்தை அவன் திருப்பிச் சொல்லும்போது, "எஸ்பார்ட் மெண்டல்" என்ற பரிபாஷைதான் உபயோகிப்பான். நாம் அதை உணர்ந்து கொள்ளாமல் திகைத்தால், அவன் தலைமீது கையை வைத்துக்கொண்டு, "அடே, இதென்னையா, பெரிய தொல்லையாப் போச்சுது. சாமானுக்கு பெயர்கூட தெரியாத முதலாளியிடத்திலே வேலையை ஒப்புக்கிட்டேன்" என்று கத்துவான். "படபாதியா, கோத்து வாங்கிரதா" என்று திடீல் என்றுகேட்பான். எது என்று சொல்லத்தெரியாமல் Dovetail joint-ப்பா, என்று சொன்னால், "அதுதான் கேட்கிறேன். கோத்து வாங்கிரதுன்னு சொல்லுங்கள்" என்பான். எப்படிச்சொல்வது? தெரிந்தால்தானே!

கொத்தனார் "நீர்" வேணுமென்று கேட்டால், சுண்ணாம்பு கேட்கிறான் என்று உணர வேண்டும். "அஸ்திரி" போடலாமா என்று கேட்டுக்கொண்டுவருவான். அப்படியென்றால் வெள்ளையடிக்க முதல் coat என்று அர்த்தம். "புரத்திக்கிப்புரத்தி" என்கிற பரிபாஷைக்கு, ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு என்கிற தாத்பரியம். "பாட்டிலேயா நாட்டிலேயா" என்று கேட்பான். என்றால், கல்களை வைத்துக் கட்டுகிற சம்பிரதாயம், நீள வாட்டிலா, குறுக்கு வாட்டிலா என்பது. தலைக்கல்வரிசை யென்றால் தெரியுமா? சுவருக்கு மேல் வரிசையாக வைத்துக் கட்டும் கல் வரிசைக்குப் பெயர். பல்லும் பவுஷுமா சுவரை முடிக்கட்டுமா வென்று கேட்பான்—இது என்ன விபரீதக் கேள்வி என்று தோன்றும். பரிபாஷையில் Toothed Joint என்பதற்கு இந்த வசனம். கட்டட வேலை முடியாமல், மேற்கொண்டு கட்டவேண்டிய சுவரை, பல்லும் பவுஷுமாகத்தானே விட்டுவைக்க வேண்டும். பாந்து பூசுவது என்கிற பரிபாஷை, திராயிக்கு நடுவில் இருக்கப்பட்ட இடத்துக்குப் பூசுவேலை செய்வதற்கு உபயோகிப்பது. இப்படியெல்லாம் வசனங்களைத் தெரிந்து கொண்டால்தான் வீடுகட்டிப் பிழைக்கலாம்—அதாவது வீடு கட்டிமுடிக்கலாம். ஏனென்றால் வீடுகட்டிப் பிழைக்கிறவர்கள் அபுரூபம்தானே,

ரெவின்யூ இலாகா பரிபாஷைகள் முகலாய அதிகாரத்திலிருந்து வழங்கி வந்துகொண்டிருக்கின்றன. ஜமாபந்தி, கிஸ்து, Fasli, நமூனா, டலாயத், வகாலத், கஜானா, தர்காஸ்து, அர்ஜி, தஸ்தவேஜ், தர்பார், பக்ஷீஸ், இந்தவார்த்தைகளெல்லாம் சாதாரணமாக எல்லோருக்குந்தெரியும். தற்காலத்துப் பரிஸ்திதியில், நமூனாவும் பக்ஷீஸும் தெரிந்து கொள்ளாத ஆட்கள் நமது தேசத்தில் ஒருவர்கூடக் காணமாட்டார்கள்!

செட்டிப் பிள்ளைகளுடைய பரிபாஷையில், "வங்கி" என்றால் Bankக்கு அர்த்தம். Bill of Lading என்பதற்கு 'வில்லடி' என்பார்கள. செக்கு எழுதிக் கொடுப்பதற்கு, "செக்கு வெட்டுவது" என்கிற பரிபாஷை எப்படி வந்ததோ தெரியவில்லை. எந்தச் சந்தர்ப்பத்தி

லும், ஒரு செக்கில் கையெழுத்துப் போட்டுக் கிழித்துக் கொடுக்கும்போது வெட்டிக் கொண்டு போவது போலிருப்பதால்தானோ என்னவோ?

திருநெல்வேலி ஜில்லாவில் "சவாயி" என்றால் ரொம்பவும் சாதாரணமனிதன், பிரயோஜனமற்றவன் என்பது பரிபாஷை. சுபாவி என்கிற வார்த்தையிலிருந்து வந்த பதம். தஞ்சாவூர் ஜில்லாவில் அதே அபிப்பிராயத்தை "அத்திக்காய் வத்தல்" என்பதுண்டு. திருப்பந்துருத்தி உபசாரம் என்று கேள்விப்பட்டதுண்டோ? "நீங்களே ரொம்ப பெரியவாள். நான் ரொம்ப சாமானியன். என் வீட்டுக்கு நீங்கள் வந்ததே பெரிது. வந்தவர் சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டும் என்று சொல்லுவா. ஆனால் உங்களுக்கு ரொம்பவும் சௌகரியக் குறைவாயிருக்கும். நான் உங்களை வலுக்கட்டாயப்படுத்துவது நியாயமில்லை. உங்களுடைய சௌகர்யப்படி செய்யுங்கள்." இதுதான் திருப்பந்துருத்தி உபசாரம். "தென்காசி வழக்கு" என்கிற பரிபாஷை பரிச்சயம் உண்டோ? இரண்டு திறத்தாருக்கும் மத்தியஸ்தம் சொல்லி, சுலபமாக வழக்கைத் தீர்க்கும் முறை. "அவா சொல்றதும் ஒரு விஷயத்திலே சரி. நீங்க சொல்றதும் இன்னொரு விஷயத்திலே சரி. நியாயமோ உங்க பக்கத்திலே தானிருக்கு. ஆனாலும் ஒரே பிடியாய்ப் பிடிச்சுக்கிட்டு இருந்தா முடியுமா? ஏதோ கொஞ்சம் விட்டுக் கொடுத்துட்டு ஒரு வழியால் சமாதானத்துக்கு வந்துடுங்கோ" என்பதுதான்.

ஒரு இடத்திலே தங்கவந்தவர் அதைவிட்டுக் கிளம்பாமல் இருந்தால் அவரை, "திருவாலூர் தேர்" என்று சொல்வதுண்டு. கல்லுப்பிள்ளையார் என்றும் சொல்வது வழக்கம். சென்னைப்பட்டணத்தில் கம்பிளி என்பார்கள். அதிகப்பிரசங்கிக்கு "முந்திரிக்கொட்டை" என்று பரிபாஷை; குள்ளமாகவும் கட்டையாகவும் இருக்கும் ஒருவனுக்கு, "பருப்புதேங்காய்" என்பார்கள். துடுக்காகப் பேசுபவன் "பச்சைமிளகாய்" உட்கார்ந்த இடத்திலேயிருந்து எழுந்திராமல் சாதுவாக இருப்பவன் "பொட்டலம்" அல்லது 'புஸ்தகம்". அவனே கொஞ்சம் துஷ்ட எண்ணக்காரனாயிருந்தால் அமுக்குப்பூனை. அசந்தர்ப்ப ஆசாரக்காரன் ருத்ராக்ஷப்பூனை, அல்லது மடிசஞ்சி. சுத்த மண்டுவாக இருக்கப்பட்டவன் "இடிச்சபுளி" மித்திரபேதம் செய்து விபரீதச்சண்டை யுண்டாக்குவதற்குப் பரிபாஷை "அய்யம்பேட்டை". "தீர்த்தம் கும்பேஸ்வரர்" என்று கேட்டதுண்டா. அப்படியென்றால் தீர்த்தத்தில் அழுக்கு, நாற்றம் இரண்டும் இருப்பதாம்; "கும்பி" என்கிற வார்த்தையிலிருந்து வந்த பரிபாஷை. காவேரி தீர்த்தத்துக்கே இது முக்கியமாகச் சொல்வதுண்டு.

கெட்ட வார்த்தைகளை நல்லதனமாகச் சொல்லுவது பரிபாஷையினுடைய முக்கிய அம்சம். சுமங்கலி கழுத்திலிருந்து திருமங்கலியம் கீழேவிழுந்தால் அது "பெருகிற்று" என்பதாம்; அறுந்தது என்று சொல்லலாகாது. இறந்துபோனவர்களைத் தவறிப் போய்விட்டார்கள் என்பதும், காலமாய்விட்டார்கள் என்பதும், சுடுகாட்டுக்கு, "நன்காடு" என்பதும், கைகால் அலம்பினார், வயிற்றால் போச்சு, கொல்லையில் போயிருக்கார், என்பதும் பரிபாஷை வாக்குகள்தான்.

சென்னைப்பட்டணத்திலுள்ள பரிபாஷைகள் அநேகமுண்டு, அநேக விதமுமுண்டு. அவைகளைத் தெரிந்து கொண்டால்தான் நாடோடி சென்னை வாசியுடன் நன்றாகப் பழக முடியும். ஒரு முதலாளி, தன்னிடம் வேலை செய்யும் ஒரு கூலியாளை அநியாயமாகத் தண்டித்ததினமேல் அவனுடைய அங்கலாய்ப்பைக் கீழே குறிக்கிறேன். அதில் எத்தனை விதபரிபாஷைகள் உண்டு என்று கவனிக்கவும்:

'அடே என்ன ஸார், சும்மா எகிர்றீங்களே! ஏழைப்பட்டவன் ஒத்தன் மாட்டிக்கினா, வவுத்திலே அடிககரதான்னு வெச்சிக்கிட்டீங்களே. எவ்வளவு ஆனாலும் முதுகிலே அடியுங்க ஸார், வவுத்திலே மாத்திரம் அடிக்காதிங்க. பேசரது மாத்திரம் படா குன்ஸா பேசரீங்க, கையைவெச்சு வவுத்திலே வெக்கறீங்க! காலேலே இருட்டோட எழுந்து நான் நீசதண்ணி குடிச்சுட்டு டூடிக்கு வந்திருக்கேன். எம்மேலே இப்படிப் பாயரீங்களே! ஆ, ஊன்னா எங்கப்பன் பேரை எடுக்கரீங்க. அந்தப்பாவி கொட்டாவிவிட்டு மூனுவருஷமாச்சு. நேத்தி ராத்திரி ஊட்டுக்குப்போனா என்பொண்ஜாதிவாயைப்பொளக்கரத்துக்கு தயாராயிருக்கா. இவ்வளவு கஸ்டத்திலே நான் வந்திருக்கேன். நீங்க என்னடான்னா, அந்த குமாஸ்தா பிஸ்கோத்து வாயன் பேச்சையே நம்பரீங்க. இன்னும் குத்திக்குடுக்க அந்த டிரைவர் ஒத்தன் நிக்கறான். நல்ல மனிபர்ஸ் வாயை வெச்சுக்கிட்டு—வெளியே வரட்டும் அவுங்க ரெண்டுபேரும், கேட்டாண்டேயே அபேஸ் பண்ணிடரேன். பகில்லே ரெண்டு ஏத்து ஏத்தினா அவங்க சதாசிவம் கலங்கிப்பூடாதா. பெரிய ஓட்டக்கப்பல் தொரை மாதிரி சொக்கா போட்டுட்டாமாத்திரம் அந்தடிரைவர் பெரிய மனுசனாய்ட்டானா ஸார், அவன் வீட்டுத் தோட்டத்திலேயா அரிச்சந்திரன் குடிசை போட்டிண்டுருக்கான் என்னா ஸார், அக்குறும்பு?

(ராகமாலிகை தொடர்ச்சி)

ஸ்ரீ ஸ்துதி

ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

श्रेयस्कामाः कमलनिलये चित्रमाम्नायवाचां
चूडापीडं तव पदयुगं चेतसा धारयन्तः ।
...त्रच्छायासुभगशिरसश्चामरस्मेरपार्श्वाः
...शब्दश्रवणमुदिताः स्रग्विणः सञ्चरन्ति ॥

ச்ரேயஸ்காமா: கமலநிலயே சித்ரமாம்நாய வாசாம்
சூடா பீடம் தவ பதயுகம் சேதஸா தாரயந்த: |
சத்ரச்சாயா ஸு்பகசிரஸ: சாமரஸ்மேர பார்ச்வா:
ச்லாகா சப்தச்ரவணமுதிதா: ஸ்ரக்விணஸ்ஸஞ்சரந்தி || (17)

ஆதி 2 கலை

லகு

...நீ ·ரி ·ரி ஸ் ஸ் நீ பா நீ பா
மா
... ; ரீ பா பா ப ம ம க கா
ம் நா
... நி ஸா, நி ஸ் ·ரீ ஸ் ஸர் ;
டம்
...ர் ·ரி ஸ் நி ஸ் பா ;

த்ருதம்

; மா பா ; பா ; ப ஸ் நி நி
க ம ல
; கா மா ; தா ; நீ பா
ய
; ஸ் நி ·ரி ; ஸா ; ஸர் ;
த வ ப த
; பா மா பா ப ஸ் நி நி பா ;
தா ர

த்ருதம்

பா ; மா பா ப ப ம ம கா ;
நி ல யே
மா பா ப ஸ் நி நி நீ பா ; ;
வா சாம்
ஸா, ·ரி க் ·ரீ ஸ் ஸ் நி நீ பா ;
யு கம்
மா ப த நி த ப ம கா, ம ரி க
ய ந்த

மத்யம கால நடை

...மா பா மா
... ஸ்
... ;

தா ; நீ பா ; நீ கா மா
சா ம ர ஸ்மே
கா மா தா, நி ஸர், ரி நீ ஸர்
ஸ்ர க்வி ண

தா நீ ஸா நீ ·ரீ ஸர் பா ;
ர பா ர்ச்வா
; ப நி பா மா கா மா தா நீ
ஸ ஞ்ச ர ந்தி

ஸ்வர ஜதி

கா ; ; கா ; மா ரீ ஸா
கா தாம் த தி ன
கா கா ; மா ரீ ஸா நீ ;
கா கா மா ரீ ஸா நீ

ரீ நீ ஸா ; ரீ ; கா மா
ரீ நீ ஸா ரீ தி மி
தா பா மா கா ; மா தா
தா பா த தி கிணதெ

ஊரீகர்த்தும் குசலமகிலம் ஜேதுமாதி நராதீந்
தூரீகர்த்தும் துரிதநிவஹம் த்யக்து மாத்யாம் அவித்யாம் |
அம்ப ஸ்தம்பா வதிக ஜநக க்ராம ஸீமாந்தரேகாம்
ஆலம்பந்தே விமல மனஸோ விஷ்ணுகாந்தே தயாம்தே ‖ (

ஆதி

நி த ·ரீ ஸ் ஸா ;
ர்த்தும்
ஸா ;

மா த ப மா கா, ம ரி கா,
ர்த்தும்
ரீ க்ா ப் ம்ா ப் க் ·ரீ, ஸா;
த்யா

த்ருதம்

; மா பா தா, ·ரி ஸ் நீ, தா பா
கு ச ல
; ஸா கா ரீ கா ; மா
ந ரா
ம பா ம ப தா ப ஸா, நி தா பா
து ரி த
; தா ·ரீ ; ஸா ; ; பா
ம வி

த்ருதம்

மா, த ப ம கா, ம ரி கா,
ம கி லம்
பா, ம மா தா த ப ப ம பா
தீன்
பா ; த ப ஸ் நி தா ·ரீ ·ரி ஸ்
நி வ ஹம்
·ரி நீ, த ப ம ப க ரீ, ஸா ;
த்யாம்

மத்யம கால நடை

கா மா மா மா, த மா கா ரீ ஸா
பா வ தி க ஜ ந ந
தா பா ; மா பா ; த ப ஸ் நி த ·ரி ஸ்ா
ந்தே . வி ம ல ம . ந . ஸோ

மா கா மா பா தா பா ஸ்ா நீ
க் ரா ம ஸீ மா
; தா ; ·ரீ, க் ·ரி ஸ் நீ தா பா
வி ஷ்ணு கா ந்தே

தா பா ஸ்ா நீ தா ·ரீ ஸ்ா ;
ந்த ரே காம்
மா பா கா மா ரீ கா மா பா
த யா ம்தே . .

ஸ்வர ஜதி

; ; நீ ; தா பா ; மா ; பா கா ரீ
நீ தா பா தாம் த ஜ ணு
கா ; மா பா தா பா ; ; ஸ்ா நீ தா பா ·ரீ
தாம் த த த ஜம் ஸா நீ தா பா ரீ

ஸா ; ; ; ; ; நீ கா
தாம் நீ கா
ஸா ; ; கா மா பா கா ரீ
ஸா த த க தி ன

ரீ மா கா பா மா தா பா ·ரீ
ரீ மா கா பா மா தா பா ரீ
ஸா ; ; தா பா மா பா ·ரீ
தாம் த தி கி ணதொம்

(தொட...

" இந்த இராகமாலிகை இசையிலும் தாளத்திலும் மிகவும் பாராட்டக்கூடிய வகையில் சிறந்த யோக்யதாம்சங்களுட... பட்டு வித்வான்களும் வித்யார்த்திகளும் கையாண்டு ஸ்ரீ லக்ஷ்மியின் கிருபையை பெறக்கூடியதாயிருக்கிறது."

ஸங்கீத ரத்நாகர அரிய...



கோபு: டேய் கிட்டு! மானேஜர் என்னத்திற்கடா கோபித்துக்கொண்டார்?

கிட்டு: நான் கொடுத்த 'ஸ்டேட்மெண்ட்'டிலே தப்பிருந்ததடா, அதற்குத்தான். என்னைத் தூங்குமூஞ்சி என்றுகூட சொன்னார். தூக்கம் என்னையறியாமலேயே வந்துவிடுகிறது. என்ன செய்கிறது என்றுதான் தெரியவில்லை.

கோபு: அட அப்பாவி! இதுவா பிரமாதம். நீதான் பார்த்துக்கொண்டு வருகிறாயே. சரியாக மூன்று மணிக்கு நான் 'டீ' சாப்பிடுவது வழக்கமாச்சே. அதுதான் என் சோம்பலைப்போக்கி, சுறுசுறுப்புடன் வேலை செய்ய உதவுகிறது. நீயும்தான் நாளையிலிருந்து 'டீ' சாப்பிட்டுப்பாரு. எல்லாம் சரியாகிவிடும்.

டீ

'டீ' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்சாகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும், சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசியபானம். ஒரு கோப்பை 'டீ' சாப்பிட்டுப்பாருங்கள் அப்பொழுதே அதன் குண விசேஷங்களை உணர்வீர்கள்.

'ஸெண்ட்ரல் டீ போர்டா'ரால் வெளியிடப்பட்டது

CTB 40

The Cauveri Colour Press, Kumbakonam.